
கல்கி

— மணிரத்னம்
சிறப்புப் பேட்டி

KALKI
6.9.98
ரூ. 4.50



உங்கள் குழந்தை சுறுசுறுப்புடன் இருக்க சமச்சீரான போஷாக்கு மிகவும் அவசியமானதாகும்.

சுறுசுறுப்புடனும், துடிப்புடனும் விளங்க உதவும் சக்தியை பெற உங்கள் குழந்தைக்குத் தேவை 'சரியான' கலோரிகள். **புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புச்** சத்துக்களின் பொருத்தமான சமச்சீர் அளவில் இருந்து மட்டுமே இந்த கலோரிகள் கிடைக்கின்றன.

இந்த 'சரியான' கலோரிகளை பெற உதவும் மிகச் சிறந்த வழி **போஷாக்கு நிறைந்த சமச்சீர் உணவு ஆகும்.**

உங்கள் மருத்துவரையே கேட்டுப்பாருங்கள். **4 மாதங்களுக்குப் பிறகு** உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மட்டும் போதாது என்பதை அவர் சொல்வார். எனவே உங்கள் குழந்தைக்கு இப்போது தேவை, போஷாக்கு நிறைந்த சமச்சீரான திட ஆகாரம். தினந்தோறும்... வாரமும் தோறும்...

ஆகவேதான் தாய்மார்கள் **செரிலாக்கை** பெரிதும் நம்புகிறார்கள். போஷாக்கு நிறைந்த சமச்சீரான திட ஆகாரமான செரிலாக்கில் பாலும் கோதுமையும் உள்ளது-புரோட்டீன் சத்தின் செழுமையான இரு ஆதாரங்கள். செரிலாக்கில் கொழுப்புச் சத்துக்கள், கார்போஹைட்ரேட்டுகள், இரும்புச் சத்து மற்றும் கால்ஷியம் ஆகியவை சரியான அளவில் உள்ளன. மேலும் இது விட்டமின்கள் A, D, E, C மற்றும் B-காம்ப்ளக்ஸ்-ஆல் செறிவூட்டப்பட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, செரிலாக் நெஸ்லேயின் புரட்சிகரமான **Z-லைன் என்ஸைமேட்டிக் டெக்னிக்கால்** தயாரிக்கப்படுகிறது. இச் செய்முறையால் தானியமானது ப்ரீ-டைஜஸ்ட் செய்யப்பட்டு விடுகிறது. ஆகவே குழந்தை செரிலாக்கை வெகு எளிதாக ஜீரணித்து விடும். மேலும் செரிலாக், மென்மையானது, சுவை மிகுந்தது.

எனவே 4 மாதங்களுக்குப்பிறகு உங்கள் குழந்தைக்கு செரிலாக் அளியுங்கள். ஏனெனில் இதிலுள்ளது 'சரியான' கலோரிகள். இது போஷாக்கு நிறைந்த சமச்சீரான திட உணவாக இருப்பதால் உங்கள் குழந்தை சுறுசுறுப்புடனும், துடிப்புடனும் விளங்கும்.



4
மாதங்களுக்கு
பிறகு



இலவசம், செரிலாக் பேபி கேர் புக்.
உங்கள் குழந்தையின் வயது/பிறக்கக் கூடிய தேதி, உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களை இம்முகவரிக்கு எழுதவும்:
Cerelac (MI), Post Bag No. 21, New Delhi-110 029.

உங்கள் குழந்தைக்கு செரிலாக் அனுகூலத்தை அளியுங்கள்.

Mudra NES 1283 Tam

IMPORTANT NOTICE: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.

महत्वपूर्ण सूचना: माँ का दूध आपके शिशु के लिए सर्वोत्तम है। ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें।



அமரர் கல்கி நூற்றாண்டுத் துவக்க விழா

செப்டெம்பர் 9, 1998

ஜி.கே. மூப்பனார் தலைமையிலான கல்கி கிருஷ்ணமூர்த்தி நூற்றாண்டுக் குழு உங்களை அன்புடன் அழைக்கிறது

வரவேற்புரை: சாவி

சிறப்புரை: சிவசங்கரி

தலைமையுரை: ஜி.கே. மூப்பனார்

அமரர் கல்கி நினைவாக இளம் இசைக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதைப் பெறுவோர்:

லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன்
லால்குடி விஜயலக்ஷ்மி

துவக்க விழாவைத் தொடர்ந்து இன்னிசை நிகழ்ச்சி:

லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன்
லால்குடி விஜயலக்ஷ்மி
– இருவயலின் இசை
திருவாரூர் பக்தவத்சலம் – மிருதங்கம்
டி.எச். விநாயகராம் – கடம்
வி. நாகராஜன் – கஞ்சிரா

இடம்: பாரதிய வித்யா பவன் அரங்கம்,
கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர்,
சென்னை – 600 004.

நேரம்: மாலை 6.00 மணி


கல்கி வாசகர்களும் அமரர் கல்கி ரசிகர்களும் பெருந்திரளாக வந்திருந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஃபெவிகால் "ஒட்டுதல்"

கையை வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கொண்டு, உதட்டில் புன்னகையை ஒட்டிக் கொண்டு, அரசியல்வாதிகள் கோரஸாக ஒற்றுமையை நிலை நாட்டுவதை வி.பி. சிங் பிரதமராயிருந்த காலத்திலிருந்தே பார்த்துப் பார்த்துப் பழகி விட்டதால், "செண்டாரில் பி.ஜெ.பி - சிவசேனைக்காரர்கள் கைகோத்துப், புன்னகைத்து, தங்கள் ஒற்றுமையைப் பிரகடனப்படுத்தியபோது, பெரிசாக ஒன்றும் பரவசம் ஏற்பட்டுவிடவில்லை! ஆனால் இம்முறை 'சிரிப்பை' ஒட்டுவதற்கு எக்கச்சக்கமாக ஃபெவிகால் தேவைப்பட்டதாம்! வீட்டு வசதித் துறை அமைச்சர் சுரேஷ் ஜெயின், பி.ஜே.பிக்காரரான கிரீட் சோமையா மன்னிப்புக் கேட்டே தீர வேண்டும் எனப் பிடிவாதம் பிடித்தாராம். சோமையாவோ ராஜ்தாக்கரேவுக்கு நெருங்கியவர்; ராஜ் தாக்கரேயோ சுரேஷ் ஜெயினுக்கு வேண்டாதவர்; அதனால் சோமையா கண்டு கொள்ளாமலிருக்க, சுரேஷ் ஜெயின் ராஜினாமா செய்வதாக அறிவித்ததும், அலறி அடித்துக் கொண்டு பால் தாக்கரேவே "எல்லோருக்குமாகச் சேர்த்து நானே மன்னிப்புக் கேட்கிறேன்" என்று நிலைமையைச் சரிக்கட்டியிருக்கிறார். பி.ஜெ.பி காரர்களின் அத்தனை டிமாண்டுகளுக்கும் விட்டுக் கொடுத்திருக்கிறார். 'அம்மா'வாலேயே ஒன்றும் செய்ய முடியாதவர்களை சும்மா பகைப்பது வீண் என்ற விவேகமா? அல்லது, 'வேரோடு சாய்வதைக் காட்டிலும் வளைந்து கொடுப்பதே மேல்" என்ற ஞானோதயமா?

ஹுசைன் வழியில்...

வீடியோ பைரஸியை எதிர்த்து பாலிவுட்காரர்கள் நடத்திய போராட்டத்தில், சுனில் ஷெட்டி, அமீர்கான், மாதுரி திக்ஷித் தவிர ஏனைய பிரபலங்கள் கலந்து கொள்ளவில்லை என்பது பெரிய குறைதான்! ஆனால் இந்தக் குறையைப் 'ப்பூ...' என்று ஊதித் தள்ளி விட்டது முதல்வர் ஜோஷியின் செயல்! மந்திராலயா சென்று முதல்வரிடம் தங்கள் குறைகளை முறையிட்டது மாதுரி திக்ஷித் அண்ட் கோ. மீட்டிங் முடிந்ததும், ஜோஷி, மாதுரியை, மந்திராலயாவின் கீழ்த் தள வாயில் வரை சென்று வழியனுப்பியிருக்கிறார். ஒரு முதல்வர், அரசு விருந்தினரை மட்டுமே, அதுவும் தமக்கு நிகரான அல்லது உயர்வான பதவியில் இருப்பவரை மட்டுமே, நேரில் சென்று வரவேற்கவோ வழியனுப்பவோ வேண்டுமென்பது அவருக்குத் தெரியாதா? எத்தனையோ அரசியல் பூகம்பங்களை எதிர்கொண்டு, நாற்காலியில் ஸ்திரமாக அமர்ந்திருந்தவர், ஒரு மாதுரி திக்ஷித்துக்காக நாற்காலியை விட்டு எழுந்து விட்டாரே! என்னே மாதுரி மகிமை...!



இறுதி யாத்திரை!

சாதாரணமாக, டாக்டர்கள் தங்கள் பேஷண்டுகளை மேலுலகம் அனுப்பி வைக்கும் ஜோக்குகளுக்குச் சிரித்திருக்கிறோம். ஆனால், தங்கள் டாக்டர்கள் மோட்சத்தை அடைந்தமையால் கண்ணீர் விட்டுக் கதறும் பேஷண்டுகளை முதன் முதலாக மும்பை, குறிப்பாக முலுண்டு பார்த்து வருந்தியது! கைலாஷ் - மானசரோவர் யாத்திரையில், சாபம் பெற்ற 12வது பாட்ச்சில் இருந்த பயணிகளில், கொத்தாக முலுண்டு டாக்டர்கள்! - ஒரு



கார்டியாலஜிஸ்ட், ஒரு டென் டிஸ்ட், ஒரு கைனகாலஜிஸ்ட், ஒரு பிஸிஷியன் கணவன் மனைவி ஜோடி என்று, மாதிரி மருத்துவத் துறையே இருந்திருக்கிறது! எல் லோருமே 40–50 வயதுக்குட் பட்டவர்கள் என்பது பெரிய சோகம்; தம் மனைவி தடுத்தும் கேளாமல், 'இறைவனை தரிசிக்கப் போகிறேன்' என கிளம்பியிருக் கிறார் கார்டியாலஜிஸ்ட். மான சரோவர் யாத்திரையில் ஒவ் வொரு பாட்ச்சிலும் ஒரு டாக் டரை அரசே நியமிக்குமாம்! இங்கே ஐந்து டாக்டர்கள் இருந்த போதும், அவர்களையே காப் பாற்ற முடியாமல் போனது, அவலத்தின் உச்சம்!

பட்ட காலிலேயே...

பக்கத்தில் ஒரு பக்கெட்டை வைத்துக் கொண்டு (கண்ணீர் கலெக்ஷனுக்குத்தான்) படிக்க வேண்டிய விஷயமிது! 13 வயது சுனிலை, லேடீஸ் கம்பார்ட் மென்டிலிருந்து துரத்தியபோது, ட்ரெயினுக்கும் ப்ளாட்பாரத்துக்கு மிடையே சிக்கினான்; பகவதி

மாதுரிக்கு என்ன அத்தனை மரியாதை?

ஹாஸ்பிடலில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டு, 11 பாட் டில்கள் இரத்தம் செலுத்தப்பட்டு, சில பல ஆபரேஷன்களுக்குப் பிறகு இரண்டு கால்களையும் இழந்தான். பிறகு நாயர் ஹாஸ்பிடலுக்கு மாற்றப்பட்டு, அங்கேயும் ஒரு பாட்டில் இரத்தம் செலுத்தப்பட்டு, இன்னும் கொஞ்சம் காலை இழந்திருக்கிறான். டாக்டர்கள் திடீரென்று நினைத்துக் கொண்டு அவன் இரத்தத்தைப் பரி சோதித்தால்... ஹெச்.ஐ.வி. பாஸிடிவ். இதுவரை 20,000 ரூபாயைக் கடன் உடன் பட்டு செலவழித்திருக் கும் தந்தை குப்தா ஒரு நடைபாதை வியாபாரி! முனிசிபாலிடி விரட்டிய தால் இப்போது வியாபார முமில்லை! இன்னும் நாலு குழந்தைகள் வேறு. வழங் கப்பட்டிருக்கும் இரத்த மெல்லாம் பரிசுத்த மானது 'என்கிறார்கள்... மேயர் நந்து சதாம் உதவு வதாக வாக்குறுதியளித் திருக்கிறார்... என்கொயரி நடக்கிறது... ஆனாலும் சுனிலின் எதிர்காலம்?

சபாஷ் கான்!

கேன்சர் பேஷண்ட் டான 13 வயது யாஸ்மின் சாட்வாலுக்கு, "bone-marrow" தேவை என்ற விளம் பரம் வந்தது! விழுந் தடித்துக் கொண்டு உதவ முன் வந்தவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? சல்மான்கான், அவர் தம்பி அர்பாஸ்கான், சக்தி கபூர் ஆகிய நட்சத்திரங்கள். ஆனால் அவர்கள் இரத் தம் யாஸ்மினுடையதுடன் சேரவில்லை என்று திருப்பி அனுப்பி விட் டார்கள்; பரவாயில்லை... வீடியோ பைரஸி எதிர்ப்பு ஊர்வலத்தில் சும்மா தலை காட்டிவிட்டு ஓடியதை மன்னிப்போம்! ஒருவேளை அப்போது இது போன்ற சமூகசேவைக்கென்றுதான் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தார்களோ என்னவோ! ●

— ஜெயஸ்ரீ ராஜ்

அமெரிக்க அரசைக
கலக்கும்

ஒஸாமா பின் லேடன்!

இன்று உலகம் முழுவதும் உள்ள அச்சு மீடியாவிலும், செய்தித் தொலைக்காட்சிகளிலும் மோனிகா லெவென்ஸ்கியை பின்னுக்குத் தள்ளிவிட்டு அடிபட்டுக் கொண்டிருக்கும் பெயர்!

அமெரிக்க அரசை கலக்கிக் கொண்டிருக்கிறார் இந்த 40 வயது சவுதி அரேபிய நாட்டுக்காரர். நுண்புலம் மிக்க சி.ஐ.ஏ. மற்றும் எப்.பி.ஐயின் துப்பறியும் கில்லாடிகள் லேடன் எங்கிருக்கிறார் என்பதை ஸாட்டிலைட் மூலம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் கென்யாவிலும், டான்ஸானியாவிலும் அமெரிக்க தூதரகங்கள் தகர்க்கப்பட்டதற்கு மூலகாரணமாக இருந்தது லேடனும், அவரது அல்-கொய்டா அமைப்பும்தான். உலகம் முழுவதும் சுமார் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் தமது ஆக்டோபஸ் கால்களை பரப்பிக் கொண்டிருக்கிறது பயங்கரவாத + முஸ்லீம் அடிப்படைவாத அமைப்பான அல்கொய்டா. லேடன் தலைமையில் உள்ள இந்த அமைப்பினருக்கு போதிக்கப்பட்டுள்ள பால பாடம் : "அமெரிக்காவையும், அமெரிக்கர்களையும் சிதைத்து ஒழித்தால் அல்லாவின் பேரருளைப் பெறலாம்!"

எனவே கிளின்டன் அரசு விடாமல் அவர்களைத் துரத்திக் கொண்டிருப்பதில் ஆச்சர்யமில்லை. மோனிகா விவகாரத்தில் தமக்கு ஏற்பட்ட சரிவைச் சரிசெய்து கொள்ளத்தான் கிளின்டன் ஆப்கானிஸ்தானிலும், சூடானிலும் உள்ள லேடனின் முகாம்களின் மீது தாக்குதல் நடத்தினார் என்று பேச்சு பரவலாக இருந்தாலும், சர்வதேச பயங்கரவாதத்திற்கு உரம் போட்டு வளர்த்து வரும் லேடனையும், அவரது 'பயங்கர' சிஷ்யர்களையும் ஒழிப்பதற்கு கிளின்டன் எடுத்த நடவடிக்கை சரியே என்கிற ஒரு கருத்தும் வலுப் பெற்று வருகிறது.

யேமென் நாட்டிலிருந்து சௌதி அரேபியாவுக்குக் குடியேறி, அங்குள்ள அரச பரம்பரையின் அபிமானத்தைப் பெற்றதால் கோடீஸ்வரராக உயர்ந்த ஒருவரின் மகன்தான் லேடன். பல மனைவிகள், பல குழந்தைச் செல்வம் என்றிருந்தாலும் "லேடன்தான் என் சரியான வாரிசு!" என்று அவர் குறிப்பிடும் அளவுக்கு இவர் அறிவாளியாக விளங்கினார். பிரிட்டனில் என்ஜினியரிங் படிப்பை முடித்த கையோடு பல அதிரடி சாகஸங்களில் ஈடுபட்டார். தாம் படித்த பொறியியல் கல்வியை வீணாக்காமல் (!) சக்தி மிகுந்த வெடி குண்டுகளைத் தயாரிப்பதிலும், இணைத்துச் செயல்பட வைப்பதிலும் ஈடுபட்டார் பின்லேடன்.

அந்த நாட்களில், ஒன்றுபட்ட ரஷ்யா, தனது பொம்மை அரசை ஆப்கானிஸ்தானில் நிறுவ முயன்றபோது, ஆப்கானிஸ்தானில் கொதித்தெழுந்த இஸ்லாமிய அடிப்படை வாத விடுதலை இயக்கங்களுக்கு நிதி கொடுத்தது மட்டுமல்லாமல், தாமே அந்த நாட்டின் மலைச் சரிவுகளில் ஓடியாடி ரஷ்யப் படைகளை எதிர்த்திருக்கிறார் லேடன். அப்போது, லேடனுக்கும் அமெரிக்க அரசுக்கும் நல்ல உறவு. ஏனென்றால் கம்யூனிஸ்ட் ரஷ்யாவை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தாரே!

சிதைந்த ரஷ்யா ஆப்கானிஸ்தானை காலி செய்து விட, காலப் போக்கில் 'தாலிபன்' படைகளின் ஆதிக்கத்தில் ஆப்கானிஸ்தான் வந்தது. தாலிபன் படைகளின் God Father போல உருவானார் லேடன். இடையில் அமெரிக்க - ஈராக் போர் தான் லேடனை அமெரிக்காவுக்கு எதிராகத் திருப்பி விட்டது. குறிப்பாக சவுதி அரேபியா, தமது நாட்டை அமெரிக்கர்களின் ராணுவத் தளமாக மாற்றிக் கொடுத்தது லேடனின் எரிச்சலைத் தூண்டியது. ஓர் இஸ்லாமிய நாட்டின் மீது போர் தொடுக்க இன்னொரு இஸ்லாமிய நாட்டைப் பயன்படுத்திக் கொள்வதா? தமது நாட்டின் புண்ணியத் தலங்களில் 'நீசர்'களான அமெரிக்கர்களின் காலடி படுவதா? இஸ்ரேலின் பாதுகாவலர்களான அமெரிக்கர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இஸ்லாமியர்கள் பலியாவதா? என்று லேடன் கேள்விகளை எழுப்பினார்.

"சவுதி அரேபியாவில் உள்ள அத்தனை அமெரிக்கர்களும் உடனடியாக அந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும். இல்லை என்றால் மரணம் தான்" என்று கூறியதோடு நிற்காமல் ஆங்காங்கே அமெரிக்கர்களை இவர் வேட்டையாடவும் செய்யவே, அமெரிக்க அரசு கொதித்தெழுந்தது. அதன் கட்டாயத்திற்குப் பணிந்து லேடனின் குடியுரிமையை சவுதி அரேபிய அரசு ரத்து செய்தது. உடனே சூடான் நாட்டுக்குக் குடிபெயர்ந்தார் அவர். அந்த அரசையும் அமெரிக்கா நிர்பந்தம் செய்ய, அங்கேயும் தொடர்ந்து இயங்க முடியாத நிலை. அதனால் ஆப்கானிஸ்தான் வந்து நிரந்தரமாகச் செட்டிலானார். பழிவாங்கும் படலம் துவங்கியது; அல்-கொய்டா உருவானது.

நியூயார்க்கில் உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டது. சவுதியில் அமெரிக்கர்கள் தங்கியிருந்த கட்டடம் சிதைக்கப்பட்டது; 19 அமெரிக்கர்கள் மரணம் அடைந்தார்கள். இஸ்லாமியராக இருந்தாலும் காலத்திற்கேற்ப தெளிவு கனிவுகளோடு செயல்பட்ட

எகிப்து அதிபர் முபாரக்கையும் கொலை செய்ய முயன்றது லேடனின் அமைப்பு! போப் ஜான் பால், கிளின்டன் ஆகியோர் கொலைப் பட்டியலில் இருக்கிறார்கள். தம்மை மீடியாக்காரர்கள் படமெடுக்க அனுமதி கொடுத்தாலும் லேடன் யாருக்கும் பேட்டி கொடுப்பதில்லை. இவருக்கு மூன்று மனைவிகள்!

"நாங்கள் கடவுளின் புதல்வர்கள். கிளின்டனின் கூலிப் படைகள் எங்களை எதுவும் செய்து விட முடியாது. சூடானில் மலேரியா எதிர்ப்பு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை மீது ஏவுகணைத் தாக்குதல் நடந்திருக்கிறது. இதற்குத் தக்க பதிலடி கொடுக்காமல் விடமாட்டோம்"

லேடன்!



என்று சொல்லியிருக்கிறார் லேடன். "அது மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அல்ல! ரசாயன ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை!" என்கிறது அமெரிக்கா!

லேடன் ஆட்கள் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் சதிச் செயல்களில் ஈடுபடலாம் என்பதால் அமெரிக்கா மிக்க விழிப்புடன் இருக்கிறது. அமெரிக்க அரசின் பாதுகாப்பு ஆலோசகர் சான்டி பெர்ஜர், "ஒரு நீண்ட போர் துவங்கியிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்! இதில் எத்தனை அப்பாவிகள் உயிரை இழக்கப் போகிறார்களோ!

— ப்ரியன், ஜிஎஸ்.எஸ்.

படம்-நன்றி: நியூஸ்வீக்

காதில் விழுந்தவை!

வை.கோவின் கவலையும்

● சமீபத்தில் விமான நிலையத்துக்குச் சென்றபோது நமது தகவல் குருவி ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. "தமிழ்நாடு அரசின் ஊழியர்கள் மாற்றல் விவகாரங்களில் பணம் விளையாடுவதைப் பற்றி எழுதியிருந்தீர்கள். விமான நிலைய கஸ்டம்ஸ் துறையில் அதைவிட மோசமாக இருக்கிறது" என்றார் அந்தக் குருவி.

ஏர்போர்ட்டில் உள்ள உதவிக் கமிஷனர், கண்காணிப்பாளர், ஆய்வாளர்கள் பதவிக்கு ஆட்களை நியமிப்பதற்கு 'ரேட்' நிர்ணயித்து விட்டார்களாம். "மத்திய அரசுடன் மோதல், ஆதரவு வாபஸ்" என்றெல்லாம் ஒரு பக்கம் அரசியல் விளையாட்டு நடந்து கொண்டிருந்தாலும் மற்றொரு பக்கத்தில் 'வசூல்' விவகாரங்கள் தொய்வில்லாமல் நடக்கிறதாம். பழைய அமைச்சரும், இப்போது அம்மாவின் அன்புக்குப் பாத்திரமானவராக இருப்பவருமான அந்த ஈரோட்டுக்காரர்தான் அ.தி.மு.க அமைச்சர்களோடு 'இணைந்து' செயல்பட்டு 'வசூல் வேட்டை' நடத்திக் கொண்டிருக்கிறாராம். "விமான நிலைய கஸ்டம்ஸ் போன்ற இடங்களில் முக்கிய பொறுப்புக்கு தங்களது ஆட்களை நியமிக்க வேறொரு காரணமும் இருக்கிறது. 'பொற்கால' ஆட்சியில் சம்பாதித்த கோடிக்கணக்கான பணம் வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிற நிலையில், அது சம்பந்தமாக வெளிநாடு சென்று வரும் உ.பி.சவினுடைய சொந்த பந்தங்கள் எந்த கஸ்டம்ஸ் சோதனையிலும் சிக்காமல் 'கிரீன் சேனலில்' சுலபமாக வெளிவர அவர்கள் உதவியாக இருப்பார்களே!" என்றார் நமது தகவல் குருவி.



● வாரத்தில் மூன்று நாட்கள் மட்டன், ஒருநாள் சிக்கன்; மூன்று நாட்கள் காய்கறிகள்; மாதத்திற்கொரு முறை மளிகை சாமான்! மத்திய சென்னையில் குறிப்பிட்ட வட்டத்தில் வேலை பார்க்கும் மாநகராட்சி ஊழியர்கள் தங்கள் வீட்டிற்கு வாங்குகிறார்களோ இல்லையோ அந்தப் பிரமுகரின் வீட்டிற்கு மேற்கண்டபடி வாங்கிக் கொடுக்க வேண்டும். மேயருக்குக் கீழே பணிபுரியும் அந்தப் பிரமுகர் தமது சப்ளை லைன் கட்டானால் பத்ரகாளியாக மாறி விடுவாராம். இளநிலைப் பொறியாளர் ஒருவர் அவரது கோபத்தில் சிக்கி, பொய்க் குற்றச்சாட்டுக்கள் பேரில் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார் என்கிறார்கள். ஊழியர்கள் வட்டாரம் சிடுசிடுத்துக் கொண்டிருக்கிறது. சிங்காரச் சென்னையின் தந்தை கொஞ்சம் 'கண்டு' கொள்ள வேண்டும்.

● தமிழக மக்களுக்கு 'விழிப்புணர்வு' உண்டாக்குவதற்காக கன்னியாகுமரியில் இருந்து நடைப் பயணம் மேற்கொள்ளப் போவதாக (சசிகலா) நடராஜன் அறிவித்துள்ளது போயஸ் தோட்டத்தில் கடுகடுப்பைக் கிளப்பியுள்ளது. 'எல்லா மாவட்டங்களிலும் உள்ள அ.தி.மு.க பிரமுகர்களுக்கு 'நடராஜனுக்கு வரவேற்பு எதுவும் அளிக்கக் கூடாது. எந்த உதவியும் செய்யக் கூடாது' என்ற எச்சரிக்கையும்

பறந்துள்ளது. இதற்கிடையில் சு.சுவாமியை சங்கடப்படுத்தும் விதமாக ஜெயின் கமிஷனில் சாட்சி சொன்ன திருச்சி வேலுச்சாமி, நடராஜனின் தூண்டுதலின் பேரில்தான் பேட்டிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று அம்மாவிடம் புலம்பியிருக்கிறாராம் சுவாமி. "இந்தத் தூண்டி விடும் வேலையைத் தொடர்ந்தால் நடராஜனின் 'நிழல்' வேலைகளை அம்பலப்படுத்துவேன்" என்கிறாராம் சுவாமி. சபாஷ்! சரியான போட்டி!

● அம்மாவுக்கும் பா.ஜ.கவுக்கும் மோதல் வந்து உறவு முறிந்து விடுமோ என்ற நிலை வரும்போது மிகவும் படபடப்பாகி விடுகிறார் திண்டுக்கல் சீனிவாசன். ஆர்.கே. குமார் கழற்றி விடப்பட்டபோது, அதற்குப் பதிலாக சீனிவாசன் நியமிக்கப் படுவார் என்று அம்மா பிரதமரிடம் தெரிவித்தார்.



ஜெவின் கோபமும்!

ஆனால் இடையில் பட்ஜெட் கூட்டம் நடந்ததால் அமைச்சரவைக்குப் புதிய நபர்கள் நியமிக்கப்படவில்லை. பட்ஜெட் கூட்டம் முடிந்தவுடன் காவிரித் தகராறு, பெஸ் பரூவா மாற்றல் விவகாரம் என்று பிரச்னைகள் தொடர்ந்து வர, உறவில் கசப்பு. இந்த நிலை தொடர்ந்தால் அமைச்சராகும் வாய்ப்பு அம்போதான் என்று கவலைப்படுகிறாராம் சீனிவாசன்.

● வை.கோ.வுக்கு இப்போது பெரிய கவலை! "அ.தி.மு.க விலகினாலும் பா.ஜ.க ஆட்சிக்கு எங்கள் ஆதரவு தொடரும்" என்று பொருள்படும் அளவுக்கு பேட்டிகள் கொடுத்தாகி விட்டது. அதேசமயம் உள்ளூர் அரசியல் சூழலின் காரணமாக, அ.தி.மு.க.வை விட்டுப் பிரிந்து வர முடியாத நிலை! செப்டம்பர் 15, சென்னையில் நடக்கும் மறுமலர்ச்சி பேரணிக்கு பிரதமர் வர ஒப்புக் கொண்டு விட்டார். அந்தப் பேரணியில் ஜெ.வும் கலந்து கொள்வாரென ஏற்கெனவே அறிவிப்புக்கள் வந்து விட்டன. ஆனால் இப்போதிருக்கும் சூழலில் வைகோவுக்குப் போட்டியாகத் திருச்சியில் அ.தி.மு.க. பேரணி என்கிற மாதிரியான செய்திகள்! "அம்மா சில பல காரியங்களுக்காக பா.ஜ.க.வை சங்கடப்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்தக் கூட்டணிக் கட்சிகள் பேசாமல் இருக்க வேண்டியதுதானே! ஏதோ தாங்கள்தான் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றவர்கள் போல பேட்டிகள் கொடுக்கிறார்கள். அவற்றைப் பார்த்தால் கோபம் வரத்தானே செய்யும்!" என்று நம்மிடம் சொன்னார் முக்கிய அ.தி.மு.க பிரமுகர் ஒருவர். ஆனாலும் ம.தி.மு.க வட்டாரத்தில் ஜெ.வை சமாதானப்படுத்தி விட முடியும்' என்று நம்பிக்கையுடன் சொல்கிறார்கள்.

● விஜய் தொலைக்காட்சி தனது செய்திப் பிரிவை மூடுகிறது. சந்தியாவும் பாத்திமாவும் மற்ற இரண்டு தொலைக்காட்சிக்கு தாவி விட்டிருக்கிறார்கள். ●

— தில்லப்பா

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

பாவம்! அப்பாவால் அடித்துப் புண்படுத்தப்பட்டவன் 'ப்ரார்த்தவ்ய மார்த்தம்' என்று புலம்பிக் கொண்டிருந்தான் அல்லவா...? அந்தப் பைத்தியத்தை அந்த ஊரில் பரிதாபப்பட்டு சம்ரக்ஷணை பண்ணி வந்தார்கள் என்று சொன்னேன்.

அந்த தேசத்து இளவரசிக்கு விவாகம் வந்தது.... அப்போது, அந்த தேசத்து ஆசாரப்படி - வழக்கப்படி - மறுநாள் விவாகம் நடக்கப் போகிறது... முதல் நாள் அந்த வதுவையும் வரனையும் ரதத்திலே உட்கார வைத்து, ரதகஜதுரக பதாதிகளெல்லாம் முன்னே போக, அந்த வீதியிலே வலம் வருகிறார்கள். அந்தச் சமயத்தில் முன்னே பட்டத்து யானை போய்க் கொண்டிருக்கிறது. எல்லாப் படைகளும் போய்க் கொண்டிருக்கின்றன. ராஜ வர்க்கங்கள், மந்திரி வர்க்கங்கள் - எல்லோரும் போகிறார்கள்.

அப்போது பார்த்து, முன்னே போன பட்டத்து யானைக்கு மதம் பிடித்து விட்டது! அது திடீரென்று திரும்பி ஓடுகிறது! எல்லோரும் நாலா திக்கிலும் ஓடுகிறார்கள்!

ரதத்தில் உட்கார்ந்திருந்தானே வரன் - மாப்பிள்ளைப் பையன்... அவனும் எகிறிக் குதித்து ஓடிப் போய் விட்டான்.

கல்யாணப் பெண் மட்டும் ரதத்தில் உட்கார்ந்திருக்கிறாள்... என்ன பண்ணுவதென்றே தெரியவில்லை.

இந்த ப்ரார்த்தவ்ய மார்த்த பைத்தியப் பையன் இருக்கிறானே... அவன் இதைப் பார்த்தான். 'ஐயோ! இவள் தனியாக உட்கார்ந்திருக்கிறாளே... யானை இவளை என்ன பண்ணுமோ...? ரதத்தை முட்டித் தள்ளி விட்டால் என்ன பண்ணுவது...?' என்று யோசித்தான். கிடுகிடுவென்று ரதத்திலே ஏறினான். அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி, வீட்டுக்குள்ளே நுழைந்துவிட்டான்! - பக்கத்திலே இருந்த வீடு... யானையும் ஓடி விட்டது!

எல்லோரும் வந்தார்கள். ராஜாவும் வந்தான். அந்தப் பையன் - கல்யாணப் பையன் - மறுபடியும் ரதத்திலே போய் 'யதாஸ்தானம் பிரதிஷ்டாபயாமி' என்று உட்கார்ந்து கொண்டான்.

ஆனால், அந்தப் பெண்ணைக் கூப்பிட்டால், அவள் வரமாட்டேன் என்று கூறி விட்டாள்!



ஞானப் பொக்கிஷம்

அவள் சொல்கிறாள் : "இன்னும் அவன் கையைப் பிடிக்கவேயில்லை. அதற்குள் அவன் என்னைக் கைவிட்டு விட்டான். அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் எனக்கு வாழ்வு ஏது...? என்னைக் காப்பாற்றியவன் இவன்தான். இவன் பைத்தியமோ, நல்லவனோ எனக்குத் தெரியாது... ஆனால், இவனைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்..." என்று சொல்லி விட்டாள் அந்த ராஜ குமாரத்தி...

அந்த ராஜாவுக்கோ ஒரே பெண்... அவன் என்ன பண்ணினான்... அதே முகூர்த்தத்தில் பெண்ணின் விருப்பப்படி கல்யாணம் பண்ணி வைத்து விட்டான்.

குழந்தைக்குப் பளாரென்று ஒன்று கொடுத்தானே தந்தை... ராஜதானியிலே இப்படி ஒரு கல்யாணம் நடக்கிறதே என்று வேடிக்கை பார்க்க வந்தான். தன் பிள்ளையே மாப்பிள்ளையாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுப் போய் விட்டான்.

இவனைப் போய் அடித்தோமே! வியாபாரத்தை சரியாகப் பார்த்துக் கொள்வானா என்று பரீட்சை பண்ணினால், ராஜயோகம் இருக்கிறதே இவனுக்கு! அதைத் தடுக்க யாரால் முடியும்...?!



ஆகையினாலே, ஒருத்தருக்கு ஒன்று விசேஷமாகக் கிடைக்கிறதென்றால் அதைப் பார்த்து சந்தோஷப்பட வேண்டுமேயொழிய அசூயைப் பட்டால் வருமா? அதைத் தடை பண்ணத்தான் நம்மால் முடியுமா...?

எது உண்டோ, அது கட்டாயம் கிடைக்கும். இல்லையென்றால் அது ஒரு நாளும் கிடைக்காது. என்னதான் எகிறிக் குதித்தாலும் கிடைக்காது என்பதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதனால்தான் உபநிஷத் வாக்கியம் சொல்கிறது : பிறர் யாருடைய பொருளுக்கும் ஆசைப்படாதே!

என்ன உண்டோ அதைப் பரமாத்மா உனக்குக் கொடுத்திருக்கிறான். அப்படியிருக்கிற போது வீண் வழியிலே போய் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டு... அதனால் அவஸ்தைதானேயொழிய பெருமையை அடைய முடியாது என்கிறது உபநிஷத்.

- இதை ஈசாவாச்ய உபநிஷத் ஸ்பஷ்டமாகச் சொல்கிறது என்று சொன்னேன். ஈசாவாச்ய உபநிஷத்தானது ஆரம்பிக்கிறபோதே இந்த உலகத்திலே நாட்டம் கொள்ளாதே; இந்த உலகத்தை விடு; இதில் இருந்து கொண்டிருந்தாலும் பற்றை விடு... ஒருவருடைய பொருளுக்கும் ஆசைப் படாதே என்கிறது.

போக்தா, போக்யம், பிரேரிதா என்பதைத்தான் இந்த ஈசாவாச்ய உபநிஷத் வேறு விதமாகச் சொல்கிறது. என்ன காட்டுகிறது இந்த உபநிஷத்? இதற்கெல்லாம் அதிநாயகன் விஷ்ணு - உலகத்துக்கெல்லாம் அதிநாயகன் விஷ்ணு. அவனுடையது இதெல்லாம். அதனால் இதிலே ஆசைப் படாதே!

இதராளுடைய சொத்துக்கு ஆசைப் படாதே என்றார்... இங்கே 'இதராள்' என்று சொல்லப்படக்கூடியவர் யாரென்றால், பரமாத்மா! அவனுடைய சொத்தான நீ ஆத்மா – நீ சுவதந்த்ரன் என்று நினைக்காதே! அவனுக்கு நீ பரதந்த்ரன்.

பரதந்த்ரன் என்றால், பகவான் இட்ட வழக்காய் நீ இருக்கிறாய். இந்தப் பிறவி இருக்கிறது பாருங்கள்... அது கர்மாதீனம். நாம் ஜன்மாந்திரத்திலே பண்ணிய கர்மாவுக்கு ஏற்ப சரீரம் கிடைக்கும். அந்த சரீர வழி, யாக்கை வழி உழல்கிறோம். – சரீர யாத்திரையானது கர்மாதீனமானது.

ஆத்ம யாத்திரை இருக்கிறது பாருங்கள்... அது பகவத் அதீனம். அதற்கு யார் நியம்தா?... பகவான்தான். அவன் நம். கர்மாவுக்கு சாட்சியாக இருந்து, நாம் பண்ணக்கூடிய பாவ புண்ணியாதிகளுக்கேற்ப நமக்கு சரீரத்தைக் கொடுத்து அந்தப் பலனை அனுபவிக்க விசேஷமாக நம்மை உலகிலே விடுகிறான். இப்படி நம்மை சிக்ஷிப்பதற்காகவும் நாம் பலனை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவும் நமக்குச் சரீரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.


இதை நன்றாக விஷ்ணுபுராணத்திலே எடுத்துச் சொல்கிறார். ரிபு என்று ஒருவர். அவர் சிஷ்யன் நிதாகர். அந்த ரிபு என்பவர் ஆத்ம ஞானம் கைவந்தவர். தம் சிஷ்யனான நிதாகருக்கு அந்த உயர்ந்த உபதேசத்தை நிறைய பண்ணினார்.

ஆத்மா அணுவாக இருக்கும். ஆத்மாவினுடைய அறிவு விரிவாக இருக்கும். ஆத்மாவை நனைக்க முடியாது; வெட்ட முடியாது; உலர்த்த முடியாது... ஆத்மாவிலே ஸ்த்ரீ புருஷ பேதம் கிடையாது. ஆத்மாவிலே யானையான ஆத்மா, பூனையான ஆத்மா, மனிதனான ஆத்மா – இத்யாதி பேதங்கள் கிடையாது. ஆத்மாவிலே ஜாதி – மத பேதம் கிடையாது. அணுவான அந்த ஆத்மாவுக்கு பேதங்கள் இல்லை. இதெல்லாம் சரீரத்துக்குத்தான்!

– இப்படியெல்லாம் நிறைய உபதேசம் பண்ணினார். இப்படி உபதேசம் பண்ணும் போது எல்லாம் புரிகிற மாதிரி இருக்கும். அப்புறம் மறந்து போய்விடும்! ஆத்ம விஷயம் என்பது அவ்வளவு சுலபமில்

எழுதினார்கள்; வென்றார்கள்!





• வசந்த்

• வசந்த் & கோ திருச்சி கிளையில் கலர் டி.வி. பரிசு பெறும் சையதுஅப்பாஸ்

வசந்த் & கோ வழங்கும் பிலிப்ஸ் கலர் டி.வி. பரிசைப் பெற்ற அதிர்ஷ்டசாலி திருச்சி சையது அப்பாஸை படத்தில் பார்க்கிறீர்கள்.

பரிசை அவருக்கு வழங்குபவர், வசந்த் & கோவின் திருச்சி கிளை நிர்வாகி சாமிநாதன். உடனிருப்பவர் மற்றொரு நிர்வாகி முரளி.

பி.எம். சில்க்ஸ் வழங்கிய பட்டுப் புடைவைப் போட்டியில் வென்ற பன்னிரண்டு பேர்களுள் 12வது போட்டியில் வென்ற எஸ். பாலகிருஷ்ணன் பி.எம். சில்க்ஸ் நிர்வாகியிடம் பரிசு பெறும் காட்சி இங்கே.

வென்றவர்களுக்கும் வழங்கியவர்களுக்கும் வாழ்த்துக்கள்

– ஆசிரியர்

• பி.எம். சில்க்ஸில் பட்டுப் புடவை பரிசு பெறும் எஸ். பாலகிருஷ்ணன்



லையே! திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும்; கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

இப்படி ரிபு பண்ணிய உபதேசத்துக்கு ஒரு மூலம் உண்டு : ஜடபரதர், சக்ரவர்த்தியாய் இருந்து முனிவர் ஆனவர். அவர் எதிலேயும் பற்றற்ற நிலையிலே ஒரு கல்லிலே உட்கார்ந்திருந்தார் – மகா ஞானியாக. அப்போது காசி தேசத்து அரசனான ரகூகணன் பல்லக்கிலே வந்து கொண்டிருந்தான்.

பல்லக்கு சுமக்கக் கூடியவர்களுக்குக் களைப்பு ஏற்பட்டுப் போயிற்று. அவர்களெல்லாம் என்ன செய்தார்கள்...

'ஹே ராஜன்! எங்களால் தூக்க முடியவில்லையே. ரொம்ப சிரமமாக இருக்கிறதே' என்றார்கள்.

ராஜா என்ன பண்ணினான், இந்த ஊரில் யாராவது அக்கம்பக்கத்திலே ஆள் கிடைக்கிறார்களா என்று பாருங்கள். தினக்கூலி கொடுத்து விடலாம்; அழைத்து வாருங்கள்...' என்றான்.



ஆள் தேடிப் போனவர்கள் பார்த்த போது, அங்கே கல்லின் மேலே ஜடபரதர் உட்கார்ந்திருக்கிறார். அவர் நல்ல வாட்ட சாட்டமாக இருந்ததனாலே, 'பல்லக்குத் தூக்க பத்துப் பேரை அழைத்துப் போவானேன்; இந்த ஒருத்தரே போதுமே என்று, அவர் அருகில் வந்து அவரைக் கூப்பிட்டார்கள்.

கூப்பிட்டால், அவர் பேசவேயில்லை... ஜடமாக உட்கார்ந்திருக்கிறார். அவர் கையைப் பிடித்தார்கள். பிடித்தால், அப்படியே அவர்களோடு புறப்பட்டுப் போய் விட்டார் அவர்! ராஜாவும் பார்த்தான். பல்லக்கு சுமக்கப்படட்டும் என்றான்.

இத்தனை நாளாகத் தூக்கிக் கொண்டு வந்தார்களே, அந்த பத்துப் பேரும், பல்லக்கின் பின்னால் இருக்கிற தண்டைத் தூக்கித் தங்கள் தோளில் வைத்துக் கொண்டார்கள். முன்னே இருக்கின்ற தண்டைத் தூக்கி ஜடபரதர் தோளில் வைத்து விட்டார்கள்!

ஜடபரதர்தான் முன்னால் போகிறார். மற்றவர்கள் எல்லாம் பின்னால்... பல்லக்கு போகிறது!

(தொடரும்)

அருள்வாக்கு

பல பேர் சேர்ந்து சளசளவென்று பேசிக் கொண்டிருக்கும் போது எல்லாரையும் ஸைலன்டாக இருக்கச் சொன்னால் அவர்களால் இருக்க முடிகிறதா? முடிவதில்லை. ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷத்துக்கப்புறம் ஒருத்தர் இரண்டு பேர் ரஹஸ்யம் பேசிக் கொள்ள ஆரம்பித்து, அப்புறம் எல்லாருமே அப்படிப் பண்ணி, ஒரு பத்து நிமிஷம் போனால், ரஹஸ்யம் என்பதும் நல்ல சத்தமாகவே ஆகிவிடுகிறது. மனஸின் எல்லா உணர்ச்சிகளையும் ஒரே வீச்சில் அடக்கப் பார்ப்பதும் இப்படித்தான் முடியும். அதுவே, ''ஸைலன்ஸ் ப்ளீஸ்'' என்று திரும்பத் திரும்பச் சத்தம் போட்டுக் கொண்டிருக்காமல் – (சிரித்தவாறு) ''ஸைலன்ஸ் ஸைலன்ஸ்'' என்றே சத்தம் போட்டுக் கொண்டிருக்காமல் – ''ராம ராமா'', ''சிவ சிவா'' என்று ஏதோ ஒரு நாமாவை யாராவது ஒருத்தர் சொல்ல ஆரம்பித்தால், அதிலேயும் ராகம் தாளம் எல்லாம் சேர்த்து ரஸம் அதிகமாகும்படி பஜனையாக ஆரம்பித்தால், எல்லாரும் அதையே திருப்பிச் சொல்லி அத்தனை சத்தமும் இந்த நாம சப்தத்திலேயே அடங்கிப் போய்விடுகிறது. அரைமணி, ஒரு மணி கூட, ராத்திரியெல்லாம் கூடப் பல தினுஸாகப் பலுக்கிப் பலுக்கி, ராக தாளங்களை மாற்றி, நாமங்களையும் மாற்றி பஜனை செய்தால் எல்லாரும் மற்ற பேச்சுப் பேசாமல் அதில் கலந்து கொள்ள முடிகிறது. இது மௌனம் இல்லைதான். ஆனால் அதற்கு 'நெக்ஸ்ட் பெஸ்ட்' (அதற்கடுத்தபடியான உத்தம நிலை) என்று சொல்லலாம். இப்படி நாமாவிலே தோய்ந்து சொக்கிப் போனால், தானே மௌனத்தில் கொண்டு விட்டு விடும். வெறும் பேச்சு அப்படிப் பண்ணுமா?

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.



அரைகுறை மனதுடன் ஏ.ஆர்.ரஹ்மான்!



● செல்வமணி இயக்கும் 'ராஜஸ்தான்' படத்தில் ரோஜா இல்லை. விஜயசாந்தி நடிக்கும் படத்தில் தாம் நடிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார் ரோஜா. 'ராஜஸ்தான்' படத்து நாயகி விஜயசாந்தி.

● 'காதலுக்கு மரியாதை'க்குப் பின் ஷாலினியைக் காணோமே என்று தவிக்கும் தமிழ் ரசிகர்களுக்காக 'கைகூடுன்ன நிலாவு' என்கிற மலையாளப் படம், 'நிலவே உனக்காக' என்று தமிழில் டப் செய்யப்பட்டு வெளிவர இருக்கிறது. பாலக்காட்டில் வசிக்கும் தமிழ்க் குடும்பமொன்றின் கதை. படத்தில் பாதிக்கு மேல் தமிழ் வசனம்தான். அப்புறம் ஏன் அதை தமிழில் டப் செய்கிறார்கள் என்று தெரியவில்லை.

● சொன்ன தேதியில் படத்தை ரிலீஸ் செய்து காட்டுபவர் சிவசக்தி பாண்டியன். சுதந்தர தினத்தன்று வெளியாகியிருக்க வேண்டிய 'கண்ணெதிரே தோன்றினாள்' கொஞ்சம் தாமதமாய் வெளிவரப் போகிறது. கொஞ்சம் தாமதத்திற்குக் காரணம் சிம்ரன்தான் என்கிறார் பாண்டியன். "கால்ஷீட் சொதப்பல் இல்லை. சொன்னதைப் புரிந்து கொண்டு உடனே ஆக்ட் பண்ணி விடுகிற ரகமும் கூட. ஆனால், அவர் ஷூட்டிங்கிற்கு வருகிற நேரமிருக்கிறதே அதுதான் பிரச்னை. காலை ஒன்பது மணி கால்ஷீட்டிற்கு மதியம் பன்னிரண்டு மணிக்குத்தான் வருவார். சரி தொலையுது என்றால் நைட் ஒன்பது மணிக்கெல்லாம் தலைவலி, காய்ச்சல் என்று பறந்து விடுவார். ஒருவழியாய் படத்தை முடிச்சாச்சு" என்கிற பாண்டியன் இப்போதே அடுத்த படத்திற்கும் தயாராகி விட்டார். ஹீரோ முரளி. கதை கேட்கும் படலம் தீவிரமாய் நடந்து கொண்டிருக்கிறது.

● ரஜினியின்

‘படையப்பா’ படத்திற்கு மனமில்லாமல்தான் இசையமைக்க ஒப்புக் கொண்டுள்ளாராம் ஏ.ஆர். ரஹ்மான். இந்த இசைப் புயலை தொடர்பு கொள்ள வேண்டுமானால் பேக்ஸ் மூலம்தான் தொடர்பு கொள்ள வேண்டும், அது யாராயிருந்தாலும். ஒருநாள் ரஜினியும் பேக்ஸ் மூலம் தொடர்பு கொண்டிருக்கிறார், உங்களைப் பார்க்க புறப்பட்டு வருகிறேன் என்று! ஏ.ஆர். ரஹ்மானுக்கோ தர்மசங்கடம். ரஜினியின் வீட்டிற்குப் போன் செய்து இரண்டு நாள் கழித்து நானே வீட்டில் வந்து பார்க்கிறேன் என்று தட்டிக் கழிக்கப் பார்த்திருக்கிறார். ரஜினி ஆன் தி வே என்று சத்யநாராயணா பதில் சொல்ல, ரஹ்மானுக்கோ பதற்றம். ரஜினியும் ரஹ்மான் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார். ரஜினி கேட்டுக் கொண்டதற்கிணங்க ‘படையப்பா’விற்கு இசையமைக்க இருக்கிறார் ரஹ்மான்.

- துண்டு துக்கடா கேரக்டர்களிலும் நடிக்கத் தயாராகி விட்டார் சத்யராஜ். அஜீத் - கார்த்திக் நடிக்கும் ‘ஆனந்தப் பூங்காற்றே’ படத்தில் இடைவேளைக்குப் பின் இரண்டு காட்சிகளில் வந்து இளைப்பாறி விட்டுப் போகிறாராம் சத்யராஜ்.

- கல்கி படத்திற்குப் பின் சின்னத் திரையில் முழுமூச்சாக இறங்கிவிட்ட கே. பாலசந்தர் பெரிய திரைப் பக்கமும் இப்போது எட்டிப் பார்க்கப் போகிறார். வேலூர் சுந்தர் தயாரிக்கும் படத்தை பாலசந்தர் இயக்கப் போகிறார். தம் சொந்த நிறுவனம் (கவிதாலயா) ஆரம்பித்த பின் பிற தயாரிப்பாளர்களின் படங்களை இயக்குவதை பாலசந்தர் குறைத்திருந்தார். நீண்ட இடைவெளிக்குப் பின் இப்படத்தை இயக்க ஒப்புக் கொண்டுள்ளார் பாலசந்தர். ○

— மஹநந்த்



ஆங்கிலத்தில் சினிமா தலைப்பா? வந்தது தடை!

கன்னடத் திரைப்படங்களுக்கு இனிமேல் ஆங்கிலப் பெயர்களைச் சூட்டக் கூடாது என்று கர்நாடக சினிமா வர்த்தக சங்கம் தடைவிதித்துள்ளது. சமீபத்திய கன்னடத் திரைப்படங்களான 'A' மற்றும் 'அமெரிக்கா அமெரிக்கா' ஆகிய படங்கள் வர்த்தக ரீதியாய் வசூலைக் குவித்திருக்கின்றன. பாம்பே அல்வா, மிஸ்டர் எக்ஸ் என்றெல்லாம் பெயர்கள் சூட்டிக் கொண்டும் படங்கள் பவனி வந்தன. தற்சமயம் பாதி முடிவடைந்த நிலையில் இருக்கும் படங்களான ஏ.கே. – 47 மற்றும் 'Z' ஆகிய படங்களுக்கு மட்டும் தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. "ஏற்கெனவே இப்படத்தின் படப்பிடிப்புகள் பாதி முடிவடைந்து விட்ட நிலையில்



• கிரிஷ்கர்னாட்

இந்தப் பெயருக்கான விளம்பரங்களும் பரவி விட்ட நிலையில் பெயரை மாற்றச் சொல்வதால் பொருளாதார ரீதியில் நஷ்டம் ஏற்படும். எனவேதான் இந்த இரண்டு படங்களை மட்டும் அனுமதிக்கிறோம்" – என்கிறது சேம்பர். புதிய தடையால் தடுமாறிக் கொண்டிருக்கும் இன்னொரு படம் : 'Good Bad and Ugly.'

"கன்னடத்தைக் காக்க வேண்டியது நமது கடமை. எந்த மாதிரியான அர்த்தம் தொனிக்கும் தலைப்பையும் தருகின்ற அளவுக்கு வளமான மொழி நமது கன்னடம். என்ன வளம் இல்லை கன்னட மொழியில்? எதற்காக படத் தயாரிப்பாளர்கள் ஆங்கிலத்தைத் தேடி ஓட வேண்டும்?" என்று தமிழ்க்குடிமகன் பாணியில் கோபமாகக் கேட்கிறது அறிக்கை.

தயாரிப்பாளர்கள் மத்தியிலிருந்து முணுமுணுப்பும் எதிர்ப்பும் கிளம்பியிருக்கின்றன. "ராஜ்குமாரின் 'ஆபரேஷன் டயமண்ட் ராக்கெட்' என்ற ஆங்கிலப் பெயருடன் வந்த படம் சக்கைப் போடு போட்டதே. அப்போதெல்லாம் எங்கே போயிருந்தார்கள் இவர்கள்? செய்வதற்கு வேறு வேலை எதுவும் இல்லை என்பதால் இப்படியெல்லாம் தொந்தரவு தருகிறார்கள்!" என்கிறார் ஒரு தயாரிப்பாளர்.

"கன்னடம் கூடாது என்றோ ஆங்கிலம்தான் வேண்டுமென்றோ நாங்கள் ஒன்றும் பிடிவாதமாக இருக்கவில்லை. மக்கள் மத்தியில் சுலபமாக ரீச் ஆகிற மாதிரி ஒரு டைட்டில் கிடைக்கிற போது அதனை வைக்கிறோம். சில படங்கள் டைட்டில்களால் மட்டுமே மக்களின் கவனத்தைக் கவர்ந்து விடுகின்றன. சமீபத்தில் அப்படிக் கவர்ந்த ஒரு படம் 'A'. ஏன் தமிழில் கூட ஜீன்ஸ், ஜென்டில்மேன் இவையெல்லாம் டைட்டில்கள் மூலமே மக்களை ஈர்க்கவில்லையா? சினிமா என்பது வியாபாரம். இங்கே இதுபோன்ற கட்டுப்பாடுகளெல்லாம் கூடாது" என்கிறார் அவர்.

பிரபல இயக்குநரும் தயாரிப்பாளரும் நடிகருமான கிரிஷ்கர்னாடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். "இது ஜனநாயக நாடு. அவர்கள் விரும்புகிற டைட்டில்களை வைக்கிற உரிமைகள் அவர்களுக்கு உண்டு. தவிர சினிமாவில் சில (மூட) நம்பிக்கைகள் உண்டு. அந்த நம்பிக்கைகளில் கூடச் சிலர் பெயர் வைக்கிறார்கள். அதற்குக் கூட அவர்களுக்கு அனுமதி இல்லையென்றால் எப்படி?" – என்கிறார் அவர்.

பெங்களூரிலிருந்து: பெர்னாண்டஸ்



"பிரச்னைகளை மறைத்துவிட்டுப் பெருமைபேசுவது தவறு!"

நல்ல படம் என்றும் மிக மோசம் என்றும் இருவிதமான அபிப்பிராயங்களை ஒரே சமயத்தில் பெற்றிருக்கிறது, 'உயிரே'. ஒரு சராசரியான காதல் கதையைச் சொல்ல வடகிழக்கு மாநிலங்களிலுள்ள தீவிரவாதிகள் பிரச்னையை மாறுபட்ட களத்துக்காக மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்; மற்றபடி தேசிய நோக்கமோ, தேசபக்தியோ இந்தப் படத்தில் துளியும் வெளிப்படவில்லை என்பது பரவலான விமர்சனம்.

ஆனால், தம் நோக்கம் தெளிவானது என்றும் சுதந்தரமடைந்து ஐம்பதாண்டு

காலம் ஆகிவிட்ட பின்பும் வடகிழக்கு மாநில மக்கள் தம் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதால் பொங்கி எழுவதை, தாம் நேர்மையாக வெளிப்படுத்தியிருப்பதாகவும் கூறுகிறார் மணிரத்னம்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அவர் அளித்த பேட்டியிலிருந்து :

கேள்வி : ரோஜா, பம்பாய், உயிரே மூன்று படங்களிலுமே தீவிரவாதம், வன்முறையைக் கையாண்டிருக்கிறீர்கள். இந்த சப்ஜெக்ட் மீது உங்களுக்கு ஏன் இத்தனை காதல்?

மணிரத்னம் : காதல் இல்லை; கவலை தான் காரணம். என்னைச் சுற்றி நடப்பதை நான் சற்று தள்ளி நின்று பார்க்கிறேன். அது என் மனதை சஞ்சலப்பட வைக்கிறது. மற்ற எந்தப் பிரச்னையையும் விட, இந்தத் தீவிர வாதத்தால், திடீரென்று வன்முறை நிகழ்கிறது. இதன் பாதிப்பு அதிகம்; ஷாக் அதிகம்! எனக்குத் தொழில் சினிமா. அந்த வெகுஜன மீடியா மூலம், நான் உணர்வதைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே, எனக்குப் பிடித்ததை, என்னை பாதித்ததைத் தான் நான் படமாகச் செய்திருக்கிறேன். அது மௌன ராகமாக இருந்தாலும் சரி, அஞ்சலியாக இருந்தாலும் சரி, பம்பாய் ஆக இருந்தாலும் சரி... நாயகனாக இருந்தாலும் சரி!

கேள்வி : ரோஜா, பம்பாய், உயிரே மூன்றிலுமே பிரச்னையும் உண்டு; காதலும் உண்டு. நீங்கள் காதல் கதையைச் சொல்லத்தான் மாறுபட்ட பின்னணிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறீர்களா? அல்லது, ஒரு பிரச்னையை, மக்களுக்குக் 'காதல்' என்ற வாகனத்தைப் பயன்படுத்திச் சொன்னால்தான் விளங்க வைக்க முடியும் என்று நினைக்கிறீர்களா?

மணிரத்னம் : கண்டிப்பாக இப்படித்தான் என்று சொல்லுவது சாத்தியம் இல்லை. இரண்டுமே நடந்திருக்கிறது. எதையுமே நான் திட்டமிட்டுச் செய்தது இல்லை. தனது கணவன் தீவிரவாதிகளால் கடத்தப்படுகிறபோது, ஒரு மனைவியின் ரியாக்ஷன் எப்படி இருக்கும்? இதுதான் ரோஜா படத்தினுடைய ஸ்பார்க். அத்துடன் முன்னும், பின்னும் கொஞ்சம் சேர்த்து, கதை உருவானது. பம்பாய் படத்தைப் பொறுத்தவரை, மதக்கலவரத்தை இரண்டு குழந்தைகளின் கண்ணோட்டத்தில் சொல்ல விரும்பினேன். ஆனால், 'உயிரே' முழுக்க முழுக்கக் காதல் கதை. சராசரி இந்தியக் குடிமகன் ஒருவன்தான் ஹீரோ. வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண்தான் ஹீரோயின். வடகிழக்கு மாநிலம் என்பது இந்தியாவின் ஒரு பகுதி தான். அங்கே இருப்பவர்களும் இந்தியர்கள் தான்; நம் சகோதரர்கள்தான். ஆனால், அங்கே இருக்கிறவர்கள் அப்படி நினைக்க வில்லை என்பது வருத்தமளிக்கிற உண்மை. இந்த கேரக்டர்கள், இந்தச் சூழ்நிலையைத் தான் பிரதிபலிக்கின்றன. விலகிப் போனாலும் காதல் தீரவில்லை என்பது போல, பிரிந்து போக நினைத்தாலும், தேசம் ஒன்று தான் என்பதுதான் அங்கே முக்கியம்.

கேள்வி : வடகிழக்கு மாநில தீவிரவாதம் உங்களை பாதித்ததற்குக் குறிப்பிட்ட காரணம் ஏதாவது உண்டா?

மணிரத்னம் : அதுவும் இந்தியாவில் தானே உள்ளது? அங்குள்ள பிரச்னை பற்றி, எந்த ஒரு இந்தியப் பிரஜைக்கும் என்ன ஒரு பாதிப்பு உண்டோ அந்த அளவுக்குத்தான் அது என்னையும் பாதித்திருக்கிறது. ஒரு பத்திரிகையாளரை பாதிக்கிறபோது, அவர் எழுதுகிறார்; நான் சினிமா டைரக்டர் என்பதால், அதை சினிமாவாக எடுக்கிறேன். இந்தியா சுதந்தரமடைந்து ஐம்பது வருடங்களாகின்றன. இந்த ஐம்பது வருடங்களில்,



நாம் பல துறைகளிலும் சாதனைகள் புரிந்திருக்கிறோம். ஓர் இந்தியன் என்ற முறையில், அதுகுறித்து நான் பெருமிதம் அடைகிறேன். அதே நேரம், இந்த ஐம்பது வருடங்களில், தீவிரவாதம் என்ற பிரச்னையும் வளர்ந்திருக்கிறது. குப்பை வெளியில் தெரியாதபடி தரைவிரிப்புக்குக் கீழே பெருக்கித் தள்ளி மறைத்து விட்டு, வீடு சுத்தம் என்பது போல, பிரச்னைகளை மறந்து விட்டு, மறைத்து விட்டு, சாதனைகள் பற்றிப் பெருமை பேசுவது தவறு.

அஸ்ஸாம், நாகாலாந்து போன்ற வடகிழக்கு மாநிலங்களில் மக்கள் தம்மை அரசாங்கம் புறக்கணிப்பதாக, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதாக நினைக்கிறார்கள். நமக்கு, அவர்களுடைய பிரச்னை பெரிதாகத் தோன்றாமல் இருக்கலாம். ஆனால், அது அவர்களைப் பொறுத்தவரை வாழ்க்கைப் பிரச்னை. அதனால், தீவிரவாதச் செயல்களில் இறங்கி, அரசின் கவனத்தைத் தம் பக்கம் ஈர்க்க முயற்சி செய்கிறார்கள். இவையெல்லாம்தான், நான் அந்த மக்களின் பிரச்னையை எடுத்துக் கொள்ளக் காரணமாக அமைந்தன.

கேள்வி : *ஆனால், அங்குள்ள ஒருசிலர்தானே தீவிரவாதிகள்! அம்மாநில மக்கள் எல்லோருமே தீவிரவாதிகள் என்பது போல் சொல்கிறீர்களே?*

மணிரத்னம் : அப்படியல்ல! அங்குள்ள மக்கள் அனைவருமே நம் அரசின் மீது அதிருப்தி கொண்டிருப்பது, இந்தப் படத்துக்கான ஆய்வின்போது தெரியவந்தது. அதிருப்தியைச் சிலர் விழுங்கிக் கொள்கிறார்கள். சிலர் வன்முறை மூலம் வெளிப்படுத்துகிறார்கள். வெளிப்பாட்டை விட, மனநிலையைத்தான் நான் காட்ட விரும்பினேன்.

கேள்வி : *எந்தவிதத்தில் நீங்கள் ஆய்வு செய்தீர்கள்?*

மணிரத்னம் : இரண்டு உதவி இயக்குனர்கள், இந்தப் பிரச்னை பற்றிய புத்தகங்கள், நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்கள், பத்திரிகைக் கட்டுரைகள் என ஏராளமாகத் திரட்டினார்கள். அவற்றைப் படித்த போது பிரச்னையின் ஆழத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அந்தப் பகுதி மக்கள் எந்த அளவுக்குக் காயப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டேன். அவற்றையெல்லாம், முழுமையாக சினிமாவில் சொல்லி விட வேண்டும் என்பதல்ல என் நோக்கம். அந்தப் பிரச்னையின் பரிணாமத்தில் ஐந்து சதவீதத்தைத் திரையில் கொண்டு வந்தால் பெரிய விஷயம் என்று கருதினேன். சுதந்தர இந்தியாவில், நம்மைப் போன்றவர்களின் பார்வை, அந்தப் பகுதி மக்களின் பார்வை, இரண்டையும் இரண்டு கேரக்டர்கள் மூலம் காட்டினால் நன்றாக இருக்கும் என்றுதான் இரண்டு கேரக்டர்கள் மூலம் கதை சொல்லியிருக்கிறேன். அடிப்படையில் இது ஒரு காதல் கதைதான்!

கேள்வி : *இதை 'இந்தியில்' (தில் ஸே) ஏன் எடுத்தீர்கள்?*

மணிரத்னம் : கதை, வடகிழக்கு மாநிலத்தின் பிரச்னை பற்றியது. இதற்கு முந்தைய ரோஜா, பம்பாய் படங்கள், வடக்கில் நடந்த சம்பவங்களின் அடிப்படையிலான கதை என்றாலும், இங்கிருந்து அங்கே ஒரு தமிழ் கேரக்டராவது போகும். அங்கே சுற்றியிருப்பவர்கள் தமிழ் பேசுவார்கள். அதற்காகத் தமிழ் கேரக்டர்களை, கதையிலே புகுத்த வேண்டியிருந்தது. இந்தப் படத்தில், அதுபோலச் செய்ய வேண்டாம் என்று கருதினேன். எனவே இந்தியிலேயே எடுக்க முடிவு செய்தேன். படத்தை தமிழுக்கு மாற்றும் போது, 'நேடிவிடி' கருதி ஆங்காங்கே இந்தியும், கம்யூனிகேஷனுக்காகத் தமிழும் பேசப்படுவதாக வைத்திருக்கிறேன். எனவே, இந்தி வசனம் புரியாவிட்டாலும், கதையோட்டம் பாதிக்காமல் இருக்கிறது.

கேள்வி : *முக்கியமான ஒரு பிரச்னையை எடுத்துக் கொள்ளும் நீங்கள், அதில் ஆழமாகப் போகாதது மட்டுமன்றி, தீவிரவாதிகளின் பிரச்னைக்குத் தீர்வாக அல்லாவிட்டாலும் 'கன்வின்ஸிங்' ஆகவாவது எதையும் முன் வைக்கவில்லையே?*

மணிரத்னம் : ஐம்பது ஆண்டு காலப் பிரச்னைக்கு இன்னதுதான் தீர்வு என்று ஒரு காட்சியிலோ, ஒன்றிரண்டு வரி வசனம் மூலமோ காட்டி விட முடியாது. பிரச்னையை, மக்கள் மத்தியில் கொண்டு போகிற முயற்சியாகவே இதை நான் செய்திருக்கிறேன். நம் அரசியல்வாதிகள், இது குறித்து செய்திருப்பவை சில; செய்யத் தவறியவை சில. இது பற்றி அவர்கள் சீரியஸாக சிந்திக்க வேண்டிய தருணம் வந்து விட்டது என்று நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

கேள்வி : *இந்தப் பிரச்னை குறித்து, அரசாங்கம் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

மணிரத்னம் : இந்தப் பிரச்னைக்குத் தீர்வு என்பது அத்தனை சுலபமானது அல்ல! எளிதான தீர்வு ஒன்று இருக்கு



மானால், நம் நாட்டுத் தலைவர்கள், இத்தனை காலம் அதைச் செய்திருப்பார்களே! இது மிகவும் சிக்கலான பிரச்னை. தீர்வும் அப்படிப்பட்டதுதான்! அங்கே, போதுமான அளவு பொருளாதார வளர்ச்சி இல்லை. அங்கே குடிபெயர்கிற மற்றவர்கள், அந்த மக்களின் வேலை வாய்ப்புகளைப் பறித்துக் கொண்டு விடுகிறார்கள். அங்கேயிருந்து ஆயில், டீ போன்ற இயற்கை வளங்களை நாட்டுக்கும், உலகுக்கும் அளிக்கிற அப்பகுதி மக்களின் பங்களிப்புக்கு ஏற்ப பிரதிபலன்கள் அளிக்கப்படுவதில்லை. போதிய கல்வி அறிவு இல்லை. நாடு சுதந்தரமடைந்த போது, அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அதனால், இன்னும் சும்மா இருக்கக் கூடாது என்று அவர்கள் குரல் எழுப்புகிறார்கள். ஒரு பிரிவினர், அரசின் கவனத்தை ஈர்க்க தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். இந்தப் பிரச்னைகளையெல்லாம் சட்டத்தாலும், வன்முறையாலும் தீர்த்து விட முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் வெறுப்பை, உணர்வுபூர்வமான நெருக்கத்தின் மூலமாக மாற்ற வேண்டும். படத்தில் நான் இந்த பாயிண்டைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

கேள்வி : படத்தில் தீவிரவாதத்துக்கு எதிரான வாதங்கள் பலமாக இல்லையே?

மணிரத்னம் : நான் பிரசாரப் படம் எடுக்கவில்லை. இரண்டு பாயிண்ட் ஆஃப் வியூவையும் சொல்லியிருக்கிறேன். படத்தின் ஹீரோ, சாதாரண இந்தியப் பிரஜையின் பிரதிபலிப்பு. நம்மைப் போல ஒருவன். நமக்குள்ள உணர்வுதான் அவனுக்கும். ஹீரோயின், மாறுபட்ட பிரச்னை கொண்ட பிரதேசத்திலிருந்து வருபவள். அவளுடைய பிரச்னையின் ஆழம் அவனுக்கும், நமக்கும் தெரியாது. அவனுடைய காதல், தேசப்பற்று இரு நூல்களையும் திரித்து, இந்தக் கதையைப் பிரசார நெடியில்லாமல், வெகு யதார்த்தமாய்ச் சொல்லியிருக்கிறேன்.

கேள்வி : படத்தின் கிளைமாக்ஸை எடுத்துக் கொள்வோம். மனித வெடிகுண்டான மனீஷா, ஜனாதிபதியைக் கொல்வது போல முடித்தால், சென்சார் பிரச்னை வரும்! காதலுக்காக, தனக்குத் தரப்பட்ட பணியை நிறைவேற்றாமல் விட்டு விட்டால், தேசிய விருது பெற்ற 'டெரரிஸ்ட்' படம் போல ஆகிவிடும். எனவேதான் ஷாருக் கான், மனீஷா இருவரும் வெடிகுண்டுக்கு பலியாவது போல முடித்து விட்டீர்களா?

மணிரத்னம் : சுதந்தரப் பொன் விழா ஆண்டில் ஜனாதிபதி கொலை முயற்சி ஏதும் நடக்காதபோது, அப்படிக் காட்டுவது சரியில்லை! மேலும், கிளைமாக்ஸ் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நான் முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்வது இல்லை. கதையின் போக்கிலேயே போய், எப்படி எப்படியெல்லாம் கிளைமாக்ஸ் சாத்தியம் என்று பார்த்து, அவற்றுள் கதைக்குப் பொருத்தமானதை நான் தேர்ந்

தெடுக்கிறேன். இந்தப் படத்துக்கும் இது பொருந்தும்.

கேள்வி : அகில இந்திய வானொலியில் வேலை பார்க்கிற ஹீரோ, நக்கீரன் கோபால் வீரப்பனைப் பார்க்கப் போவதைப் போல, தீவிரவாதிகளைச் சந்திக்கப் போகிறாரே! அது எவ்வளவு தூரம் நடைமுறை சாத்தியம்?

மணிரத்னம் : அகில இந்திய வானொலியில் வேலை பார்த்தாலும் அவன் துணிச்சலான இளைஞன்; தேசம் பற்றிய அக்கறை கொண்டவன்; எனவே தீவிரவாதிகளைச் சந்திக்க விரும்புகிறான், சந்தித்துப் பேசுகிறான். அது அவனுடைய தனிப்பட்ட ஆர்வத்தின் காரணமாகச் செய்கிற முயற்சி. அதனால்தான் அவனுடைய அதிகாரி கூட, "நீ ரேடியோவில் வேலை பார்க்கிறே! நியூஸ் பேப்பரில் இல்லை!" என்று அவனுக்குச் சுட்டிக்காட்டுகிறார். அவனது ஆர்வம் காரணமாக தீவிரவாதிகளைச் சந்தித்து, பேட்டி கண்டாலும், அது ஒலிபரப்பப்படுவதாகக் காட்டவில்லையே!

கேள்வி : இந்தப் படத்தின் லொகேஷன்களுக்காக ரொம்ப சிரமப்பட வேண்டியிருந்ததா?

மணிரத்னம் : எல்லாப் படங்களுக்கும் போலத்தான் இந்தப் படத்துக்கும் சிரமம் எடுத்துக் கொண்டேன். லடாக் எக்ஸ்பீரியன்ஸ் கொஞ்சம் புதுசு. காரணம் லடாக் பதினோராயிரம் அடி உயரம். அத்தனை உயரத்தில் ஆக்ஸிஜன் ரொம்பக் குறைவு. அங்கே போய்ச் சேர்ந்தபின், அங்கேயுள்ள சூழலுக்கு நம்மை அட்ஜெஸ்ட் செய்து கொள்ளுவதற்கு, இரண்டு நாள் கம்ப்ளீட் ரெஸ்ட் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அப்புறம் சைனா பார்டரில், ஓர் ஏரிப் பகுதியில் ஷூட்டிங். அது பதினைந்தாயிரம் அடி உயரம். போகிற வழியில் ஒரு நாள் ராணுவ கேம்ப் ஒன்றில் தங்கிவிட்டுப் போக வேண்டியிருந்தது. பனி, குளிர் என்று ரொம்பக் கஷ்டமாக இருந்தது. ஒரு வாரம் இருக்கிற நமக்கே இத்தனை கஷ்டம் என்றால், நிரந்தரமாக அங்கே கடும் குளிரில் பணியாற்றும் ராணுவ வீரர்களின் நிலைமை எப்படி இருக்கும்? அத்துடன் ஒப்பிட்டால், எங்கள் கஷ்டமெல்லாம் ஒன்றுமே இல்லை!

கேள்வி : பொதுவாக உங்கள் படங்களில், ஹீரோக்களின் காதல், தடாலடியாய் இருக்கிறதே! ஹீரோயின் தன்னை விரும்புகிறாரா இல்லையா என்று கவலையே படாமல், துரத்தித் துரத்திக் காதலிக்கிறார்களே!

மணிரத்னம் : எனக்கே தெரியவில்லை. (சிரிப்பு)

கேள்வி : நீங்கள் ரொம்ப மென்மையான மனிதர். உங்கள் ஹீரோக்கள் நேரெதிராய் இருப்பது விசித்திரமாய் உள்ளது?

மணிரத்னம் : வெளியில் பார்த்து யாரையும் எடை போட்டு விடக் கூடாது. உள்ளுக்குள்ளே என்ன இருக்கோ யாருக்குத் தெரியும்? (சிரிப்பு)

கேள்வி : உங்கள் படத்தின் விமர்சனங்களை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்ளுவீர்கள்? அவை உங்களை பாதிக்குமா?

மணிரத்னம் : கண்டிப்பாக என்னைப் பாதிக்கும். நான் ரொம்ப சென்சிடிவ் டைப். ரசிகர்களுடன் உட்கார்ந்து, என்னால் என் படத்தைப் பார்க்க முடியாது. சினிமா என்பது டைரக்டரின் குழந்தை போல. பிறந்தவுடன் அதைப் பார்த்து விட்டு, யாராவது மூக்கு சரியில்லை; காது சரியில்லை என்று குறை சொன்னால் அதை அந்தக் குழந்தையின் தாயால் தாங்கிக் கொள்ள முடியுமா? என் நிலைமையும் அப்படித்தான். ஒரு டைரக்டர், தன் படத்திலிருந்து விலகி, எட்ட நின்று பார்த்தால்தான் விமர்சன

பாதிப்புக்குள்ளாகாமல் இருக்க முடியும்.

கேள்வி: இத்தனை வருட அனுபவத்தில் அந்தப் பக்குவம் உங்களுக்கு வந்திருக்க வேண்டுமே?

மணிரத்னம்: இல்லை! இப்போது இன்னும் மோசமாகியிருக்கிறது. ஒரு படத்துக்கு, அடுத்த படம் இன்னும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இதனால் உழைப்பும், ஈடுபாடும் அதிகமாகிக் கொண்டே போகிறது. அது கடும் விமர்சனத்துக்குள்ளாகிற போது பாதிப்பு ஏற்படுகிறது.

கேள்வி : உங்கள் உழைப்பு, ஆர்வம், ஈடுபாடு இத்தனையையும் மீறி, திருடா திருடா உள்ளிட்ட சில படங்கள் தோல்வியடைந்தது ஏன்?

மணிரத்னம் : சினிமா எடுப்பது, நிறைய மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காகத்தான். இதில் இரண்டாவது கருத்துக்கே இடமில்லை. ஒரு சப்ஜெக்டைத் திரையில் சொல்லுகிற போது, அதை மக்கள் புரிந்து கொள்வார்களா? ஏற்றுக் கொள்வார்களா? என்று யோசித்துத்தான் ஒரு கதையை, காட்சிகளைத் தீர்மானிக்கிறேன். ஆனால் என்னையும் மீறி, என்னையறியாமலேயே செய்துவிடும் தவறுகளால், தோல்வி ஏற்படுகிறது. ரோஜா போன்ற படங்களைத்தான் என்னால் தரமுடியும் என்ற இமேஜை மாற்றும் எண்ணத்துடன், இதுதான் கதை, திரைக்கதை என்று கட்டுப்பாடுகளை வைத்துக் கொள்ளாமல் சினிமா என்ற மீடியத்தை முழுச் சுதந்தரத்துடன் பயன்படுத்தி, ஜாலியாக ஒரு படம் எடுக்க விரும்பி எடுத்தது தான் திருடா, திருடா. ஆனால் அது தவறு என்று பின்னால் புரிந்து கொண்டேன். எனக்கு பதிலாக வேறு யாராவது அந்தப் படத்தை எடுத்திருந்தாலோ, ரோஜாவுக்கு முன்பாக, நானே அதை எடுத்திருந்தாலோ மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்களோ என்னவோ? அதே நேரம், தோல்விக்கான பழியை நான் வேறு யார் மீதும் போட மாட்டேன்!

கேள்வி : காஷ்மீர் பிரச்னையை வைத்து எடுத்த ரோஜா, தமிழ்நாட்டில் ஹிட் ஆனது. ஆனால், தமிழ்நாட்டின் பிரம்மாண்டமான இரு பர்ஸனாலிடிகளை வைத்து எடுத்த 'இருவர்' இங்கே ஏற்றுக் கொள்ளப்படவில்லையே?

மணிரத்னம் : நான் தப்பாய்ச் சொல்லியிருப்பேன் என்று நினைக்கிறேன். வரலாறை அப்பட்டமாய்க் காட்டி விட்டேனோ என்று தோன்றுகிறது. நண்பர்களை, ஒரு கட்டத்தில் இரு துருவங்களாய்க் காட்டாமல், யதார்த்தமாகக் காட்டியிருக்கலாமோ என்று நினைக்கிறேன். நான் சந்தித்த ஒவ்வொருவரும் 'இருவர்' ஏன் வெற்றி பெறவில்லை என்று ஆளுக்கு ஒவ்வொரு காரணத்தைச் சொன்னார்கள். அதில் நாடகத்தனத்தைச் சற்றுக் குறைத்திருக்கலாம் என்பது பிற்பாடு எனக்குத் தோன்றிய காரணம்.


கேள்வி : தேசிய அளவிலான பிரச்னைகளைக் கையாளுகிற டைரக்டர் என்ற முறையில், உங்களுக்குப் பொறுப்புணர்ச்சி அதிகரித்துள்ளதாக நினைக்கிறீர்களா?

மணிரத்னம் : அப்படியெல்லாம் இல்லை. எந்த சப்ஜெக்ட் ஆனாலும் பொறுப்புணர்வுடன் கையாள வேண்டிய கடமை இருப்பதாகவே நான் நினைக்கிறேன். இது எல்லா டைரக்டர்களுக்குமே பொருந்தும்.

கேள்வி : உங்களின் மிகச் சிறந்த படம் என்று எதைக் குறிப்பிடுவீர்கள்?

மணிரத்னம் : (சில விநாடிகள் யோசித்து விட்டு) அடுத்தப் படம்தான்!

பேட்டி :
பா. ராகவன், எஸ். சந்திரமௌலி
அட்டை, வண்ணப்படங்கள் :
பிரவீண்குமார்




''நம்ம, குமார் அரசியல்வாதி பிள்ளைங்கிறதை நிரூபிச்சுட்டான்...''
''எப்படி?''
''கணக்குல பெயிலானதுக்கு ஹெட்-மாஸ்டர் கூப்புட்டு அனுப்பினார். போய்ட்டு வந்ததுக்கப்புறம் என்ன விஷயம்ன்னு கேட்டா, சும்மா மரியாதை நிமித்தமான சந்திப்புங்கிறான்!''
– மகாராம் திருப்பதி

'தேவதா குபேர உச்சாடனம்'
(பூஜா உபதேசம்)

அன்றைய ஆண்டவன் முதலானோரும் செய்து அரிய பெருமைகளை அடைந்த பூஜைகள்தான் உச்சாடனம். ஈரேழு பதினான்கு லோகங்களிலும் என்னை மீறிய செல்வந்தன் லக்ஷ்மிகடாக்ஷம் பெற்றவன் இருக்கக் கூடாது என்று குபேரன் செய்த உச்சாடன பூஜை இது. அதே குபேரன் வீட்டில் உள்ள லக்ஷ்மிகடாக்ஷம் பூரணமாய் பொங்கி வழிய வேண்டும் என்பதற்காக லங்கேஸ்வரன் ராவணனும் செய்த பூஜைதான் உச்சாடனம். இதனை எவர் செய்கின்ற இதயவலு, இணக்கமான ஜாதக அமைப்பு இயலுமான தீய பழக்கமற்ற தன்மைகள் படைத்திருக்கின்றாரோ அவர் குபேர செல்வத்தை இந்த உபதேசத்தால் அடைவது உறுதி. தொடர்ந்து ஒரு மணி நேரம் 2 மணி நேரம் பூஜையை செய்கின்ற வலுவும், எல்லையில்லா செல்வ நிலை அடைகின்ற துடிப்பும் இருக்க வேண்டும். எவர் ஒருவருக்கு இறைவனால் அவ்வித விதி அமைப்பு இடப்பட்டு இருக்கின்றதோ அவர் நிச்சயமாக இந்த பூஜா உபதேசம் பெறுகின்ற வாய்ப்பை அடைந்தே தீருவார். அவருக்குத்தான் இந்த விளம்பரம் கண்ணில்படும். உரிய காலத்தில் ஜாதக நகலுடன் விண்ணப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இந்த அரிய பூஜை இன்றைய நிலையில் அறிந்தார் இல்லையோ என்று எண்ணும் அளவிற்கு அரிகிவிட்டனர். வேற்று கிரகங்களுக்கு விண்வெளி விமானங்கள் விடப்படும் இந்த நாளில் கூட எண்ணியதை ஈடேற்றிட எவ்வித உறுதியும் இல்லை. இந்த அரிய பூஜையால் கோடான கோடி செல்வம் கேட்கினும் உரியபடி செய்திட உடனே கிடைக்கும். அத்தகைய அரிய கலை ஒன்று தேய்ந்து மறைந்து விடலாகாது. உரியவர்கள் அறிந்து ஆண்டவன் அனுமதியோடு அற்புத குபேர சரித்திரம் படைக்க வேண்டும் என்பதற்காகவே இதனை வெளியிடுகின்றோம். உரிய 15.10.98 தேதிக்குள் உங்கள் ஜாதக நகலுடன் விண்ணப்பம் செய்யுங்கள். தீய பழக்கங்களான- மதுபானம் செய்தல், புகைபிடித்தல், புகையிலைபோடுதல், பொடி போடுதல் இருக்கக் கூடாது. நல்லொழுக்கம் உடையவராயினும் தினசரி பூஜை செய்யும் பழக்கம் உள்ளவராயிருப்பினும்- ஜாதகநகலுடன் உரிய காலத்திற்குள் மனு செய்து கொள்ளுங்கள். அத்தேதி தவறி வரும் மனுக்கள் கவனிக்கப்படமாட்டாது. ஏனெனில் அவை கடவுள் அனுமதியற்றவை என்று பொருள். இப்பூஜா உபதேசம் பெற்று உயர்வு அடையும் விதி அமைப்பு உடையவராயின் உரிய தேதிக்குள் ஜாதக நகலுடன் மனுச் செய்து கொள் வார்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்,
ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி,
பிளாட் எண்: 204, அண்ணாநகர்,
மதுரை-625 020.
தொலைபேசி: 533412, 534634





1998 செப்டெம்பர் 6
வெகுதான்ய ஆவணி 21
மலர் : 57
இதழ் : 6

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



கள்ளச் சாராயம் கற்பித்த பாடம்!

தர்மபுரி அருகே நிகழ்ந்த கள்ளச் சாராய மரணங்கள் தமிழக அரசை ஒரு உலுக்கு உலுக்கியிருப்பது தெளிவாகத் தெரிகிறது.


காவல் துறையின் மதுவிலக்குப் பிரிவு அதிகாரி பணிமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தர்மபுரி மாவட்ட காவல்துறை அதிகாரிகள் இருவர் மாற்றப்பட்டிருக்கிறார்கள்; பதினைந்து காவல் துறை ஊழியர்கள் தாற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

கள்ளச் சாராய வலைப் பின்னல் குறித்து அச்சமின்றித் தகவல் தரும்படி பொதுமக்களை விளம்பரம் மூலம் அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. தர்மபுரி பகுதியில் தண்டோரா அறிவிப்புச் செய்து, கள்ளச்சாராயம் அருந்தியவர்களைத் தாமதமின்றி மருத்துவமனைக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறது.

சட்டத்தை மீறி குற்றம் இழைப்போருக்கு நஷ்ட ஈடு தர வேண்டியதில்லை. எனினும் மனிதாபிமான கண்ணோட்டத்துடன் பிரச்னையை அணுகி, எதிர்க்கட்சிகளின் வற்புறுத்தலை ஏற்று, அரசு நஷ்டஈடு அறிவித்திருக்கிறது.

இந்த உடனடி நடவடிக்கைகள் தவிர, நீண்டகால நோக்கில் மதுவிலக்குச் சட்டத்தை மேலும் கடுமையாக்கவும் கள்ளச் சாராய வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கவும் முடிவெடுத்துள்ளது தமிழக அரசு.

தர்மபுரி மரணங்களுக்குக் காரணமாய் அமைந்த பயங்கரமான சாராய வலைப் பின்னலில் உள்ள இரண்டு முக்கியஸ்தர்கள் அ.தி.மு.க. சார்புடையவர்கள் என்கிற செய்தி தெரிய வந்திருக்கிறது. அதிலும் ஒருவர் பஞ்சாயத்து கவுன்சிலர்! இந்த இருவர் பேரிலும் வழக்கு பதிவாகியுள்ள நிலையில், இச்சம்பவம் குறித்து அ.தி.மு.க எழுப்பும் கூக்குரல் பலவீனமாகவே ஒலிக்கிறது.



ஜெயலலிதா அடக்கி வாசிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

தர்மபுரியில் நடந்த சம்பவம் தமிழக அரசுக்குத் தலைகுனிவுதான் என்றாலும் உடனடியாகவும் சரியாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது ஆறுதல்.

இச் சம்பவம் குறித்து மாநில மனித உரிமைக் கழகம் விசாரணை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. குற்றத்தை நிரூபிக்கும் நோக்கில் மட்டுமின்றி, இது போன்ற சோகங்கள் நிகழ்வதற்கான பல்வேறு காரணங்களையும் கமிஷன் ஆராய்ந்து அறிக்கை தரும்.

இந்த அறிக்கையையும் கமிஷனின் சிபாரிசுகளையும் தமிழக அரசு கவனமாகவும் தாமதமின்றியும் ஏற்றுச் செயல்படுத்த முன் வர வேண்டும்.

பயமுறுத்தும் புனருத்தாரணம்!

போக்ரான் பரிசோதனைகளைத் தொடர்ந்து அயல்நாடுகள் நம் பேரில் பொருளாதாரத் தடைகளை அறிவித்தன. அப்போதெல்லாம் 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கதையாக, 'தடைகள் நம்மை பாதிக்காது' என்று அரசுத் தரப்பில் அறிக்கைகள் வந்தன. ஆனால், உள்ளூர அச்சம் கொண்ட அரசு, 'புனருத்தாரண பத்திரங்களை' விற்பனைக்குக் கொண்டு வந்து, அதன் மூலம் அந்நிய நாட்டு (டாலர்) டெபாஸிட்களைப் பெற சுறுசுறுப்பாக முனைந்தது.

இந்தப் பத்திரங்கள் **(Resurgent India Bonds)** அவ்வளவாக விலை போகாது என்ற அவநம்பிக்கை பொய்க்கும்படி, அவற்றின் மூலம் நான்கு பில்லியன் டாலர் அரசுக்குக் கிடைத்துள்ளது.

வளைகுடா நாடுகள், தென்கிழக்கு ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பகுதிகளில் வாழ் இந்தியர்கள்தான் இப்பத்திரங்களில் அதிகமாக முதலீடு செய்துள்ளனர்.

எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக அளவில் இத்திட்டம் வெற்றி அடைய என்ன காரணம்?

ஐந்தாண்டு கால முதலீடான இந்தப் பத்திரங்களுக்கு 7.75 சதவிகிதம் வட்டி வழங்குகிறது அரசு! பத்திரத்தை விற்று முதலீட்டைப் பெறும் வங்கிக்கு 1.5 சதவிகிதம் கமிஷனும் தருகிறது.

இதர அயல்நாட்டு முதலீடுகளுக்கு வங்கிகளில் தரப்படும் வட்டி 5.75 சதவிகிதம்தான். அப்படியிருக்கையில், இரண்டு சதவிகிதம் கூடுதல் வட்டி கிடைக்கிற பத்திரங்களில் முதலீடு செய்து ஆதாயம் அடைய அயல்நாட்டு முதலீட்டாளர்கள் விரும்புவதில் ஆச்சர்யம் ஏதுமில்லை.



எனினும், நான்கு பில்லியன் டாலர் நம் நாட்டுக்கு முதலீடாக வந்து சேர்ந்துள்ளதாக நாம் மகிழ்ந்துவிட முடியாது!

'ஏற்கெனவே இந்திய வங்கிகளில் போட்டு வைத்திருந்த பணத்தை எடுத்துத்தான் பெரும்பாலான அயல்நாட்டு இந்தியர்கள் கூடுதல் வட்டி கருதி இப் பத்திரங்களை வாங்கியிருக்கிறார்கள். ஆகையால் புதிய முதலீடு வந்து குவிந்துள்ளதாக நாம் எண்ணிக் கொள்ளக் கூடாது' என்று சில நிபுணர்கள் எச்சரித்துள்ளார்கள்.

தவிர, அயல்நாட்டு வங்கிகளில் 7 சதவீதத்துக்குக் கடன் பெற்று, இதில் 7.75 சதவீத வட்டிக்கு முதலீடு செய்திருப்போரும் உண்டு.

இந்த நான்கு பில்லியன் டாலருக்கு நாம் தர வேண்டிய 7.75 சதவிகித வட்டி என்பது ஆண்டு தோறும் 310 மில்லியன் டாலர் என்கிற அளவைத் தொடும். டாலரில் தரப்பட வேண்டிய இந்தக் கூடுதல் செலவை அரசு எப்படிச் சமாளிக்கும்...? அந்த அளவுக்கு ஏற்றுமதி அல்லவா பெருக வேண்டும்!

பெற்றுள்ள டெபாஸிட்களை முதலீடு செய்வதன் மூலம் லாபம் ஈட்டி வட்டியைச் செலுத்தி விடலாம் என்பது உண்மைதான். ஆனால் நான்கு பில்லியன் டாலர்கள் எப்படியெல்லாம் முதலீடாகும் என்பது குறித்து அரசு எதையும் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. பெரும்பகுதி பணம் மின் உற்பத்தி, சாலைகள் போன்ற அடிப்படை வசதி பெருக்கத்துக்குப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது முறையாகப் பயன்படுத்தப் பட வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, அவ்வாறு பயன்படுத்தினாலும் உடனடியாகவும் துரிதமாகவும் அதன் பலன்களை நாம் அனுபவிக்க முடியாது. உற்பத்திப் பிரிவில் முதலீடாகிற தொகையைப் போல் வேகமாகப் பல்கிப் பெருகாமல் நீண்டகால அடிப்படையில்தான் பலன் தரும்.

இதற்கிடையே, ஆண்டுதோறும் வட்டி செலுத்துவதுடன் ஐந்தாண்டுகளின் முடிவில் புனருத்தாரண பத்திரங்கள் முதிர்ச்சி அடையும்போது அசல் தொகையையும் அரசு திருப்பித் தர வேண்டும். அப்போது டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு மேலும் வீழ்ச்சி அடைந்திருக்குமேயானால் ஒட்டு மொத்த செலவுச் சுமையை நாடு தாங்குமா...?

'அப்போது ஆட்சியில் இருக்கப் போகும் அரசின் தலைவலி அது' என்று பி.ஜே.பி எண்ணிக் கொண்டிருந்தால், அது வடி கட்டிய தேசத் துரோகம்! ○



1



2



3



5



6



4



7



8

'நான் சினிமா நடன இயக்குனரானால்...!' என்று ஒருகணம் யோசித்து விட்டுப் பதில் சொல்லுங்கள் என்று வாலாஜாபேட்டையிலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக்கல்லூரி மாணவியரிடம் கேட்டபோது...

1. எ. சுதா (பி.எஸ்ஸி. கணிதம், மூன்றாமாண்டு):

நான் சினிமா நடன இயக்குனரானால், பாரம்பரியமிக்க, நம் நாட்டுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய பரதநாட்டியம் மற்றும் இந்திய நடன கலைகளுக்குத்தான் முக்கியத்துவம் தருவேன். இவற்றைச் சார்ந்தே என் நடன அசைவுகள் அமையும்.

2. பி. சாவித்ரி (பி.ஏ. வரலாறு):

பெண்களைக் கொச்சைப்படுத்தும் ஆபாச ஆடைகளை முதல்ல ஒழிப்பேன். பாடல் வரிகளில் ஆபாசம் இருந்தாலும் அதற்கு நடனம் அமைக்க முடியாதுன்னு சொல்லிடுவேன். இப்படி எல்லாம் அமைச்சாத்தான் பொழைப்பு நடக்கும்னா... அந்த பொழப்பே வேணாம்னு 'கும்பிடு' போட்டுடுவேன்.

3. ஆர். உதயகுமாரி (பி.ஏ. வரலாறு):

இளைஞர்களை நல்வழிப்படுத்தும் வகையில்தான் டான்ஸையும் அமைப்பேன். தலையை பிய்ச்சுக்கிறது, கை, காலை உதறுவது எல்லாம் நம்ம கலாசாரம் இல்லை! தமிழ்க் கலாசாரம் என்னவோ அதைத்தான் செய்வேன்!

4.ஜெ. சித்ரா (பி.ஏ, வரலாறு, மூன்றாமாண்டு):

நாடு முன்னேறுவதற்கு எது சார் அறிகுறி? வெஸ்டர்ன் டான்ஸ்தாங்க! இன்றைய இளைஞர்களுக்கும் அதுதானே பிடிக்குது! அதைச் செய்யாம வேற என்னத்த செய்யறது. அதுக்காக ஆபாச டிரஸ்ஸில்தான் வெஸ்டர்ன் பண்ணனும்னு அவசியம் இல்லை. ஆபாசம் இல்லாம அதை அழகாக ஆட முடியும்!

5. இ.ஜி. பரிமளா (பி.ஏ. வரலாறு):

இப்ப வருகிற பாட்டுக்கும், டான்ஸ்க்கும் என்ன சம்பந்தம் இருக்கு? ஒரு பக்கம் பாட்டு ஓடுது, இன்னொரு பக்கம் ஹீரோவும், ஹீரோயினும் ஓடிட்டே இருக்காங்க. ஒரு வேளை நான் வந்தா... முதல்ல பாட்டுக்கும் டான்ஸ்க்கும் சம்பந்தம் இருக்கறா மாதிரி செய்வேன்.

6. டி.. மகாலட்சுமி (பி.எஸ்ஸி, பாட்டனி):

முதல்ல பத்திரிகைக்காரங்களைத்தான் திருத்தணும்ங்க. நாங்க கலை நோக்கோடு அமைக்கற காட்சிகளைவிட்டு விட்டு, ஆபாசமா எந்த மூவ்மெண்ட் இருக்குதோ அந்த ஸ்டில்லத்தான் போடுறாங்க. நல்லா டான்ஸ் அமைக்கறவங்கள பேட்டி எடுத்து எழுதுங்க. அப்போ எல்லாருமே நல்லா பண்ணுவாங்க...

7. கே.மங்களா (பி.எஸ்ஸி. பாட்டனி):

எதையும் மாத்த மாட்டேன். இப்ப என்ன இருக்கோ... அதுதான்! இல்லேன்னா பொழைக்க முடியாதுங்க!

இன்றைய இளையவர்களைக்

8. எ. பேபி (தமிழ் இலக்கியம்):

நாம என்னதான் டான்ஸ் நல்லா பண்ணினாலும்... அதை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு நடிகர், நடிகையோடது தான்! மந்த்ரா ஆடறத எல்லாம் சகிக்கவே முடியல! உடல் அசைவுகளும் முக பாவனைகளும் சரியா வர்றாப்போல டான்ஸ் அமைப்பேன்.

9. ஜெ.ஆர். ஜெயந்தி (தமிழ் இலக்கியம்):

முதல்ல ஆபாசத்தைத்தான் ஒழிப்பேன்! ஒரு நடிகை கவர்ச்சியா நடிக்கறதுக்கோ, நல்லா நடிக்கறதுக்கோ டைரக்டர்தான் காரணம் அப்படின்னு சொல்லிட்டு நான் நழுவ மாட்டேன். ட்ரெஸ் எப்படி வேணும்னா இருந்துட்டுப் போகட்டும். ஆனா.. அசைவுகள் அசிங்கத்தின் வெளிப்பாடாக இல்லாம பார்த்துப்பேன்!

10. ஆர்.எஸ். அனுராதா (பி.எஸ்ஸி, கம்ப்யூட்டர் சயின்ஸ்):

இந்தியாவை 'பாரதத் தாய்' என்றும், இங்கே இருக்கும் பெண்களை 'சக்தி' என்றும் சொல்லுகிறார்கள். தமிழ் சினிமா பார்க்கிற யாராச்சும் இந்த ஸ்டேட்மெண்ட்டை ஒத்துப்பாங்களா?' நான் என் டான்ஸ் மூலமா அதை ஒத்துக்க வைப்பேன். ஏன்னா,

காலேஜ் கார்னர்

பெண்களைக் கீழ்த்தரமா டான்ஸ் ஆட வைக்க மாட்டேன்.

11. டி. தமிழரசி (பி.எஸ்ஸி, கம்ப்யூட்டர் சயின்ஸ்):

கலை, கலைன்னு சொல்லிட்டு பரத நாட்டியத்த மட்டும் ஆடிக்கிட்டு இருந்தா யாரும் தியேட்டருக்கு வர மாட்டாங்க! ரம்பா டான்ஸும் நல்லாத்தான் இருக்கு ஜனங்களுக்கு எது வேணுமோ அதைக் கொடுப்பேன். ஏன்னா எனக்கும் பணம் வேணும். அதுக்கப்புறம்தான் மத்தது எல்லாம்!

12. பி. புவனேஸ்வரி (பி.எஸ்ஸி, கம்ப்யூட்டர் சயின்ஸ்):

நான் மட்டும் அப்படி ஆயிட்டேன்னு வச்சுக்குங்க. உலகத்துல இருக்கிற அத்தனை டான்ஸையும் படத்துக்கு ஒண்ணா அறிமுகப்படுத்தி புதுமை செய்வேன்... புரட்சி செய்வேன். டைரக்டர்கிட்டயும் சொல்லிடுவேன்... 'இதைத்தான் செய்வேன். இல்லேன்னா போயிட்டே இருன்னு!' ஏன்னா.. எனக்குப் பணம் முக்கியம் இல்லை! அதை சம்பாதிக்க நிறைய வழி இருக்கு!

13. எஸ். கோமதி (பி.எஸ்ஸி, கம்ப்யூட்டர் சயின்ஸ்):


யாராச்சும் நூறு பேரோட சேர்ந்து டூயட் பாடுவாங்களான்னு யோசிச்சுப் பாக்கணும்! டூயட்டே டூ மச்! இருந்தாலும் மனிதர்களின் மகிழ்ச்சிக்காகத் தேவையான அளவில் யதார்த்தமாகத்தான் டான்ஸ் அமைப்பேன்.

14. சி.லதா (தமிழ் இலக்கியம் பி.ஏ):

தமிழ்நாட்டுல என்ன தமிழா பேசறாங்க. நடு நடுவே இங்கிலீஷ் இல்லாம பேசறோமா! அதப்போலதான் சினிமாவும். சமூகம் எதுவோ. அதைத்தான் சினிமாவும், டான்ஸும் பிரதிபலிக்குது. ஆனா, ஆடுற ஆட்டத்துக்கு அர்த்தம் இருக்கணும்.


9


10


13


11


12


14


15




கெடுக்கும் சினிமா!



17



18



19



21



20



22



23

15. எஸ். மதுமதி (பி.ஏ. தமிழ் இலக்கியம்):

என்னோட அப்பாவே என்னைக் கூப்பிட்டு 'அந்தப் படத்துல பாட்டு, டான்ஸ் நல்லாருக்காமே, பேமிலியோட போலாமா?'ன்னு கூப்பிடுற அளவுக்கு பண்ணுவேன். ஒளி – ஒலியில எதை சார் முதல்ல காட்டுறாங்க. பாட்டையும் டான்ஸையும்தான். அதைப் பார்த்த உடனேயே இந்த படத்துக்குப் போகலாமா, வேண்டாமான்னு வீட்டுல தீர்மானம் பண்ணிடறாங்க. அதனால ஒரு படத்துக்கு டான்ஸும், பாட்டும்தான் முக்கியம் இல்லியா! எடுத்தவுடன் அனைவரையும் கவர்ந்து தியேட்டருக்கு இழுத்துட்டு வர்றாப்போல நடனத்த டிஸைன் பண்ணுவேன்.

16. கே. தாமரைச்செல்வி (பி.எஸ்ஸி, விலங்கியல்):

அப்ப பத்மினி இருந்தாங்க. பாட்டும், நடனமும் அழகா அமைச்சாங்க. அந்த காம்பினேஷன்ல நடிகையும் பாடல் வரிகளும் அமையட்டும். ஒரு பத்மினி என்ன, ஓராயிரம் பத்மினிகளை நான் உருவாக்குவேன் சார்!

17. எம். சித்ரா (பிஎஸ்ஸி, பாட்டனி):

ஜென்டில்மேன் படத்துல வர்ற 'சிக்கு புக்கு ரயிலே' பாட்டுதான் உதாரணமா சொல்ல முடியும். அதுல பிரபுதேவா தன் ப்ரண்ட்ஸ்களோடு சேர்ந்துக்கிட்டு கௌதமியைத் துரத்தி, துரத்தி 'டீஸ்' பண்ணுவாரு. இது மாதிரி சினிமா காமிக்கறதுதான் இன்றைய இளைஞர்களை கெடுத்துக் குட்டிச் சுவராக்கி 'சரிகா ஷா மரணம்!' போன்ற நிகழ்ச்சிகளுக்குக் காரணம் ஆகி விடுகிறது. இந்த மாதிரி இளைஞர்களைக் கெடுக்கற எதையும் இந்த டான்ஸ் மாஸ்டர் செய்ய மாட்டா!

18. பி. இளநங்கை (பி.எஸ்ஸி, பாட்டனி):

அந்தக் காலமோ, இந்தக் காலமோ.. சினிமாங்கறது எப்பவும் பொழுது போக்கு சமாசாரம்தான். மெட்ராஸ்ல பொண்ணுங்கல்லாம் மினி ஸ்கர்ட்ல சுத்தும்போது, நான் என்ன, யாரா இருந்தாலும் கிளாமராத்தான் டான்ஸ் மூவ்மெண்ட் வைப்பாங்கங்கறேன். அதுல என்னங்க தப்பு இருக்கு? கிளாமரும் லைஃப்ல ஒரு பார்ட்தான். அது இல்லாம டான்ஸா.. சான்ஸே இல்லீங்க!

19. எஸ். உமா (பி.எஸ்ஸி விலங்கியல்):

'சலங்கை ஒலி' கமல்ஹாசன் போல 'வைதேகி காத்திருந்தாள்' ரேவதி போல டான்ஸ்ன்னா பேசப்படுறாப்போல பண்ணுவேன். இப்பல்லாம் யார் சார் டான்ஸ பார்க்கறாங்க.. நடிகர், நடிகைகள் என்ன டிரஸ் போட்டுருக்காங்கன்னு பார்க்குறாங்க. நடிப்புன்னா கமல், டைரக்‌ஷன்னா பாரதிராஜா என்பது போல டான்ஸ்ன்னா இவதாம்பான்னு உதாரணம் காட்டற மாதிரி பண்ணணும்! *

20. டி. லக்ஷ்மிதேவி (பி.எஸ்ஸி, விலங்கியல்):

தில்லானா மோகனாம்பாள் படம் பார்த்தீங்களா சார்? அதுல 'நலம்தானா' பாட்டுல என்ன சூழ்நிலைங்கறத தன்னுடைய முக, உடல் அசைவுகளிலே காட்டிடுவாங்க பத்மினி. உணர்ச்சிகள் கொப்பளிக்கறாப் போலதான் டான்ஸ் அமைப்பேன். அதேசமயம் நம் நாட்டுப் புற கலைகளுக்கும் புத்துயிர் கொடுப்பேன்.

21. எம். ராபியா நசீரின் (பி.எஸ்ஸி, விலங்கியல்):

பொற்காலத்துல பேர் எடுத்த மீனாவுக்கு கெட்ட பேர் வந்தது நாம் இருவர் நமக்கு இருவர்ல ஆடின கிளாமரான டான்ஸாலதான். டான்ஸ் டைரக்டரால ஒருத்தர் பேர கெடுக்கவும் முடியும், நல்ல பேர எடுக்க வைக்கவும் முடியும். நான் யார் பேரயும் கெடுக்கறாப்ல பண்ண மாட்டேன். பரதம்,

வெஸ்டர்ன், இந்தியன்னு கலந்து கதம்பமா தருவேன்!

22. ஆர். மைதிலி (பி.ஏ. தமிழ் இலக்கியம்):

ஹீரோ, ஹீரோயின் உடன் ஆடுகிற குரூப் டான்ஸை முதல்ல ஒழிப்பேன். ஹீரோயின்கள் படம் முழுக்க கவர்ச்சி நடனம் ஆடுவதையும் ஒழிப்பேன். தயாரிப்பாளரும், டைரக்டரும் இதுக்கெல்லாம் ஒப்புக் கொள்ளுவாங்களான்னு நினைச்சாத்தான் வருத்தமா இருக்கு!

23. எ. சலோமி பிரியதர்சினி (பி.ஏ. தமிழ் இலக்கியம்):

ஆண்டவன் அளித்த அற்புதக் கலையான நடனத்தைக் கொச்சைப் படுத்த மாட்டேன். என் விருப்பத்துக்கு மாறா டைரக்டர் எது சொன்னாலும் கேட்க மாட்டேன்.

24. எம். உமா (பி.எஸ்ஸி, கணிதம்):

ஒரு வெஸ்டர்ன், ஒரு கிளாசிக், ஒரு இந்தியன், எல்லாம் கலந்த ஒரு மிக்ஸ்ன்னு ஒரு படத்துல பல வெரைட்டியான டான்ஸை அமைப்பேன். ஜீன்ஸ் படம் மாதிரி ஒவ்வொரு நாட்டுக்கும் போய் ஒவ்வொரு வித டான்ஸ் பண்ணுவேன். ஆல்ப்ஸ் மலை உச்சியிலும், இமயமலையின் சாரலிலும் எடுக்கிற மாதிரி என் டான்ஸ் ரொம்ப 'ஹைடெக்'கா இருக்கும்.




24



25



27



26



28

25. வி. ஸ்ரீதேவி (பி.எஸ்ஸி, கணிதம்)

சில பாட்டு கேக்கறாப்போல இருக்கும், சிலது பாக்கறாப்பல இருக்கும். ரெண்டும் இணையும்போது அது சூப்பர் ஹிட் ஆகும். டைரக்டர் சொல்ற சூழ்நிலைக்குப் பொருத்தமானதைச் செய்து, பாடலும் அமைஞ்சுட்டா போதும்... மேலே சொன்ன மாதிரி பாட்டை பாக்குறாப்போல பண்ணுவேன் சார்!

26. கே. பரஞ்சோதி (பி.எஸ்ஸி, கணிதம்)

காதலனும், காதலியும் எப்பவும் உரசிக் கிட்டேதான் பாடுவாங்கங்கற இப்பத்த சினிமா லாஜிக்கை உடைப்பேன். பெண் கண்ணசைவில் காதலைக் காட்ட, ஆண் தன்னுடைய புன்முறுவலில் அதை ரிசிவ் பண்ணிப்பான். நான் சொல்றது புதுசா இல்ல!

27. எ. கஜலக்ஷ்மி (பி.எஸ்ஸி, கணிதம்):

பாட்டுக்கு ஏத்தாப்லதாங்க டான்ஸ். ஒரு டான்ஸ் மாஸ்டர் நினைச்சா டைரக்டர், கேமராமேன் எல்லாரையும் தாண்டி ஜெயிக்க முடியும். அதைத்தான் நான் செய்வேன்.

28. எஸ். சரஸ்வதி (பி.எஸ்ஸி, கம்ப்யூட்டர் சயின்ஸ்):

இருக்கறத விட்டுட்டு பறக்கறதப் பிடிக்கற கதையெல்லாம் என்கிட்ட கிடையாது. ரம்பா டான்ஸையும் ரசிப்பாங்க. கவலட்சுமியையும் ரசிப்பாங்க. அதனால ரசிகர்களுக்குப் புதுசா தர்றேன்னு சொல்லி இம்சிக்காம அவங்க ரசிக்கறதக் கொடுப்பதுதான் புத்திசாலித்தனம்னு நினைக்கறேன்.

29. பி. ப்ரியா (பி.எஸ்ஸி, கம்ப்யூட்டர் சயின்ஸ்):

சலங்கை ஒலி கமல்ஹாசன் நெலமைதான் இங்க இருக்கற டான்ஸ் மாஸ்டர்களுக்கும். என்னதான் நாம பொருத்தமா பண்ணாலும், 'ம்.. என்ன இது. கிளாமரா மாத்தும்பாரு டைரக்டரு' அவங்க ரசனை மாறுகிற வரை என்னாலுமகூட நல்ல டான்ஸ் பண்ண முடியாது. இல்லேன்னா அதே சலங்கை ஒலி கமல் மாதிரி 'போங்கய்யா'ன்னு வெளியேறிடுவேன்.

30. கே. சரஸ்வதி (பி.எஸ்ஸி கணிதம்):

காமெடியன்களுக்கு டூயட்டே வேணாம்னு சொல்லிடுவேன். கேட்கலன்னா... அட்லீஸ்ட் அந்தப் பாட்டையும் காமெடி வருகிறாப் போல பார்த்துப்பேன். ◯



29



30

பேட்டி, படங்கள்:
ஞானசேகர்

பிரபலங்களின் மறுபாதி: (ஜெனிஃபர்) சந்திரன்

பெண் எடுத்தாலும் சரி; கொடுத்தாலும் சரி; தி.மு.க.தான்!

தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சரான ஜெனிஃபர் சந்திரனின் மறுபாதிக்குச் சொந்த ஊர் திருச்செந்தூர் அருகில் உள்ள அமலிநகர் என்ற கிராமம். வளர்ந்தது தூத்துக்குடியில். பெரிய குடும்பம். சந்திரனின் கூடப் பிறந்தவர்கள் எட்டுத் தம்பிகள் பிளஸ் நாலு தங்கைகள்.

"அப்பா, சர்ச் கட்டுப்பாட்டை மீறி, தி.மு. கழக கொடிக் கம்பம் நிறுவியதால், கண்டனத்துக்கு ஆளானவர். ஆனால் அது பற்றியெல்லாம் கவலைப்பட்டதில்லை. எங்க குடும்பத்தில், பெண் கொடுக்கிறபோதும் சரி, பெண் எடுக்கிறபோதும் சரி, கட்டாயமாய் ஒரு விஷயம் பார்ப்போம். சம்பந்தம் செய்கிற குடும்பம், திமுகழகக் குடும்பமா என்பதுதான் அது. இந்த அளவுக்குத் தீவிரமான கழக விசுவாசிகள் என்றாலும், குடும்பத்தில் யாரும், பஞ்சாயத்து போர்டு தேர்தலில்கூட போட்டியிட்டது கிடையாது. ஜெனிஃபர்தான் எங்கள் குடும்பத்தின் முழு நேர அரசியல்வாதி!" என்கிறார் சந்திரன். வெள்ளைச்சட்டை, கறுப்பு சிவப்பு, கரை வேட்டி டிபிகல் அரசியல்வாதி போலத்தான் தோற்றமளிக்கிறார்.


"சின்ன வயசிலேயே, படிப்பு ஏறலை. எனவே குடும்ப பிசினஸ் ஆன மீன், கருவாட்டு வியாபாரம் செய்யப் போய் விட்டேன். திருக்கை மீன் என்று ஒரு வகை மீன். மார்க்கெட்டில் அதற்கு எப்போதும் ஏக டிமாண்டு. அப்பாகிட்டேயிருந்து முப்பது ரூபாய் வாங்கிக் கொண்டு கடற்கரைக்குப் போவேன். மீனவர்கள், மீன் பிடித்துக் கொண்டு, கரைக்கு வந்து, வியாபாரம் செய்ய ஆரம்பிக்கிற நேரத்தில் நான் ஒவ்வொரு படகாய்ப் போய், திருக்கை மீனை மட்டும் பொறுக்கி எடுத்து வாங்கிக் கொண்டு வந்து விடுவேன். முப்பது ரூபாய்க்கு, ஏறத்தாழ ஒரு கட்டை வண்டி லோடு மீன் வாங்கி விட முடியும். மார்க்கெட்டுக்குக் கொண்டு போனால், நிமிடமாய் விற்றுப் போகும். ஒரு லோடு மீன் விற்றால் நூறு ரூபாய்வரை பார்க்க முடியும்! நான் இப்படி திருக்கை மீனாய்ப் பொறுக்கி எடுத்து வியாபாரம் செய்து, லாபம் சம்பாதிப்பதைக் கண்டு, பொறுக்காத சிலர், 'சந்திரனுக்கு திருக்கை மீன் மட்டும் தனியாய் விற்கக் கூடாது' என்று மீனவர்களிடம் சொல்லி என் மீன் வியாபாரத்தை அமுக்கப் பார்த்தார்கள்.

"அதன்பின், மொத்தமாய் மீன் வாங்கி, உப்பு நீரில் ஊற வைத்து, காய வைத்துக் கருவாடாக்கி, கருவாடு மொத்த வியாபாரம் ஆரம்பித்தேன். அதில் நல்ல லாபம் கிடைத்தது. இப்போது, இரண்டாம் தர கருவாடு சரக்கை மொத்தமாய்க் கொள்முதல் செய்து, ஏஜெண்ட்கள் மூலம், கோழி உணவு தயாரிக்கிற தொழிற்சாலைகளுக்கு சப்ளை செய்கிறேன். லாபம் குறைச்சல் என்றாலும் பிசினஸ் அளவு அதிகம். தமிழ்நாடு தவிர கேரளா, ஆந்திராவுக்குக்கூட சரக்கு போகிறது."

"உங்கள் மனைவி அரசியலில் நுழைவதற்கு நீங்கள்தான் காரணமா?"

"நான் சொந்தத்தில்தான் கல்யாணம் கட்டிக் கொண்டேன். 79-ல் திருமணம். திருமணத்துக்கு முன்பும் சரி, அதன்பின்பு இரண்டு மூன்று வருடங்கள் வரையிலும் சரி, என் மனைவி ஜெனிஃபர் அரசியலில் ஈடுபடவில்லை. அதன்பின், தூத்துக்குடியைச் சேர்ந்த மாவட்டச் செயலாளரான பெரியசாமி அண்ணாச்சி, ஜெனிஃபரை, மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் ஆக்கினார். அதன்பின், கூட்டங்களில் பேசுவது, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவது என அரசியல் பழகிக் கொண்டார் ஜெனிஃபர். இன்று இந்த அளவுக்கு அவர் அரசியலில் ஈடுபடுவதற்கு முக்கிய காரணம், அவர் பல வருடங்களாய் 'முரசொலி' படிப்பதுதான் என்றால் அது மிகையில்லை.

"ஒரு தடவை, தூத்துக்குடியில், தமிழ்க்குடிமகன் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டத்தில், இவரும் பேச வேண்டும். மீட்டிங்கிற்கெல்லாம் நான்தான் கூடப் போவேன். நாங்கள் வசித்த திருச்செந்தூரில், நாலு வீடு தள்ளியிருந்த நண்பர் வீட்டு டெலிபோனில்தான் எங்களுக்கு போன் வரும். அதுபோல, அன்றும் ஒரு டெலிபோன் வந்தது. 'மறுமுனையில்' என்ன மீட்டிங்கிற்குப் புறப்பட்டாச்சா?' என்று ஒரு குரல். 'இதோ புறப்பட்டுக்கிட்டிருக்கோம்' என்று நான் பதில் சொன்னேன். 'நீங்க எப்படி மீட்டிங்கிற்குப் போறீங்கன்னு பார்த்திடலாம்' என்று மறுமுனையில் குரல் பேசியது. 'யார் பேசுறது?' என்று கோபமாய்க் கேட்டபோது டெலிபோன்



கால் 'கட்' ஆகி விட்டது. நான் ஜெனிஃபரிடம், இந்த மிரட்டலைப் பற்றி எதுவும் சொல்லாமல், பஸ் ஸ்டாண்டுக்குப் போய், தூத்துக்குடி பஸ் ஏறினோம். ஆனால், ஜெனிஃபர் பஸ் ஏறும் போது, திடீரென்று பஸ் புறப்பட்டுவிட, கால் இடறி, கீழே விழுந்து விட்டார். காயம் பெரி சாய் இல்லை என்றாலும் நல்ல வலி. 'வாங்க திரும்பப் போயிடலாம் வீட்டுக்கு' என்றார். நானோ 'என்ன ஆனாலும், மீட்டிங்கிற்குப் போய்த்தான் ஆகணும்' என்று சொல்லிவிட்டு, மிரட்டல் டெலிபோன் பற்றிச் சொன்னேன். இரண்டு பேரும் பஸ் ஏறினோம். வழியில், ஒரு ஆட்டோ விபத்துக்குள்ளாகி, பெரும் தகராறு. விபத்தில் ஒருவர் இறந்தே போனார். அவர் உடலை பஸ்ஸில் ஏற்றி, பெரிய ஆஸ்பத்திரியில் கொண்டு போய் ஒப்படைத்துவிட்டு, பயணம் தொடர்ந்தது. மறுபடி ஒரு விபத்து. கடைசியில் ஒரு வழியாய் தூத்துக்குடி போய்ச் சேர்ந்து, மீட்டிங்கில் கலந்து கொண்டோம். அன்று ஏன் அத்தனை தடங்கல்? எங்களை மிரட்டி டெலி போன் செய்தது யார்? என்பது இன்றுவரை எங்களுக்குப் புதிர்தான்!"

"தேர்தலில், நீங்கள் போட்டியிடாமல் உங்கள் மனைவியை நிற்க வைத்தது உங்கள் முடிவா?"

"இல்லீங்க. ஜெனிஃபருக்கே, எதிர்பாராத விதமாகத்தான் தேர்தலில் நிற்க வாய்ப்புத் தரப் பட்டது. அதைவிட, இனிய அதிர்ச்சி, அவருக்கு அமைச்சர் பதவி கிடைத்தது. சற்றும் எதிர்பார்க்கவில்லை. டீவி. நியூஸ் மூலமாகத் தான் எங்களுக்கு விஷயம் தெரியும்."

"உங்களில் குடும்ப விஷயங்களை யார் கவனித்துக் கொள்ளுகிறீர்கள்?"

"முக்கியமான விஷயங்களில் இரண்டு பேரும் பேசித்தான் முடிவுகள் எடுப் போம்."

"கட்சி, அரசு விஷயங்களில் நீங்கள் ஆலோசனை சொல்வதுண்டா?"

"நான், அமைச்சரின் வேலைகளில் தலை யிடுவது உண்டா என்பதுதானே உங்கள் கேள்வி! இல்லை. தொகுதி, கட்சி சம்பந்தமான மனுக்களை என்னிடம் கொடுத்தால்கூட, அமைச்சரிடமே நேரிடையாய்க் கொடுத்து விடுங்கள் என்று சொல்லி, அதற்கு ஏற்பாடு செய்வேன். இதுவரை நான் 'அமைச்சரின் கணவர்' என்ற அதிகாரத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்ததுகூட கிடையாது. அமைச்சருடன், விழாக்களுக்கும், மற்ற நிகழ்ச்சிகளுக்கும் போனால்கூட, நான் மேடைப் பக்கம் போகாமல் தவிர்த்து விடு வேன். கூட்டத்தில் உட்கார்ந்து இருந்துவிட்டு, நிகழ்ச்சி முடிந்ததும் அமைச்சருடன் வீட்டுக்கு வந்து விடுவேன். அரசாங்க விஷயங்களில் நான் அனாவசியமாய்த் தலையிடுவதாய் பத்திரி கைகளில் எழுதி விடப் போகிறார்களோ என்று எனக்கு பயம் உண்டு. ஆனால், ஒரு பேப்பரில், நான் அமைச்சருக்கு பயப்படுவதாய் எழுதி விட்டார்கள்."

"உங்கள் குடும்பம்?"

"ஒரே மகன். விஜயன் எட்டாம் கிளாஸ்."

"எதிர்காலத்தில், உங்களுக்குத் தேர்தலில் நிற்க வாய்ப்புக் கொடுத்தால் ஏற்றுக் கொள்ளுவீர்களா?"

"அதைப்பற்றி, நான் சொல்ல என்ன இருக் கிறது? கட்சித் தலைமை முடிவு செய்யும் விஷய மல்லவா அது?" ○

சந்திப்பு: **பாரதி மௌலி**

கலைஞர், கவர்னர், மூப்பனார் முன்னிலையில் ஒரு பேட்டி!



சன் டீ.வி.யில் 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் 125வது வாரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார் வீரபாண்டியன். பல்வேறு அரசியல் பிரமுகர்களையும் பேட்டி காணும் அவர், தமக்கு ஏற்பட்ட சில அனுபவங்களைச் சொல்லுகிறார்.

● நான் பேட்டி கண்ட முதல் பிரமுகர் குமரி அனந்தன். அதுதான் எனக்கு சன் டீ.வி. வைத்த நுழைவுத் தேர்வு. அது சிறப்பாக அமைந்ததால், எனக்கு நேருக்கு நேர் நிகழ்ச்சியை வழங்கும் பணி தரப்பட்டது. அந்த விதத்தில் குமரி அனந்தனை என்னால் மறக்க முடியாது. சுமார் ஒண்ணரை வருடங்களுக்குப்பின், மறுபடி அவரை பேட்டி கண்டேன். பேட்டியின் இடையே அவர் குடிக்கத் தண்ணீர் கேட்டபோது, கொண்டு வந்து தரச் செய்தேன். அப்போது, நகைச்சுவையுடன் 'இதுவரை எனக்குத் தண்ணி காட்டிக் கொண்டிருந்தீர்கள்; இப்போது தண்ணீர் கொடுத்திருக்கிறீர்கள்' என்று சொன்னது சமயோசிதமான கமெண்ட்.

● ஐ.கே. குஜ்ரால் பிரதமராக இருந்தபோது சென்னை வந்திருந்தார். ராஜ்பவனில் அவரைச் சந்தித்து பேட்டி கண்டேன். பேட்டி தொடங்க எல்லாம் தயார் என்ற சூழ்நிலையில், முதல்வர் கலைஞர், முரசொலி மாறன், கவர்னர் பாத்திமா பீவி ஆகியோர், பேட்டி ஒளிப்பதிவைக் காண, எங்களுக்கு எதிரே வந்து உட்கார்ந்து கொண்டு விட்டனர். கலைஞரோ, "ம். ஆரம்பியுங்கள்" என்றார். அப்போது, திடீரென மூப்பனாரும் அங்கே வந்து விட்டார். வந்தவர் சும்மா இல்லாமல், "பிரதமர் அவர்களே! இவரிடம் எச்சரிக்கையாக இருங்கள்! தர்ம சங்கடமான கேள்விகள் கேட்டுப் பிரபலமானவர் இவர்!' என்று எனக்கு ஒரு அறிமுகம் வேறு கொடுத்தார். "ஓ! அப்படியா? ரொம்ப நல்லது'' என்று சிரித்தபடி சொல்லி விட்டு, பேட்டிக்குத் தயாரானார் குஜ்ரால். நாலு வி.வி.ஐ.பி.கள் பார்த்துக் கொண்



டிருக்க, நம் தேசப் பிரதமரை பேட்டி கண்ட போது, உள்ளூர சற்றே டென்ஷனாக இருந்தது. எல்லா கேள்விகளுக்கும் நிதானமாய் பதில் சொன்னார் குஜ்ரால்.

● பேராசிரியர் அன்பழகனை, திராவிட இயக்க துவக்க காலம் தொடங்கி, இன்றைய அரசியல் நிலவரம் வரை கேள்விகள் கேட்டு, நெடிய பேட்டி ஒன்று எடுத்து, இரண்டு வாரம் ஒளிபரப்பப்பட்டது. மிக ஆழமான பேட்டி அது என்று பேராசிரியரே பேட்டி முடிந்தவுடன் என்னைப் பாராட்டினார். அண்மையில், பேராசிரியரின் பிறந்த நாளை யொட்டி, 'நேருக்கு நேர்' பேட்டி முழுவதும் சிறு புத்தகமாய் அச்சிட்டு, வெளியிடப் பட்டது. அதன் புரூஃபைப் பார்த்தபோது பேராசிரியர், அட்டையில் என் படத்தைப் போட்டிருக்கிறீர்களே! அந்தப் பையனுக் கல்லவா, முக்கியத்துவம் தந்திருக்க வேண் டும்! அவர் படத்தையும் போடுங்கள்" என்று சொன்னாராம். அதனையடுத்து, பேராசிரி யரும், நானும் பேசிக் கொண்டிருக்கும் புகைப்படமும், அந்த வெளியீட்டில் இடம் பெற்றது. இந்த விஷயத்தைக் கேள்விப் பட்டவுடன் நான் பேராசிரியரின் பெருந் தன்மை கண்டு நெகிழ்ந்து போனேன்.

● முதுபெரும் தலைவராய் இன்று இருக்கும் சி. சுப்ரமணியம் அவர்களை நேருக்கு நேர் நிகழ்ச்சியில் பங்கேற்கச் செய்துவிட வேண் டும் என்று நான் பல மாதங்கள் முயன்றேன். பேட்டியளிக்க அவர் ஒப்புக் கொள்ள வில்லை. அவருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டபோது, மறுபடி முயன்றேன். பலனில்லை. அவர் அப்போது உடல் நலம் குன்றியிருந்தார். சுகமடைந்து, ஆஸ்பத்திரி யிலிருந்து வீடு திரும்பியதும் மரியாதை நிமித் தம் அவரைச் சென்று சந்தித்தேன். பேட்டி பற்றிப் பேச வேண்டாம் என்று அவருடைய உதவியாளர் சொல்லியிருந்தார். அவரை நலம் விசாரித்துவிட்டு, "நான் திருத்துறைப் பூண்டி திருநாவுக்கரசின் மகன்" என்று சொன்னதுதான் தாமதம், எழுந்து நின்று என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு விட் டார். ஆமாம்! என் தந்தையாரும், சி.எஸ்.ஸும் நெருங்கிய தோழர்கள். (திருநாவுக்கரசு சுதந்தரப்போராட்ட வீரர்). "நீ பேட்டி வேணும்னு ரொம்ப நாளா கேட்டுகிட்டிருக்க இல்ல? நாளைக்கு வரியா?" என்று அவராகவே கேட்டு, எனக்கு இன்ப அதிர்ச்சி தந்தார். மறுநாள் ஒண் ணரை மணிநேர பேட்டி எடுத்தது இனிய அனுபவம். பேட்டி முடிந்ததும், அவர் காலில் விழுந்து, அவரது நல்லாசி பெற்றது என் பேறு.

● ஆர்.எஸ்.எஸ். விஸ்வ இந்து பரிஷத் இவற்றின் சுமார் அறுபது வெளியீடுகள், பாபர் மசூதி இடிப்பு உட்பட, பல்வேறு பிரச்னைகள் குறித்த பி.ஜே.பி.யின் அறிக் கைகள், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துக்கு எதி ரான புத்தகங்கள் என்று ஆறுமாத காலம் ஏராளமாய்ப் படித்து, நான் என்னைத் தயார் படுத்திக் கொண்டது, ராமகோபாலனை பேட்டி காணத்தான். பேட்டியின்போது கேள்வி, பதிலாக இல்லாமல், கடுமையான கருத்து மோதலாக அது அமைந்தது. ஒளிப் பதிவு முடிந்து, விடை பெறும்போது, ராம கோபாலன், "ஒரு அரை மணிநேர நிகழ்ச்சிக் காக ஆறுமாதம் உழைக்கிற உங்களுடைய சின்சியரிடி உங்களை வாழ்க்கையில் அமோகமான நிலைமைக்கு வரச் செய்யும்! உங்களுக்கு என் ஆசீர்வாதங்கள்" என்று சொன்னபோது, உண்மையிலேயே ஆனந்தக் கண்ணீர் வந்துவிட்டது.

● தமிழக கூட்டுறவு அமைச்சர் நேருவை பேட்டி கண்ட சில நாட்களில், அமைச் சருக்கு ஒரு கடிதம் வந்தது. டெல்லியிலிருந்து வந்த அந்தக் கடிதத்தில், கேள்விகளுக்கு அமைச்சர் பதில் சொன்ன விதத்தைப் பாராட்டியவர், 'சிலந்தி வலைக்குள் சிக்கிய பூச்சி, உயிரோடு திரும்புவதைவிட, வீர பாண்டியனின் கேள்விகளை சமாளிப்பது கஷ்டமாயிற்றே,' என்று குறிப்பிட்டிருந்தார். பின்னர், டெல்லியிலிருந்து நேரடியாகவும் டெலிபோனில் என்னைப் பாராட்டினார். வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி பட்டம் பெற்ற மகிழ்ச்சி எனக்கு. அந்த டெல்லி பிரமுகர் சுப்புடுதான்.

● ஒரு முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் முதல் தடவை வாஜ்பாய் பிரதமரானவுடன் டெல்லி சென்று, அவரைச் சந்தித்துப் பாராட்டி விட்டு வந்தார். "அமைச்சரவை நிலைக்குமா என்ற கேள்விக்கு, சாதகமாய் பதில் கிடைக்காத சூழ்நிலையில், டெல்லி சென்று வாஜ்பாயைச் சந்தித்தது, மாநில கவர்னர் பதவி கிடைக்காதா என்கிற எதிர் பார்ப்பிலா?" என்றுகேட்டதுதான் தாமதம்! கையிலிருந்த பேப்பர்களை, விட்டெறிந்து,

'பேட்டி என்று வந்து விட்டால் எதை வேண்டுமானாலும் கேட்டு விடலாமா? என்று ஆரம்பித்து, எழுத்தில் சொல்ல முடியாத வார்த்தைகளைக் கூறினார். அவரை சமாதானப்படுத்த ஒருமணி நேரம் ஆனது. அதன்பின் பேட்டி தொடர்ந்தது ஒரு வித்தியாசமான அனுபவம்.

● ஓர் அரசியல் தலைவர். அவரைப் பேட்டி காண அணுகிய போதெல்லாம், தவிர்த்துக் கொண்டே வந்தார். ஒரு தடவை, ஒரு நாளைக் குறிப்பிட்டு, 'அன்று டெல்லியிலிருந்து திரும்பி விடுவேன், தொடர்பு கொள்ளுங்கள்' என்றார். அந்த நாளன்று நான் அவருக்கு டெலிபோன் செய்தேன். மறுமுனையில், டெலிபோனை எடுத்தவர், 'கொஞ்சம் இருங்க' என்று சொன்னார். தொடர்ந்து அந்தப் பிரமுகர், "சன் டி.வி.யிலிருந்து வீரபாண்டியனாக இருந்தால், நான் இன்னும் டெல்லியிலிருந்து வரலைன்னு சொல்லு" என்று சொன்னதை என்னால் நன்றாகக் கேட்க முடிந்தது. ஆனாலும், 'இன்னும் ஐயா டெல்லியிலிருந்து வரலை' என்று பதில் சொன்னவரிடம், 'அப்படியா! சன் டி.வி. மானேஜர் ஒருத்தர் டெல்லியிலிருந்து இன்று வந்தபோது, இவரும் அதே பிளேனில்தான் வந்தாராமே! இன்னும் வீட்டுக்கு வரலியா?' என்று கேட்டேன்.

ஐந்தாவது நிமிடம் எனக்கு மறுபடி போன். அதே நபர், 'ஐயா இப்பத்தான் வந்தாரு!' என்றார். அப்பாய்ன்ட்மென்ட் கிடைத்தது. பேட்டி முடிந்தது.

இவ்வாறு தம் அனுபவங்களை அடுக்கிய வீரபாண்டியனை நாமும் 'ஒரு குட்டி நேருக்கு நேர்' நடத்தினோம் :

"சன் டி.வி. தொடக்கத்திலிருந்தே, ஞாயிறு இரவு ஒன்பது மணிக்கு ஒளிபரப்பான நேருக்கு நேர் நிகழ்ச்சியை ஒன்பதரைக்கு மாற்றியதற்குக் காரணம் ரபி பெர்னாட்டின் 'இந்த வாரம் சந்தித்தேன்' நிகழ்ச்சிக்குப் பார்வையாளர்கள் அதிகமானதுதானே?"

வீரபாண்டியன் பதில்: "இல்லை. நடிகை ராதிகாவின் தயாரிப்பில் ஒரு நிகழ்ச்சிக்கு அந்த குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலையில், 'நேருக்கு நேர்' ஒன்பதரை மணிக்கு மாற்றப்பட்டது. இதுதான் உண்மையான காரணம். சொல்லப்போனால், இந்த நேர மாற்றத்தில் எனக்கு அப்போது உள்ளூர வருத்தமேற்பட்டது."



"இப்படி
மழையில் நனைஞ்சுக்கிட்டு
வர்றீங்களே... சளி, காய்ச்சல்னு வந்தா
உடம்பு என்ன ஆகிறது?"
"வீணாக அலட்டிக்காதே கமலா...
கேஷியர் லீவு போட்டுட்டதால் ஆபீஸில்
இன்று சம்பளம் போடலே!"
– உ. ராஜாஜி

"தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தவரை கேள்விகளால் பலரையும் குடைந்தெடுத்த நீங்கள், தி.மு.க. ஆளுங்கட்சியாகிவிட்டபின், ரொம்ப சாஃப்ட் ஆகிவிட்டது போலத் தோன்றுகிறதே?"

"நான் தி.மு.க.காரன் இல்லை. உங்களது கருத்தையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். மு.க. ஸ்டாலின் மேயர் தேர்தலில் அபார முன்னணியில் இருந்தபோது, அவரிடம், 'கலைஞரின் மகன்' என்பதைவிட, இந்த அளவுக்குப் புகழும், பதவியும் கிடைப்பதற்கு உங்களுக்கு வேறு என்ன தகுதி இருக்கிறது?!' என்று கேள்வி கேட்டேன். நிகழ்ச்சியை, தம் சொந்த ஊரில் டி.வி.யில் பார்த்துக் கொண்டிருந்த என் மாமனார், 'அவ்வளவுதான்! இன்றோடு நம் மருமகனுக்கு சன் டி.வி.யில் வேலை போய் விடும்' என்று முடிவு கட்டி விட்டாராம். அப்படி ஏதும் நிகழவில்லையே! பேராசிரியரிடம் பேட்டி கண்டபோது, 'கடவுள் மறுப்புக் கொள்கையில் துவங்கி, ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்று விலகிப்போய் இன்று, கறுப்பு சிவப்புக் கரை வேட்டியுடன் நெற்றியில் விபூதி குங்குமத்துடன் தோற்றமளிக்கும் தி.மு.க.காரர்கள் அதிகரித்து விட்டார்களே?' என்று கேட்டேன். இதுபோல பல உதாரணங்கள் சொல்ல முடியும்."

சந்திப்பு: **கௌதம்**

தீர்த்தம்...



"**க**ர்வம்-மோகம் இது இரண்டையும் பந்தாகச் சுற்றி, தலையைச் சுழற்றித் தூர எறிந்து விடுங்கள். இது மட்டுமன்று. பற்றுகளை முற்றாய்க் களைந்து, காம இச்சை விலக்குதல் இன்றியமையாதது. சுகம், துக்கம் இரண்டையுமே விட்டு, மயக்கத்தினின்றும் மீண்டவர்கள் அழிவற்ற பரம்பொருளில் நிலைத்திருப்பர்.

"இது ஏதோ... இமயத்தின் அடிவாரத்தில் தவம் செய்யும் முனிசிரேஷ்டர்களுக்காகப் பகவான் சொன்னதல்ல. அன்றாடப் பிழைப்புக்கே தடுமாறும் சாதரணன் கூட இதைப் பழகலாம். பழக வேண்டும். தேவை- எள்ளளைய முனைப்பும், முனைப்பின் பயனாய் அறிதலும், அறிதலின் வெளியீடாய் செயலுமே ஆகும்..."

கணீரென்ற வெண்கலக் குரலில் உச்சஸ் தாயியில் நான் முழங்கும்போது மொத்தக் கூட்டமும் முகம் திருப்பாமல், இமை அசைக்காமல் கேட்டுக் கொண்டிருக்கும். பகவத் கீதையின் பதினெட்டு அத்தியாயங்களும் எனக்குத் தலைகீழ் மனனம். அத்தனை உபநிஷத்துகளும் என் நுனி நாக்கில் நர்த்தனமாடும். புராணங்களின் ரஸத்தைப் பிழிந்து அதை இந்தக் காலத்துக்கு ஏற்றவாறு விரித்துச் சொல்லும் என் பாங்கு சகலரையும் சுலபமாய் ஈர்த்தது.

'ப்ரம்மச்சாரி' என்கிற அடைமொழியுடன் என் பெயர் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் சுவரில் மின்னினால், அன்று முதல் அந்த மைதானத்தில் கூட்டம் பிதுங்கும்.

கீதை மற்றும் உபநிஷத்ஸார

நந்தன்



பிரஸங்கங்கள் உயர் தட்டு மக்களுக்கும், நடுத்தர மேல் தட்டு வர்க்கத்துக்கும் ஃபாஷனாகப் போய் விட்டதா அல்லது என் பிரஸங்கத்தின் ஈர்ப்பு சக்தியா தெரியவில்லை. என் பிரஸங்கம் நடக்கும் நாட்களில் கார்களும், பைக்குகளும், நுனி நாக்கில் ஆங்கிலம் பேசித் திரியும் ஜனமும் ஏராளமாய்த் திரளும். அதனால் என் புகழும் விண் நோக்கி உயர்ந்து கொண்டே போனது.

கும்பகோணத்துக்கு அருகே ஒரு குக்கிராமமான மஞ்சக் குடியில் ஓர் ஏழை ஆசிரியனுக்கு இரண்டாவது மகனாய்ப் பிறந்த நான், இத்துனை தூரம் சொற்சிலம்பம் ஆடுவது எப்படி சாத்தியமாயிற்று? வித்தியாசமானவனாய் மிளிர வேண்டும்



''பயந்து பயந்து
திருட வேண்டியதா இருக்கு...''
''அதனால தொழிலை விட்டுடப் போறியா?''
''ச்சே...ச்சே... போலீஸ் பாதுகாப்பு கேட்கப் போறேன்!''
– எஸ்.எஸ். பூங்கதிர்

என்ற, என் நெஞ்சு கிளர்ந்த ஆசையினாலா.. அதனால் நான் உழைத்த உழைப்பினாலா... அல்லது என் விதியினாலா...?

பி.எஸ்.ஸி. மூன்றாம் ஆண்டு முடிக்கும் சமயம் இந்த மெய்தேடும் ஆசை நெஞ்சுக்குள் 'பரபர'வெனப் பற்றிப் படர்ந்தது. அதைப் பற்ற வைத்த சூத்ரகாரி என் நண்பன் வாசு. குருதேவர் அன்று எங்கள் ஊர் வந்திருந்தபோது வாசுதான் என்னை அவருக்கு அறிமுகம் செய்வித்தான்.

என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்க்க குருதேவர் ஏதும் சொல்லாமலேயே அன்றைய பிரஸங்கத்தை முடித்துக் கொண்டு கிளம்பி விட்டார். எனது மனசுள் வெறுமை படர்ந்தது. எப்படியாவது அவர் கவனம் கவர்ந்து விட வேண்டும் என்கிற வெறி பிறந்தது. தினசரி பிரஸங்கத்தின் போது முதல் இருக்கையில் போய் அமர்ந்து கொள்வேன். அவர் பார்வை படும்படி அமர்ந்து கொண்டு மொத்த பிரஸங்கத்திலேயும் முகம் திருப்பாமல் அவர் திருமுகம் கவனித்தபடி இருந்தேன். அவர் பிரஸங்கம் முடிந்து காருக்குச் செல்லும் வரை அங்கும் இங்கும் நின்று அவர் கண்ணில் படும்படி நடந்து கொள்வேன்.

பத்தாம் நாள் பிரஸங்கம் முடிந்து அவர் ஹரித்வாரம் கிளம்பப்போகும் முன் என்னை அழைத்து, என்னை ப்ரம்மச்சாரியாக்கி வித்தை பயிற்றுவிப்பதாய் உறுதி சொன்னார். அடுத்த சில நாட்கள் பாதம் தரையில் பாவாமல் இரண்டடி உயரத்திலேயே மிதந்தேன்.

இப்படியாய் குருதேவரின் நேரடிப் பார்வையின் கீழ் கீதை கற்று, உபநிஷதம் கற்று, வேதம் கொஞ்சம் கற்று, மேடையில் கைக்கு அணைவாய் டெஸ்க்கைப் போட்டுக் கொண்டு உரத்து முழங்குமளவுக்குத் தேறி விட்டேன்.

அன்று, ஆதிசங்கரரின் பஜ கோவிந்தத்துக்குப் பொருள் சொல்லி விளக்கினேன். பிரஸங்கம் முடிந்து, வந்திருந்த அனைவருக்கும் பிரஸாதமாய் விபூதி வழங்கிக் கொண்டு வரும்போது, என் கை எதேச்சயாய்த் தட்டுப் பட்டு எதிரே நின்ற பெண்ணின் பட்டுச் சேலையில் விபூதி கொட்டி விட்டது. ''மன்னித்துக் கொள்ளம்மா...'' என்றபடி அந்தப் பெண்ணின் முகத்தை ஏறிட்டபோது எனக்குள்ளே ஒரு தடுமாற்றம். ''பரவாயில்லை ஸ்வாமிஜி'' என்ற அந்தப் பெண் திரும்பி நடந்து போவதையே ஒரு கணம் நோக்கினேன். அந்தப் பெண்ணின் சிருங்கார சௌந்தர்யம் என் நெஞ்சுத் திரையில் அடர்த்தியாய்ப் பதிந்தது.

என் மஞ்சள் உடையும், நான் கொண்ட தொழிலும் திடீரென்று என் நினைவில் நிழலாட அந்த நினைப்பை முற்றாய் அழித்து என் வேலையில் கவனமானேன்.

அடுத்த நாள் காலையில் 'உபநிஷத்' பிரஸங்கம். அந்தப் பெண் முன் இருக்கையில் அமர்ந்து என்னையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். 'சரசர'வென்று நாவில் சரளமாய்ப் புரளும் ஸ்லோகங்கள் அன்று ஏனோ திரடின. மனசு கட்டி விழி திருப்பி எண்ணம் சிராக்கி முடிந்தவரை பிர

ஸங்கத்தை நடத்தினேன். அன்றைய தினம் பிரஸங்கம் சோபிக்கவில்லை.

மறுநாள் பிரஸங்கம் ஆரம்பித்த போது, என் விழிகள் முன் இருக்கைகளை முழுசாய் அளைந்தது. அந்தப் பெண் வரவில்லை. முதல் நாள் அந்தப் பெண் இருந்ததனால் பிரஸங்கம் களை கட்டவில்லை; அடுத்த நாள் அந்தப் பெண் இல்லாததால் பொலிவிழந்து போயிற்று. என்னை நானே முஷ்டி மடக்கிக் குட்டிக் கொண்டு அடுத்த சில நாட்களில் பிரஸங்கத்தை நிறைவேற்றினேன். ஆனால் பிரஸங்கத்தின் இறுதிநாள், அந்தப் பெண் கலந்து கொண்டு என்னிடம் கையெழுத்து கேட்டது. அந்தப் பெண் நீட்டிய எங்கள் இயக்கத்தின் வெளியீடான அந்த ஸ்லோக புஸ்தகத்தில் கையெழுத்திட்டபோது அவளிடம் கேட்டேன், "ஏன் சில நாட்களாய் வரவில்லை?" என்று.

அதற்கு அந்தப் பெண் சொன்ன பதில் என்னை சுக்கல் சுக்கலாய் பொடித்துப் போட்டது.

"நான் முன்னே அமர்ந்திருந்தால் உங்களுக்கு ஸ்லோகங்கள் நிரடுகின்றன. மடை திறந்த வெள்ளமாய்ப் பிரவகிக்கும் நீங்கள் என் முகம் பார்த்ததும் நெஞ்சுக்குள் சஞ்சலமடைகிறீர்கள். அது என்னைப் பெரிதாய் துக்கிக்க வைக்கிறது" என்றாள் அந்தப் பெண்.

"இல்லையடி பெண்ணே... நீ வராத நாளும் எனக்கு ஸ்லோகங்கள் நிரடத்தான் செய்தன" என்ற சொற்கள் என் வாய் விளிம்பு வரை வந்து விட்டன. சிரமப்பட்டு அவற்றைத் துப்பாமல் விழுங்கினேன்.

அதன்பின் அந்தப் பெண் சொன்ன இன்னொரு விஷயம் எனக்கு வெகுவாய் சந்தோஷம் தந்தது. அன்று இரவு அவள் வீட்டில் எனக்கு பிக்ஷை என்று அந்தப் பெண் கூறியது என் செவியில் தேனாய்ப் பாய்ந்தது. பிரஸங்கம் நடக்கும் அத்தனை நாட்களும் தினமும் யாராவது ஒருவர் வீட்டில் எங்களுக்கு இரவு உணவும் தங்க இடமும் வழங்கப்படும். அதுதான் பிக்ஷை. இன்று பிரஸங்கத்தின் இறுதி நாளில்- அந்தப் பெண்ணின் வீட்டில் பிக்ஷை என்றதும் எனக்கு ஒரே குதூகலம்.

அந்த வீட்டுக்குச் சென்றபோதும், அங்கு அமர்ந்து அனைவருடனும் பேசிக் கொண்டிருந்தபோதும், அவர்கள் அதீத மரியாதையுடன் பரிமாறிய உணவை உட்கொள்ளும் போதும், அந்தப் பெண்ணின் பிரகாசமான



"சுதந்தரமடைந்து ஐம்பதாண்டாகியும் இந்தியா போதிய முன்னேற்றமடையாததற்குக் காரணம் யார் தாத்தா?"

"காலை பத்துமணியாகியும் படுக்கையை விட்டு எழுந்திரிக்காத உன்னைப் போன்ற சோம்பேறிகள்தான்!"

- உ. ராஜாஜி

திருமுகமே நெஞ்சுக்குள் பவனி வந்தபடி இருந்தது. உணவு முடிந்து விளக்கணைத்து அனைவரும் உறங்கிய பின்னரும் அந்தப் பெண்ணின் எழில் முகம் என் நெஞ்சுக் குழியை விட்டு அகன்றபாடில்லை. நாளை முதல் அந்த ச்ருங்கார செளந்தர்யத்தை எங்கு காணப் போகிறோம் என்கிற எண்ணம் மேலிட.... மெலிதான நெருடல் ஒன்று வலிதாய் மனசுக்குள் பதிந்து கொண்டது.

அந்தப் பதிவு தந்த உந்துதல், இன்னொரு முறை அந்த ஸ்வர்ண கமலத் தாமரையை தரிசித்து வர என்னை முடுக்கியது. அதன் நிமித்தம் என் படுக்கை விட்டு எழுந்தேன். இருட்டில் கவனத்தோடு தடம் பதித்து அந்தப் பெண்ணின் அறையை நெருங்கினேன். ஜன்னலில் பரவியிருந்த திரைச்சீலை மெலிதாய்க் காற்றில் அசைந்தபடி இருந்தது. அந்தத் திரையை முழுசாய் விலக்கி, ஜன்னல் கம்பி இடைவெளியில் முகம் பதித்து, கூர்ந்து நோக்கினேன்.

இரவு விளக்கின் மெல்லிய நீல ஒளி அந்த அறையில் சன்னமாய்ப் பரவியிருந்தது. அந்த நளின ஒளியில் அந்தப் பெண்ணின் முகம் முன்னிலும் தேஜஸுடன் ஒளிர்ந்து திகழ்ந்தது. சில நிமிடம் இமைக்காமல் பார்த்தவன் பின் விழி மூடி மனசு குவித்து மௌனமாய் இருந்தேன். ஏதோ ஒரு வித சந்தோஷமும்-துக்கமும், சிலிர்ப்பும்-வெறுமையும், சாந்தியும்-சலனமும் ஒரு சேர என்னுள் பரவின.

அந்தக் கலவையான ஸ்வபாவத்தில் ஜன்னல் திரை மூடி, கதவு சார்த்தி முகம்



''அந்த விமான ஓட்டி அரசியல்ல புகுந்தால் பிரமாதமா வருவார்!''
''எப்படிச் சொல்றே?''
''விமானம் ஏன் தாமதம் என்று கேட்டால், 'ஒரே டிராபிக் ஜாம்' என்ன செய்யறதுன்னு காரணம் சொல்கிறாரே!''
– லலிதா செல்லப்பா

திருப்பிய போது, அந்த வீட்டின் அத்தனை விளக்குகளும் 'பளிச்'சென்று எரிந்தன.

என்னைச் சுற்றி நெருப்புமிழும் விழிகள். நான் மொத்தமாய் கலைந்து போனேன். இறுக்கமாய் இதழ் மூடிக் கொண்டேன். 'காமாந்தகாரா' என்ற ஏசலுக்கும், 'கபட ப்ரம்மச்சாரி' என்கிற இரையலுக்கும் நான் வாய் திறக்கவில்லை. என்னைச் சுற்றி தகித்த உஷ்ணத்தின் உக்கிரத்தை மௌனமாய் உள் வாங்கிக் கொண்டேன்.

பின் என் பொருட்களோடு இடம் பெயர்ந்தேன்.

நேரே ஹரித்வாரம் சென்று என் குருதேவரின் பாதம் பற்றி இரண்டு முழு நாட்கள் அழுது தீர்த்தேன். குரு தேவர் என் தோள் தட்டி எழுப்பி, என்னைத் தாயாய் அணைத்துக் கொண்டு என் குழல் கோதினார்.

''குருஜி... என்னை மன்னியுங்கள். நான் தகுதியற்றவன். உங்கள் கீழ் பணி செய்ய சற்றும் அருகதை இல்லாதவன்...'' என்று குமுறி, நடந்ததையெல்லாம் ஒன்று மறைக் காமல் அவரிடம் கொட்டித் தீர்த்தேன்.

குருதேவர் சற்றும் சலனமில்லாமல் என் மீது தன் பார்வையைப் படர விட்டார்.

''ஆசை அறுமின், ஆசை அறுமின்... ஈசனோடாயினும் ஆசை அறுமின்! என்று ஈசனிடம் கூட ஆசை அறுக்கப் படித்து விட்டு, இந்தக் காம அரக்கனிடம் எப்படிச் சிக்கினேன்? பேதமையில்லையா ஸ்வாமி இது. கழுவிலேற்றத்தக்க குற்றமல்லவா இது! எனக்குப் புரியவில்லை குருதேவா. நான் உங்களிடம் கற்ற பாடம் காணாமல் போனது எதனால்? கற்றதை மறந்து உணர்ச்சிக்கு ஆட் பட்டு நான் கிளர்ச்சியுற்று நின்றது எதன் பொருட்டு? வேதம் கற்ற நானே இப்படிச் சிதிலமாகிச் சீரழியும் போது ஏதும் அறியா தார் நிலைமை எத்தகைய துயரம் ஸ்வாமி...'' குருதேவரின் பாதம் பற்றி மெய்யாய் அழுதேன்.

துக்கத்தையும் சந்தோஷத்தையும், வேதனையையும் சாதனையையும், பாவத் தையும் புண்ணியத்தையும் ஒன்றாகவே பாவிக்கும் அந்த அத்வைத ஆத்மா பேசத் தொடங்கியது.

''ஆசையை அறுக்கவும், காமத்தை மறுக் கவும் யார் உனக்குச் சொல்லிக் கொடுத்தது? வலிந்து அவற்றை நீ அறுத்தோ மறுத்தோ செய்தாயானால் அவை அந்தச் சமயம் ஓர் ஓரமாய் ஒளிந்து கொண்டு, நீ பலகீனனாகும் சமயம், பூதமாய்க் கிளம்பி வந்து உன்னை மல்லாத்தி விடும். வலிந்து சிரமப்பட்டு எத னையும் அடக்குதல் அதற்கு மருந்தல்ல. மாறாய், அவற்றை நீ விஞ்ச வேண்டும். ப்பூ... என்றுதறி அவற்றைப் பார்த்து நீ நகைக்க வேண்டும். அது மட்டுமே வெற்றி. அதற்கு. அதைத் தாண்டிக் குதித்து வெளியே வா. அல்லது அதனில் புகுந்து புறப்பட்டு தலையை சிலுப்பிக் கொண்டு அதனின்றும் வெளிப்படு. இறுதியாய் அதனை விஞ்சி அவற்றினின்றும் வெளியே வரவேண்டும்.

''நீ இப்போது செய்வது தொழில் மட் டுமே குழந்தாய். கற்பிக்கும் தொழில். அந்தக் கற்பிக்கும் தொழிலைத் திறம்படச் செய்யவே வேதம் பயின்றாய். தவிர, நீ அதனை முழுசாய் உன்னுள் வாங்கிக் கொண்டாய் என்பது தவறு. இதையும் உபநிஷத்தும் கற் றமை உன் சொற்செட்டை வளப்படுத்தி யிருக்கலாம். ஆனால் மனசு வளமை என்பது பழகப் பழக மட்டுமே வரும். அந்தப் பழ கலுக்கு இன்ன தொழில் தான் செய்ய வேண்டுமென்பது இல்லை. எங்கு இருந் தாலும், நின்ற நிலையிலும் நிமிர்ந்த நிலையி லும் மனசின் வளமை நோக்கிய பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். அதுதான் முற்று!''

குருதேவர் பேசிக் கொண்டிருக்கும் போதே நான் அணிந்திருந்த மஞ்சள் ஆடையை அவிழ்த்தேன். ப்ரம்மச்சாரிப் பட்டத்தை அவர் பாதத்தில் சமர்ப்பித்தேன். ''தெரிந்ததெல்லாம் தெளிந்ததல்ல.... அறிந்த தெல்லாம் உணர்ந்ததல்ல...'' என்கிற குருதேவரின் சொற்கள் அந்தகாரச் சுவரில் மோதி மோதி ரீங்கரித்துக் கொண்டிருந்தன.

உடுத்திய வெள்ளை வேஷ்டி சட்டை யுடன் மஞ்சக்குடிக்குப் பயணப்பட்டேன்.



பதினான்காம் அத்தியாயம்

இரண்டு பூரண சந்திரர்கள்



கல்கி கலெக்ஷன்

அன்று தஞ்சை நகரம் அல்லோலகல்லோலப்பட்டது. பல காலமாகத் தலைநகருக்கு வராதிருந்த இளவரசி மனம் மாறித் தஞ்சைக்கு வருகிறார் என்றால் அந்த நகர மாந்தர்களின் எக்களிப்புக்குக் கேட்பானேன்? சோழ நாட்டில் இளவரசி குந்தவையின் அழகு, அறிவு, தயாளம் முதலிய குணங்களைப் பற்றித் தெரியாதவர்கள் இல்லை. தினம் ஒரு தடவையாவது ஏதேனும் ஒரு வியாஜம் பற்றி அவருடைய பெயரைக் குறிப்பிட்டுப் பேசாதவர்களும் இல்லை. இந்த வருஷம் நவராத்திரி வைபவத்துக்கு இளவரசி தஞ்சை அரண்மனையில் வந்திருப்பார் என்ற வதந்தி முன்னமே பரவி மக்களின் ஆவலை வளர்த்திருந்தது. எனவே, இன்றைக்கு வருகிறார் என்று தெரிந்ததும் தஞ்சைக்கோட்டை வாசலில் ஒரு ஜன சமுத்திரமே காத்துக் கொண்டிருந்தது. பூரண சந்திரனுடைய உதயத்தை எதிர்பார்த்து ஆன்லாத ஆரவாரம் செய்யும் ஜல சமுத்திரத்தைப் போல் இந்த ஜன சமுத்திரமும் ஆர்வம் மிகுந்து ஆரவாரம் செய்து கொண்டிருந்தது.

கடைசியில், பூரண சந்திரனும் உதயமாயிற்று. ஏன்? இரண்டு நிலாமதியங்கள் ஒரே சமயத்தில் உதயமாயின! தஞ்சைக் கோட்டை வாசலண்டை குந்தவை தேவி தன் பரிவாரத்துடன் வந்து சேர்ந்தபோது, கோட்டைக் கதவுகள் தடால் என்று திறந்தன. உள்ளேயிருந்து தேவியை வரவேற்று அழைத்துப் போவதற்காக அரண்மனைப் பரிவாரங்கள் வெளிவந்தன. அந்தப் பரிவாரங்களின் முன்னிலையில் இரு பழுவேட்டரையர்களும் இருந்தார்கள். அது மட்டுமல்ல; அவர்களுக்குப் பின்னால்,

அமரர் கல்கி



முத்துப் பதித்த தந்தப் பல்லக்கு ஒன்றும் வந்தது. அதன் பட்டுத் திரைகள் விலகியதும் உள்ளே பழுவூர் இளையராணி நந்தினி தேவியின் சுந்தர மதிவதனம் தெரிந்தது.

குந்தவை யானையிலிருந்தும் நந்தினி பல்லக்கிலிருந்தும் இறங்கினார்கள். நந்தினி விரைந்து முன்னால் சென்று குந்தவைக்கு முகமன் கூறி வரவேற்றாள். அந்த வரவேற்பைக் குந்தவை புன்னகை புரிந்து அங்கீகரித்தாள்.

சோழ நாட்டின் அந்த இரு பேரழகிகளையும் அங்கு ஒருங்கே கண்ட ஜனத்திரளின் உற்சாகம் கரை புரண்டு ஓடியது. நந்தினி பொன் வர்ண மேனியாள்; குந்தவை செந்தாமரை நிறத்தினாள். நந்தினியின் பொன் முகம் பூரண சந்திரனைப் போல் வட்ட வடிவமாயிருந்தது; குந்தவையின் திருமுகம் கைதேர்ந்த சிற்பிகள் வார்த்த சிலை வடிவத்தைப் போல் சிறிது நீள வாட்டமாயிருந்தது. நந்தினியின் செவ்வரியோடிய கருநிறக் கண்கள் இறகு விரித்த தேன்வண்டுகளைப் போல் அகன்று இருந்தன; குந்தவையின் கரு நீல வர்ணக் கண்கள் நீலோத்பலத்தின் இதழைப் போல் காதளவு நீண்டு பொலிந்தன. நந்தினியின் மூக்கு தட்டையாக வழுவழுவென்று தந்தத்தினால் செய்ததுபோல் திகழ்ந்தது. குந்தவையின் மூக்கு சிறிது நீண்டு பன்னீர்ப் பூவின் மொட்டைப் போல் இருந்தது. நந்தினியின் சிறிது தடித்த இதழ்கள் அமுதம் ததும்பும் பவழச் செப்பைப் போல் தோன்றியது. குந்தவையின் மெல்லிய இதழ்களோ தேன் பிலிற்றும் மாதுளை மொட்டெனத் திகழ்ந்தது. நந்தினி தன் கூந்தலைக் கொண்டை போட்டு மலர்ச் செண்டுகளைப் போல் அலங்கரித்திருந்தாள். குந்தவையின் கூந்தலோ "இவள் அழகின் அரசி" என்பதற்கு அடையாளமாகச் சூட்டிய மணி மகுடத்தைப் போல் அமைந்திருந்தது.

இப்படியெல்லாம் அந்த இரு வனிதாமணிகளின் அழகையும் அலங்காரத்தையும் தனித்தனியே பிரித்து ஒப்பிட்டுப் பார்த்து எல்லாரும் மகிழ்ந்தார்கள் என்று சொல்ல முடியாதுதான். ஆயினும் பொதுப்படையாக இருவரும் நிகரில்லா சௌந்தரியவதிகள் என்பதையும், அங்க அமைப்பிலும் அலங்காரத்திலும் மாறுபட்டவர்கள் என்பதையும் அனைவருமே எளிதில் உணர்ந்தார்கள்.

நந்தினியின் பேரில் அதுவரையில் நகர மாந்தர்களுக்கு ஓரளவு அதிருப்தியும் அசூயையும் இருந்து வந்தன. குந்தவைப் பிராட்டியை ஒவ்வொருவரும் தங்கள் குல தெய்வமெனப் பக்தியுடன் பாராட்டினார்கள். ஆனால் இப்போது பழுவூர் இளைய ராணி கோட்டை வாசலுக்கு வந்து இளையபிராட்டியை வரவேற்றது மக்களுக்கு மிகுந்த குதூகலத்தை விளைவித்தது.

மக்கள் இவ்விதம் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கையில் நந்தினிக்கும் குந்தவைக்கும் நடந்த சம்பாஷணை மின்னலை மின்னல் வெட்டும் தோரணையில் அமைந்தது.

"தேவி! வருக! வருக! எங்களை அடியோடு மறந்து விட்டீர்களோ என்று நினைத்தோம். இளையபிராட்டியின் கருணை எல்லையற்றது என்பதை இன்று அறிந்தோம்" என்றாள் நந்தினி.

"அது, எப்படி ராணி! தூரத்திலிருந்தால் மறந்து விட்டதாக அர்த்தமா? நீங்கள் பழையாறைக்கு வராதபடியால் என்னை மறந்து விட்டதாக வைத்துக் கொள்ளலாமா?" என்றாள் குந்தவை.

"தேன் மலரை நோக்கி வண்டுகள் தாமே வரும்; அழைப்பு வேண்டியதில்லை. அழகிய பழையாறைக்கு யாரும் வருவார்கள். இந்த அவலட்சணமான தஞ்சைக் கோட்டைக்குத் தாங்கள் வந்தது தங்கள் கருணையின் பெருமையல்லவா?"

"அது என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? தஞ்சைபுரியை அவலட்சண நகரமென்று சொல்லலாமா? இங்கே சௌந்தரியத்தையே சிறைப்படுத்தி வைத்திருக்கும்போது?..." என்றாள் இளைய பிராட்டி.



"நானும் அப்படித்தான் கேள்வியுற்றேன்; சக்கரவர்த்தியை இங்கே சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்று. இனிமேல் கவலை இல்லை. அவரை விடுவித்துச் செல்லத் தாங்கள் வந்துவிட்டீர்கள் அல்லவா?" என்று நந்தினி கூறிய போது அவளுடைய கண்களில் மின்வெட்டுத் தோன்றி மறைந்தது.

"அழகாயிருக்கிறது! சுந்தர சோழ சக்கரவர்த்தியைச் சிறை வைக்க இந்திராதி தேவர்களாலும் முடியாது. சிறிய மனிதர்களால் எப்படி முடியும்? நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. சௌந்தரிய தேவதையான நந்தினி தேவியைப் பற்றிச் சொன்னேன்..."

"நன்றாகச் சொல்லுங்கள், தேவி! அவர் காதுபட இதைச் சொல்லுங்கள். என்னைச் சிறையில் வைத்திருப்பது போலத்தான் பழுவூர் அரசர் வைத்திருக்கிறார். தாங்கள் கொஞ்சம் சிபாரிசு செய்து..."

"என் சிபாரிசு என்னத்துக்கு ஆகும்? தங்களை வைத்திருப்பது சாதாரண சிறையல்லவே? காதல் என்னும் சிறையல்லவா! அதிலும்..."

"ஆம், தேவி! அதிலும் கிழவருடைய காதல் சிறையாயிருந்து விட்டால் விமோசனமே இல்லை! ஏதோ 'பாதாளச் சிறை' என்கிறார்களே? அதில் அடைக்கப்பட்டவர்களாவது வெளிவரக்கூடும்! ஆனால்..."

"ஆமாம், ராணி! அதிலும் நாமாகப் போட்டுக் கொண்ட விலங்காயிருந்தால், நாமாகத் தேடிச் சென்ற சிறையாயிருந்தால், விடுதலை கஷ்டமானதுதான்!... சீதை, கண்ணகி, நாளாயினி, சாவித்திரி வழியில் வந்தவர்கள் விடுதலை தேடவும் மாட்டார்கள்!... அதோ அங்கே என்ன அவ்வளவு கூச்சல்?" என்றாள் குந்தவைப் பிராட்டி.

உண்மையாகவே, கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் திரளாக நின்று கொண்டிருந்த பெண்களின் நடுவிலிருந்து அந்தப் பெருங் கூச்சல் எழுந்து கொண்டிருந்தது. குந்தவையும் நந்தினியும் அவ்விடத்தை நெருங்கிப் போனார்கள். பெண்கள் பலர் ஏக காலத்தில் கூச்சலிட்டபடியால் முதலில் இன்னதென்று புரியவில்லை. பிறகு கொஞ்சம் விளங்கியது. இளையபிராட்டியை அடிக்கடி அரண்மனைக்கு வந்து பார்க்க அவர்கள் விரும்புவதாகவும், ஆகையால் நவராத்திரி ஒன்பது நாட்களும் கோட்டைக்குள் பிரவேசிப்பதில் உள்ள கட்டுக் காவல்களை நீக்கிவிட வேண்டும் என்றும் அவர்கள் கோருவதாகத் தெரிந்தது.

"ராணி! தங்கள் கணவரிடமாவது மைத்துனரிடமாவது சொல்லி, இவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றச் சொல்லுங்கள். கேவலம் இந்த ஸ்திரீகளைக் கண்டு பயப்படுவானேன்? இவர்களால் சோழ சாம்ராஜ்யத்துக்கு என்ன ஆபத்து வந்துவிடும்? பழுவூர்ச் சகோதரர்களின் ஆணை நாலா திசையிலும் கடற்கரை வரையில் நீண்டு பரந்திருக்கிறது அல்லவா?" என்றாள் குந்தவை.

"அது என்ன, கடற்கரையோடு நிறுத்தி விட்டீர்கள்? கடல் கடந்து அப்பாலும் அவர்களுடைய ஆணையும் அதிகாரமும் போகின்றன. இதற்கு அடையாளம் சீக்கிரமே கிடைக்கும்!" என்று சொல்லி நந்தினி செய்த புன்னகை குந்தவையின் இருதயத்தைப் பிளந்தது. 'இந்தப் பாதகி வார்த்தையின் உட்கருத்து யாதாயிருக்கலாம்!' என்று சிந்தித்தாள்.

இதற்குள் நந்தினி பெரிய பழுவேட்டரையரைச் சமிக்ஞையால் அருகில் அழைத்து, அப்பெண்களின் கோரிக்கை

யையும் இளையபிராட்டியின் விருப்பத்தையும் தெரிவித்தான்.

"இளையபிராட்டியின் வார்த்தைக்கு எதிர்வார்த்தை ஏது?" என்றார் பழுவேட்டரையர்.

பின்னர், ஜனத்திரளின் கோலாகல ஆரவாரத்தினிடையே அவர்கள் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

அன்று முதல் சில தினங்கள் தஞ்சை நகரும் சுற்றுப் புறங்களும் அளவில்லாக் குதூகல ஆரவாரத்தில் திளைத்துக் கொண்டிருந்தன. குந்தவை தேவி தஞ்சைக்கு வந்த சமயத்தில் நவராத்திரி உற்சவம் சேர்ந்து கொண்டது. பழுவேட்டரையரும் தம்முடைய வாக்கை நிறைவேற்றினார். தங்கு தடையில்லாமல் அந்தப் பத்து நாட்களிலும் ஜனங்கள் கோட்டைக்குள் புகவும் வெளி வரவும் அனுமதித்தார். கோட்டை வாசற் கதவுகள் சதா காலமும் அகலத் திறந்திருந்தன. கோட்டைக்குள்ளே அரண்மனைகளிலும் வெளியில் ஊர்ப் புறங்களிலும் பல கோலாகல நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. அவற்றைக் கண்டு களிக்கப் பெருந்திரளாக மக்கள் குழுமிக் கொண்டிருந்தார்கள். அக் கூட்டங்களின் நடுவே அடிக்கடி இரண்டு பூரண சந்திரர்கள் சேர்ந்தாற் போல் உதயமாகிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டு ஜனசமுத்திரம் பொங்கிப் பூரித்து ஆரவாரித்தது. ஆனால் வெளியில் இவ்வாறு ஒரே உற்சவ உற்சாக குதூகலமாயிருந்தபோது, அந்த இரண்டு பூரண சந்திரர்களுடைய இதயப் பிரதேசங்களிலும் எரிமலைகள் பொங்கி அக்கினிக் குழம்பைக் கக்கிக் கொண்டிருந்தன. பழுவூர் இளையராணிக்கும் பழையாறை இளைய பிராட்டிக்கும் ஓயாமல் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. சொல்லம்புகளைக் கொண்டும் விழிகளாகிய வேல்களைக் கொண்டும் அவ்விரு அழகிகளும் துவந்த யுத்தம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்தப் போராட்டத்தில் இரு பக்கமும் கூருள்ள வாள்கள் ஒன்றோடொன்று உராய்ந்தபோது தீப்பொறிகள் பறந்தன. தீட்டிச் சாணை பிடித்த ஈட்டிகள் ஒன்றையொன்று தாக்கி ஜுவாலை வீசின. இருண்ட வான வெளியில் இரண்டு மின்னல்கள் ஒன்றையொன்று வெட்ட இரண்டும் சேர்ந்து துடிதுடித்தன. கொடிய அழகு வாய்ந்த இரண்டு பெண் புலிகள் ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கால் நகங்களினால் பிறாண்டி இரத்தம் கசியச் செய்தன. பயங்கரச் சௌந்தரியம் பொருந்திய இரண்டு நாக சர்ப்பங்கள் படம் எடுத்து ஆடி, அவற்றின் கூரிய, மெல்லிய, சிவந்த நாக்குகளை நீட்டி ஒன்றையொன்று விழுங்கிவிடப் பார்த்தன.

இந்த அதிசயமான போராட்டத்தில் அவர்கள் உற்சாக வெறியும் அடைந்தார்கள்; வேதனைப் பட்டு உளம் புழுங்கியும் துடித்தார்கள்.

நகர மாந்தர்களின் உற்சாகத்திலும் கலந்து கொள்ளாமல், இந்த இரு சந்திர மதிகளின் போராட்டத்தையும் புரிந்து கொள்ளாமல், ஒரே ஒரு ஆத்மா தவித்துக் கொண்டிருந்தது. கொடும்பாளூர் இளவரசி வானதிக்கு இப்போதெல்லாம் இளையபிராட்டியுடன் பேசுவதற்கே அவகாசம் கிடைக்கவில்லை. அக்காளுடன் கூடக் கூடப் போனாளே தவிர, வெளியில் நடப்பது ஒன்றிலும் அவள் மனம் ஈடுபடவில்லை. தனக்குள்ளே ஒரு தனிமை உலகைச் சிருஷ்டித்துக் கொண்டு அதிலேயே சஞ்சரித்து வந்தாள்.

பதினைந்தாம் அத்தியாயம்

இரவில் ஒரு துயரக் குரல்

சோழ நாட்டில் அக்காலத்தில் ஆடல் பாடல் கலைகள் மிகச் செழிப்படைந்திருந்தன. நடனமும் நாடகமும்சேர்ந்து வளர்ந்திருந்தன. தஞ்சை நகர் சிறப்பாக நாடகக் கலைஞர்கள் பலரைத் தோற்றுவித்தது. அந்த நாளில் வாழ்ந்திருந்த கருவூர்த் தேவர் என்னும் சிவநேசச் செல்வர் 'இஞ்சி* சூழ்' தஞ்சை நகரைப் பற்றிப் பல பாடல்களில் கூறியிருக்கிறார்.

• இஞ்சி-கோட்டை மதில்

"மின்னெடும் புருவத்துஇள
மயிலனையார்
விலங்கல் செய் நாடகசாலை
இன்னடம் பயிலும் இஞ்சி சூழ்
தஞ்சை"

என்று அவருடைய பாடல்களில் ஒன்று வர்ணிக்கிறது. தஞ்சை நகரில் நாடகக் கலை ஓங்கி வளர்ந்ததற்கு அறிகுறியாக நாடக சாலைகள் பல இருந்தன. அந்த நாடக சாலைகளில் எல்லாம் மிகச் சிறந்த நாடக சாலை, சக்கரவர்த்தியின் அரண்மனைக்குள்ளேயே இருந்தது.

புதிய புதிய நாடகங்களைக் கற்பனை செய்து அமைக்கும் கலைஞர்கள் தஞ்சை நகரில் வாழ்ந்து வந்தனர். அதற்கு முன்னாலெல்லாம் புராண இதிகாச காவியங்களில் உள்ள கதைகளையே நாடகங்களாக அமைத்து நடிப்பது வழக்கம். சில காலமாகத் தஞ்சை நாடகக் கலைஞர்கள் வேறொரு துறையில் கவனம் செலுத்தி வெற்றி பெற்றிருந்தார்கள். சரித்திரப் புகழ் பெற்ற வீரர்களின் வரலாறுகளை அவர்கள் நாடகமாக அமைத்தார்கள். அவர்களுடைய காலத்துக்குச் சிறிது முற்பட்டவர்களின் வீரக் கதைகளையும் நாடகங்களாக்கி நடித்தார்கள். அப்படிப்பட்ட வீரர்கள் சோழ வம்சத்தில் பிறந்தவர்களைப் போல் வேறு எங்கே உண்டு? ஆகையினால், கரிகால் வளவர், விஜயாலய சோழர், பராந்தக தேவர் முதலிய சோழ வம்சத்து மன்னர்களின் சரித்திரங்களை நாடகங்களாக்கி நடித்தார்கள்.

நவராத்திரித் திருநாளில் சக்கரவர்த்தியின் அரண்மனையில் சோழ வம்சத்து மன்னர்களின் வீர சரித்திர நாடகம் மூன்று நாட்கள் நடைபெற்றன. சித்திர விசித்திரமாக அமைத்த நாடக சாலைக்கு எதிரே, அரண்மனை நிலா முற்றத்தில், ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்து நாடகங்களைக் கண்டு களித்தார்கள். அரண்னைப் பெண்டிர் அமர்வதற்கு ஒரு தனியான இடம், நீலப் பட்டு விதானத்தின் கீழ் முத்திழைத்த சித்திரத் தூண்களுடன் ஏற்பாடாகி இருந்தது. அதன் கீழ் மகா ராணிகளும், இளவரசிகளும், அவர்களுடைய அந்தரங்கத் தோழிமார்களும் அமர்ந்து நாடகம் பார்த்தார்கள். அப்போதெல்லாம் குந்தவை தேவிக்கு அருகாமையிலேயே நந்தினி வந்து உட்கார்ந்தாள். இது மற்றப் பெண்களில் சிலருக்குப் பிடிக்கவில்லையென்றாலும், அதை அவர்கள் மனத்திலேயே வைத்துக் கொண்டு பொருமினார்களேயன்றி வேறெதுவும் செய்ய முடியவில்லை. பெரிய பழுவேட்டரையர், பழுவூர் இளையராணி இவர்களுடைய கோபத்துக்குப் பாத்திரமாக யாருக்குத்தான் துணிவு இருக்கும்? இளைய பிராட்டியே அந்தக் கர்வக்காரிக்கு அவ்வளவு மதிப்பளித்து மரியாதை செய்யும் போது மற்றவர்கள் எம்மாத்திரம்?

சோழ வம்ச மன்னர்களைப் பற்றிய மூன்று நாடகங்களில் மூன்றாவதான பராந்தக தேவர் நாடகம் மிகச் சிறந்து விளங்கியது. அன்றைக்குத்தான் நாடகம் பார்த்த ஜனங்களின் மத்தியில் ஒரு சிறிய சலசலப்புத் தோன்றி வளர்ந்தது.

அதுவரை சோழநாட்டை அரசு புரிந் சோழ மன்னர் பரம்பரையில் சுந்தர சோழரின் பாட்டனாரான கோப்பர கேசரி பராந்தகர் வீரப் புகழில் சிறந்து விளங்கினார். சுமார் நாற்பத்தாறு ஆண்டுகள் இவர் ஆட்சி நடத்தினார். இவருடைய காலத்தில் சோழ சாம்ராஜ்யம் விரிந்து பரவியது. ஈழ நாட்டிலிருந்து துங்கபத்திரை நதிவரையில் அவருடைய ஆணை சென்றது. பல போர்கள் நடந்தன; மகத்தான வெற்றிகள் கிடைத்தன; 'மதுரையும் ஈழமுங்கொண்ட கோப்பர கேசரி வர்மர்' என்ற பட்டம் பெற்றார். தில்லைச் சிதம்பரத்தில் சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து புகழ் பெற்றார். இவருடைய வாழ்க்கையின் இறுதியில் சில தோல்விகள் ஏற்பட்டு இராஜ்யம் சுருங்கியது. ஆனால் இவருடைய வீரப் புகழ் மட்டும் குன்றவில்லை. வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து கடல் போன்ற மாபெரும் சைன்யத்துடன் படையெடுத்து வந்த கன்னர தேவன் என்னும் அரசனுடன் தக்கோலத்தில் இறுதிப் பெரும் போர் நடந்தது. இப்போரில் பராந்தகருடைய மூத்த புதல்வராகிய இராஜாதித்தர், - இந்தப் பரத கண்டம் என்றும் கண்டிராத வீராதி வீரர்,- படைத் தலைமை வகித்தார். கன்னர தேவனுடைய சைன்யத்தை முறியடித்துவிட்டு யானை மீதிருந்தபடி

உயிர் துறந்து வீர சொர்க்கம் எய்தினார். அந்த வீரருடைய அம்பு பாய்ந்த சடலத்தை அப்படியே ஊருக்கு எடுத்து வந்தார்கள். அரண்மனையில் கொண்டு சேர்த்தார்கள். பராந்தக சக்கரவர்த்தியும் அவருடைய தேவிமார்களும் நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிர் துறந்த வீரப் பெருமகனின் உடலைத் தங்கள் மத்தியில் போட்டுக் கொண்டு கண்ணீர் பெருக்கினார்கள். திரைக்குப் பின்னாலிருந்து அசரீரி வாக்கு, "வருந்தற்க! வருந்தற்க! இளவரசர் இராஜாதித்தர் இறக்கவில்லை; சோழ நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கோயில் கொண்டு விளங்குகிறார்!" என்று முழங்கிற்று. இந்த இறுதிக் காட்சியுடன் நாடகம் முடிவடைந்தது.

அந்தத் தலைமுறைக்கு முந்திய தலைமுறையில் நடந்த வீரச் சம்பவங்கள் நிறைந்த இந்த நாடகத்தை ஜனங்கள் பிரமாதமாக ரஸித்து மகிழ்ந்தார்கள். சபையோருக்குள்ளே சலசலப்பு ஏற்பட்டதன் காரணம் என்னவென்றால்; பராந்தக தேவரது காலத்தில் நடந்த பெரும் போர்களில் அவருக்கு இரண்டு சிற்றரசர்கள் அருந்துணையாக இருந்தார்கள். ஒருவர் கொடும்பாளூர் சிற்றரசர்; இன்னொருவர் பழுவூர்க் குறுநில மன்னர். இந்த இருவரும் சோழ வசம்சத்தாருடன் உறவுத் தளையினால் பிணைக்கப்பட்டவர்கள். பெண் கொடுத்துப் பெண் வாங்கியவர்கள். இருவரும் இரண்டு கரங்களைப் போல் பராந்தகருக்கு உதவி வந்தார்கள். யார் வலக்கை, யார் இடக்கை என்று சொல்ல முடியாமலிருந்தது. இருவரையும் தம் இரண்டு கண்களைப் போலப் பராந்தக சோழர் ஆதரித்து, சன்மானித்து, வந்தார். இரண்டு கண்களில் எது உயர்வு, எது தாழ்வு என்று சொல்ல முடியாதுதானே? இப்போது அதிகாரம் செலுத்தி வந்த பழுவேட்டரையர்களின் பெரிய தந்தை பராந்தகருக்கு உதவி செய்தவர். அவர் பெயர் பழுவேட்டரையர் கண்டன் அமுதனார். ஈழத்தில் உயிர் துறந்த கொடும்பாளூர்ச் சிறிய வேளாரின் தந்தைதான் (அதாவது வானதியின் பாட்டனார்) பராந்தக தேவருக்குத் துணை புரிந்த கொடும்பாளூர்ச் சிற்றரசர்.

பராந்தக தேவரின் நாடகம் நடத்தியவர்கள் மேற்கூறிய இரண்டு சிற்றரசர்களுக்குள்ளே எவ்வித உயர்வு தாழ்வும் வேற்றுமையும் கற்பியாமல் மிக ஜாக்கிரதையாகவே நாடகத்தை ஒத்திகை செய்திருந்தார்கள். இருவருடைய வீரப் புகழும் நன்கு வெளியாகும்படி நடித்தார்கள். பராந்தக தேவர் அந்த இரு வீரர்களையும் சமமாகச் சன்மானித்ததைக் குறிப்பாக எடுத்துக் காட்டினார்கள்.

ஆன போதிலும் நாடகம் பார்த்த சபையோர் அத்தகைய சமபாவத்தைக் கொள்ள வில்லையென்பது சீக்கிரத்திலேயே வெளியாயிற்று. அவர்களில் சிலர் கொடும்பாளூர்க் கட்சி என்றும் வேறு சிலர் பழுவூர்க் கட்சி என்றும் தெரிய வந்தது. கொடும்பாளூர்த் தலைவன் வீரச் செயல் புரிந்ததை நாடக மேடையில் காட்டியபோது சபையில் ஒரு பகுதியார் ஆரவாரம் செய்தார்கள். பழுவூர் வீரன் மேடைக்கு வந்ததும் இன்னும் சிலர் ஆரவாரித்தார்கள். முதலில் இந்தப் போட்டி சிறிய அளவில் இருந்தது. வரவரப் பெரிதாகி வளர்ந்தது. நாடகத்தின் நடுநடுவே "நாவலோ* நாவல்!" என்னும் சபையோரின் கோஷம் எழுந்து நாலு திசைகளிலும் எதிரொலியைக் கிளப்பியது.


சபையில் எழுந்த இந்தப் போட்டி கோஷங்கள் குந்தவை தேவிக்கு உற்சாகத்தை அளித்தன. கொடும்பாளூர் கட்சியின் கோஷம் வலுக்கும் போது பக்கத்திலிருந்த கொடும்பாளூர் இளவரசியைத் தாண்டி, "பார்த்தாயா, வானதி! உன் கட்சி இப்போது வலுத்து விட்டது!" என்பாள். கள்ளங்கபடமற்ற வானதியும் அதைக் குறித்துத் தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்துவாள். பழுவூர்க் கட்சியாரின் கோஷம் வலுக்கும் போது இளைய பிராட்டி நந்தினியைப் பார்த்து, "ராணி! இப்போது உங்கள் கட்சி பலத்து விட்டது!" என்பாள். ஆனால் இது நந்தினிக்கு உற்சாகமூட்டவில்லை என்பதை அவள் முகக் குறி புலப்படுத்தியது. இந்த மாதிரி ஒரு போட்டி ஏற்பட்டதும், அதிலே ஜனங்கள் பகிரங்கமாக ஈடுபட்டுக் கோஷமிடுவதும், இளைய பிராட்டி அதை மேலும் தூண்டி விட்டு வருவதும், அந்த அற்பச்

* இந்த நாளில் உற்சாகத்தையும் ஆதரவையும் காட்டுவதற்கு ஜனங்கள் ஜயகோஷம் செய்வது போல் அக்காலத்தில் "நாவலோ நாவல்!" என்று சத்தமிடுவது வழக்கம்.

சிறுமி வானதியையும் தன்னையும் ஒரு நிறையில் சமமாக வைத்துப் பரிகசிப்பதும் நந்தினியின் உள்ளக் கனலைப் பன்மடங்கு வளர்த்து வந்தது. கோபித்துக் கொண்டு எழுந்து போய் விடலாமா என்று பல தடவை தோன்றியது. அப்படிச் செய்தால் அந்தப் போட்டியைப் பிரமாதப்படுத்தித் தன் தோல்வியை ஒப்புக் கொண்டதாகும் என்று எண்ணிப் பழுவூர் ராணி பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள்.

இதையெல்லாம் குந்தவை கவனித்து வந்தாள். நந்தினியின் மனோநிலையைக் கண்ணாடியில் பார்ப்பது போல் அவளுடைய முகத் தோற்றத்திலிருந்து தெரிந்து கொண்டு வந்தாள். ஆனால் வேறொரு விஷயம் இளைய பிராட்டிக்குத் தெரியாத மர்மமாயிருந்தது.

போரில் பாண்டிய மன்னன் தோல்வியடைந்தது, அவன் இலங்கை மன்னனிடம் சென்று சரணாகதி அடைந்தது, இலங்கை மன்னனிடம் உதவி பெறாமல் மணி மகுடத்தையும், இரத்தின ஆரத்தையும் அங்கேயே விட்டுவிட்டுச் சேர நாட்டுக்கு ஓடியது முதலியவற்றை நாடகத்தில் காட்டியபோது சபையோர் அனைவருமே அளவிலா உற்சாகத்தைக் காட்டினார்கள். ஆனால் நந்தினியின் முகம் மட்டும் அப்போதெல்லாம் மிக்க மன வேதனையைப் பிரதிபலித்தது. இதன் காரணம் என்னவென்பது பற்றி இளைய பிராட்டி வியப்புற்றாள். கொஞ்சம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்று எண்ணி, "சக்கரவர்த்தியும் நம்முடன்





இருந்து இந்த அருமையான நாடகத்தைப் பார்க்க முடியாமற் போயிற்றே? பாட்டனார் சாதித்த இக்காரியங்களை இவரும் தம் காலத்தில் சாதித்திருக்கிறார் அல்லவா? அப்பாவுக்கு மட்டும் உடம்பு குணமானால்?...." என்றாள்.

"தானே உடம்பு குணமாகி விடுகிறது. அவருடைய செல்வப் புதல்வியும் இங்கு வந்து விட்டீர்கள். இலங்கையிலிருந்து மூலிகையும் சீக்கிரம் வந்துவிட்டால்



சக்கரவர்த்திக்கு நிச்சயம் உடம்பு குண மாகிவிடும்'' என்றாள் நந்தினி.

''இலங்கையிலிருந்து மூலிகை வருகிறதா? அது என்ன?'' என்றாள் குந்தவை.

''தெரியாதவரைப் போல்

கேட்கிறீர்களே? இலங்கையிலிருந்து மூலிகை கொண்டுவரப் பழையாறை வைத்தியர் ஆள் அனுப்பியிருக்கிறாராமே? தாங்கள்தான் ஆள் கொடுத்து உதவினீர்கள் என்று கேள்விப்பட்டேனே? அது பொய்யா?''

குந்தவை பல்லினால் உதட்டைக் கடித்துக் கொண்டாள். பார்ப்பதற்கு முல்லை மொக்கைப் போல் பல் வரிசை அழகாயிருந்தாலும் கடிக்கப்பட்ட உதடுகளுக்கு வலிக்கத்தான் செய்தது. நல்லவேளையாக, ''நாவலோ நாவல்!'' என்னும் பெருங் கோஷம் அச்சமயம் எழுந்தபடியால் அந்தப் பேச்சு அத்துடன் தடைப்பட்டது.

சுந்தர சோழரின் வண்மையும் வனப்பும் ஆயுளும் அரகம் வாழ்கென வாழ்த்திவிட்டு நாடகம் முடிவடைந்தது. சபையோர் கலைந்து ஆனந்தக் குதூகலத்தினால் ஆடிக் கொண்டு தத்தம் வீடு சென்றார்கள். சிற்றரசர்களின் தேவிமார்களும் அவர்களுடைய பரிவாரங்களும் சென்றார்கள். பின்னர், சக்கரவர்த்தினி வானமகாதேவியும் மற்றுமுள்ள அரண்மனைப் பெண்டிரும் சோழர் குல தெய்வமான துர்க்கையம்மன் ஆலயத்துக்குப் புறப்பட்டார்கள்.

சுந்தர சோழர் உடல் நலம் எய்தும்படி மலையமானின் புதல்வி பல நோன்புகள் நோற்று வந்தார். துர்க்கை அம்மன் கோயிலுக்கு அடிக்கடி சென்று அவர் பிரார்த்தனை செலுத்துவது உண்டு. நவராத்திரி ஒன்பது நாட்கள் ராத்திரியும் துர்க்கை அம்மனுக்கு விசேஷ பூஜைகள் நடந்தன. சக்கரவர்த்தியின் சுகத்தைக் கோரிப் பலிகள் இடப்பட்டன. ஒவ்வொரு நாள் இரவும் மகாராணி கோயிலுக்குச் சென்று அர்த்த ஜாம பூஜைக்குப் பிறகு திரும்புவது வழக்கம். அரண்மனையின் மூத்த பெண்டிர் பலரும் மகாராணியுடன் ஆலயத்துக்குச் செல்வார்கள்.

இளம் பெண்களை துர்க்கை சந்நிதிக்கு அழைத்துப் போகும் வழக்கமில்லை. பூசாரிகள் மீது சில சமயம் சந்நதம் வந்து அகோரமாக ஆடுவார்கள். சாபம் விளைந்த வரலாறுகளைச் சொல்லுவார்கள். இளம் பெண்கள் பயப்படக் கூடும் என்று அழைத்துப் போவதில்லை.

ஆனால் இளையபிராட்டியிடம், ''நீ பயந்து கொள்வாய்!'' என்று சொல்லி நிறுத்த யாருக்குத் தைரியம் உண்டு? அந்த ஒன்பது தினமும் தாய்மார்களுடன் குந்தவையும் துர்க்கை கோயிலுக்குச் சென்று அம்மனுக்குப் பிரார்த்தனை செலுத்தி வந்தாள். இச்சமயங்களில் வானதி தனியாக அரண்மனையில் இருக்க வேண்டி நேர்ந்தது.

பராந்தக தேவர் நாடகம் நடந்த அன்று இரவு வானதியின் உள்ளம் உற்சாகத்தினால் பூரித்திருந்தது. தன் குலத்து முன்னோர்கள் செய்த வீரச் செயல்களை அரங்க மேடையில் பார்த்து அவளுக்குப் பெருமிதம் உண்டாகியிருந்தது. அத்துடன் இலங்கை நினைவும் சேர்ந்து கொண்டது. ஈழப் போரில் இறந்த தன் தந்தையின் நினைவும், தந்தையின் மரணத்துக்குப் பழிவாங்கி வரச் சென்றிருக்கும் இளவரசரின் நினைவும் இடைவிடாமல் எழுந்தன. தூக்கம் சிறிதும் வரவில்லை. கண்ணிமைகள் மூடிக் கொள்ள மறுத்தன. இளையபிராட்டி ஆலயத்திலிருந்து திரும்பி வந்து அன்றைய நாடகத்தைப் பற்றி அவளுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தால் பிறகு தூக்கம் வரலாம்; அதற்குமுன் நிச்சயமாக இல்லை.

வெறுமனே படுத்துப் புரண்டு கொண்டிருப்பதைக் காட்டிலும் அரண்மனை மேன்மாடத்தில் சற்று உலாவி வரலாமே என்று தோன்றியது. மேன்மாடத்திலிருந்து பார்த்தால் தஞ்சை நகரின் காட்சி முழுவதும் தெரியும். துர்க்கை ஆலயத்தைக் கூடப் பார்த்தாலும் பார்க்கலாம்.- இவ்விதம் எண்ணிப் படுக்கையை விட்டு எழுந்து சென்றாள். அந்த அரண்மனைக்கு வானதி புதியவள்தான். ஆயினும் மேன்மாட நிலா முற்றத்தைக் கண்டுபிடிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமாயிராது. நீள நெடுகப் பாதைகளும் இருபுறமும் தூண்களும் தூங்கா விளக்குகளும் இருக்கும் போது என்ன கஷ்டம்?

பாதைகள் சுற்றிச் சுற்றிச் சென்று கொண்டிருந்தன. முன்னிரவில் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்த விளக்குள் பல அணைந்து விட்டன. சில புகை சூழ்ந்து மங்கலாக ஒளி தந்தன. ஆங்காங்கு பாதை முடுக்குகளில் தாதிமார்கள் படுத்தும் சாய்ந்தும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை எழுப்பி வழி கேட்க

இஷ்டப்படாமல் வானதி மேலும் சென்று கொண்டிருந்தாள். அந்த அரண்மனைப் பாதைகளுக்கு ஒருமுடிவேயில்லை போலத் தோன்றியது.

திடீரென்று ஒரு குரல் கேட்டது. அது தீனமான துயரக் குரலாகத் தொனித்தது. வானதிக்கு ரோமாஞ்சனம் உண்டாயிற்று. உடம்பு நடுங்கியது. அவளுடைய கால்கள் நின்ற இடத்திலேயே நின்றன.

மறுபடியும் அந்த அபயக் குரல்.

"என்னைக் காப்பாறுவார் யாருமில்லையா?"

"ஆகா! இது சக்கரவர்த்தியின் குரல் போல அல்லவா இருக்கிறது? என்ன ஆபத்தோ தெரியவில்லையே? உடல் நோயின் கோளாறா? அல்லது வேறு ஏதாவது இருக்குமா? சக்கரவர்த்தினி முதலிய மூத்த பெண்டிர் அனைவரும் கோயிலுக்குச் சென்று விட்டார்களே? சக்கரவர்த்திக்குப் பக்கத்தில் யாரும் இல்லாமலா இருப்பார்கள்? ஆயினும் போய்ப் பார்க்கலாம்.

நடுங்கிய கால்களை மெதுவாக எடுத்து வைத்து வானதி மேலும் சில அடிகள் நடந்தாள். குரல் கீழேயிருந்து வருவதாகத் தோன்றியது. அந்த இடத்தில் பாதையும் முடிந்தது. குனிந்து பார்த்தால் கீழே ஒரு விசாலமான மண்டபம் தெரிந்தது. ஆகா! சக்கரவர்த்தியின் சயனக்கிரஹம் அல்லவா இது? ஆம்; அதோ சக்கரவர்த்திதான் படுத்திருக்கிறார்; தன்னந்தனியாகப் படுத்திருக்கிறார்.மேலும் அவர் ஏதோ புலம்புகிறார். என்னவென்று கேட்கலாம்!

"அடிப்பாவி! உண்மைதானடி! நான் உன்னைக் கொன்றுவிட்டது உண்மைதான்! வேண்டுமென்று கொல்லவில்லை. ஆனாலும் உன் சாவுக்கு நான்தான் காரணம். அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய்? வருஷம் இருபத்தைந்து ஆகிறது. இன்னமும் என்னை விடாமல் சுற்றுகிறாயே? உன் ஆத்மாவுக்குச் சாந்தி என்பதே கிடையாதா? எனக்கும் அமைதி தரமாட்டாயா? என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டுமோ, சொல்! அந்தப்படி செய்து விடுகிறேன். என்னை விட்டுவிடு!.... ஐயோ! என்னை இவளுடைய கொடுமையிலிருந்து விடுவிப்பார் யாருமில்லையா? எல்லாரும் என் உடல் நோய்க்கு மருந்து தேடுகிறார்களே! என் மன நோயைத் தீர்த்துக் காப்பாற்றுவார் யாரும் இல்லையா!....போ! போ! போய்விடு!... இல்லை, போகாதே! நில்! நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போ! இப்படி மௌனம் சாதித்து என்னை வதைக்காதே! வாயைத் திறந்து ஏதாவது சொல்லிவிட்டுப் போ!"

இந்த வார்த்தைகள் வானதியின் காதில் இரும்பைக் காய்ச்சி விடுவது போல் விழுந்தன. அவளுடைய உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் குலுங்கியது. தன்னையறியாமல் கீழே குனிந்து பார்த்தாள். மண்டபத்தில் நாலாபுறமும் அவளுடைய பார்வை சென்ற வரையில் பார்த்தாள்.

சக்கரவர்த்திக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அது பெண்ணின் உருவம். பாதி உருவம் தான் தெரிந்தது. பாக்கிப் பாதி தூண் நிழலிலும் அகில் புகையிலும் மறைந்திருந்தது. தெரிந்த வரையில் அந்த உருவம்... ஆ! பழுவூர் இளைய ராணியைப் போல அல்லவா இருக்கிறது? இது என்ன கனவா! சித்தப் பிரமையா? இல்லை! உண்மையே தான்! அதோ அந்தத் தூண் மறைவில் ஒளிந்து நிற்பது யார்? பெரிய பழுவேட்டரையர் அல்லவா? சந்தேகமில்லை! அவர்கள்தான்! பழுவூர் இளைய ராணியைப் பார்த்து விட்டா சக்கரவர்த்தி அப்படியெல்லாம் பேசுகிறார்? "உன்னைக் கொன்றது உண்மைதான்" என்று அலறினாரே, அதன் பொருள் என்ன?...

திடீரென்று வானதிக்கு மயக்கம் வரும் போலிருந்தது; தலை சுற்றத் தொடங்கியது, இல்லை, அந்த அரண்மனையே சுற்றத் தொடங்கியது. சீச்சீ! இங்கே மயக்கமடைந்து விழக் கூடாது. கூடவே கூடாது.

பல்லைக் கடித்துக் கொண்டு வானதி அங்கிருந்து சென்றாள். ஆனால் திரும்பிச் செல்லும் பாதை தொலையாத பாதையாயிருந்தது. அவள் படுத்திருந்த அறை வரவே வராது போல் தோன்றியது. முடியாது; இனிமேல் நடக்க முடியாது; நிற்கவும் முடியாது.........

குந்தவைப் பிராட்டி கோயிலிலிருந்து திரும்பி வந்தபோது வானதி அவள் அறைக்குச் சற்றுத் தூரத்தில் நடைபாதையில் உணர்வற்றுக் கட்டைபோல் கிடப்பதைக் கண்டாள்.

(தொடரும்)

கல்கி கலெக்ஷன்

மழையைக்

• அதிதி

மழையைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் அது விஷயத்தில் நானும் திருவள்ளுவரும் ஏக அபிப்பிராயம் உடையவர்கள் என்பதைத் தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள். இத்தனைக்கும் அவரும் நானும் கலந்து பேசிக் கொண்டதில்லை. அவராகவே சிந்தித்து மழையைப் பற்றி ஒருவித முடிவுக்கு வந்தார். நானும் எனக்குள் ஆராய்ச்சி செய்து அதே முடிவுக்கு வந்து சேர்ந்தேன். என்ன ஆச்சரியம், பாருங்கள்! மானதத் தந்தி என்கிறார்களே, இதுதான் போலிருக்கிறது.

திருவள்ளுவர் தமது திருக்குறளில் திருமழையைப் பற்றித் திருவாய் மலர்ந்திருப்பது என்ன? "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பு - துப்-துப்-து-" "ஊஹூம்! வர மாட்டேனென்கிறது. தள்ளுங்கள். 'எடுத்துக்காட்டு'களில் எனக்கு எப்போதுமே நம்பிக்கை கிடையாது. போனால் போகிறதென்று ஒரு குறள் வெண்பாவை எடுத்துக் காட்டலாமென்றால் சமயத்தில் அது முரண்டிக் கொள்கிறது.

பார்க்கப் போனால், எழுத்து அவ்வளவு முக்கியமல்லவன்றோ? கருத்துதானே முக்கியம்? திருவள்ளுவரின் கருத்து நமக்குத் தெரியும். "மழையில்லாவிட்டால் உலகத்தில் ஜீவராசிகள் உயிர் வாழ முடியாது" என்று அவர் அறுதியிட்டு உறுதி கூறுகிறார். என்னுடைய தனி ஆராய்ச்சியிலும் இதுதான் புலனாயிற்று. ஆனால் திருவள்ளுவரைக் காட்டிலும் நான் ஒருபடி முன் செல்கிறேன். "மழையில்லாவிடில் நாம் உயிர் வாழ முடியாது" என்றுதானே அவர் சொல்கிறார்? நான் அத்துடன் நிற்கவில்லை.

இன்றைய தினம் கடவுளை நான் நேருக்கு நேர் பார்க்க நேர்ந்தால் அவரிடம் ஒளிவு மறைவில்லாமல் நான் தெரிவிக்கக் கூடியது இதுதான்:- "பகவானே! தங்களுடைய சிருஷ்டியாகிய இந்த உலகத்தைப் பற்றித் தாங்கள் அவ்வளவாகப் பெருமையடித்துக் கொள்வதில்லை. இதில் காணப்படும் குறைபாடுகள் அனந்தம். அப்போதே அடியேனைக் கலந்து கொண்டிருந்தால் அந்தக் குறைபாடுகள் ஒருவேளை இல்லாமலிருந்திருக்கலாம். போனது போகட்டும். சென்றதினி மீளாது. எனினும், அவ்வளவு குறைபாடுகளுக்கும் ஈடு செய்யக் கூடியதாக மழை என்பதாய் ஒன்றை வைத்திருக்கிறீரே, அதுதான் தேவரீருடைய புத்திசாலித்தனத்தில் எனக்கு நம்பிக்கையுண்டாக்குகிறது. மழையை மட்டும் வையாமலிருந்தீரோ, தேவரீருடைய உலகில் உயிர் வாழ்வதற்கு அடியேன் நிச்சயமாய் மறுத்து விடுவேன்" என்பேன்.

மனிதன் கடவுளுடன் எவ்வளவோ விஷயங்களில் போட்டியிடுகிறான். அவருடைய சிருஷ்டி இயற்கையில் பற்பல மாறுதல்கள் செய்திருக்கிறான். மனிதன் தாடி வளர்க்க வேண்டுமென்பது கடவுளுடைய சித்தம். ஆனால் இந்தக் கடவுள் சித்தம் நிறைவேறாமல் பண்ணும் முயற்சியில் எத்தனையோ க்ஷவரக் கத்திக் கம்பெனிகள் பிழைத்து வருகின்றன.



இம் மாதிரியே பல காரியங்கள். ஆனால் மழை ஒன்றின் விஷயத்தில் மட்டும் மனிதனுடைய பாச்சா ஒன்றும் பலிக்கவில்லை. மழை எப்படி உண்டாகிறது என்பதைப் பற்றியெல்லாம் மனிதன் அலசி ஆராய்ச்சி செய்திருப்பது உண்மையே. இந்திரன் வஜ்ஜிராயுதத்தினால் அடித்து மேகங்களை உகப்பி விட்டுக் கடலில் நீர் மொள்ளச் செய்து நிலத்தில் பொழிவிக்கிறான் என்னும் அழகான கற்பனையையெல்லாம் மனிதனுடைய பாழும் ஆராய்ச்சி பாழ் பண்ணி விட்

டது. இப்போது தண்ணீர் எப்படி ஆவியாக மாறுகிறது, பிறகு மழையாகப் பெய்கிறது என்பதையெல்லாம் நாம் நன்கு அறிவோம். ஏன்? ஒரு மழைத்துளி எந்தெந்தப் பொருள்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்டது, அதில் பிராணவாயு எவ்வளவு பங்கு, ஜலவாயு எவ்வளவு பங்கு என்பதெல்லாம் கூடப் புத்தகத்தில் இருக்கின்றன. ஆனால் மழை உண்டாக்கும் விதம் ஒன்று மட்டும் மனிதன் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

மழை பெய்விக்கத்தான் மனிதனுக்குத் தெரியவில்லையே, மழை பெய்யாமல் நிறுத்தி விடவாவது அவனால் முடியுமா? "முடியாது" என்று ஏகமனதாகச் சொல்கிறீர்கள். உங்கள் பதில் தவறு என்பதைத் தயவு செய்து தெரிந்து கொள்க. மகா-ஸ்ரீ-ஸ்ரீ-ஸ்ரீ செங்கோடக் கவுண்டரைக் கேட்டால், "மழையை நிறுத்த முடியும்" என்று தெரிவிப்பார், கருப்பக் கவுண்டர், பெரியாக் கவுண்டர், சின்னக் கவுண்டர் முதலியோரும் அப்படியே தெரிவிப்பார்கள். ஸ்ரீமதிகள் கருப்பாயி அம்மாள், பாவாயி அம்மாள் ஆகியவர்களும் அதற்கு அத்தாட்சி சொல்வார்கள். மழை பெய்யாமல் செய்வதற்கும், வருகிற மழையைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று வழிகள் உண்டென்று அவர்கள் கூறுவார்கள்.

சேலம் ஜில்லாவில் கிராமாந்திரப் பிரதேசத்திலுள்ள கரடு முரடான பட்டிக் காட்டுச் சாலை ஒன்றுக்கு என்னுடன் வாருங்கள்............... வேண்டாம்; சினிமாக்களில் செய்வதுபோல அந்தப் பட்டிக் காட்டுச் சாலையை உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்துகிறேன். நீங்கள் பார்ப்பது என்ன? நாலு இளைஞர்கள் சற்று முன் பின்னாக ஓடுகிறார்கள். நால்வரும் கிராப்புத் தலைக்காரர்கள். தூய வெள்ளைக் கதருடை தரித்தவர்கள், முகங்களில் களை பொருந்தியவர்கள். இவர்கள் ஓடுவது தேகாப்பியாசத்திற்காக.

கட்டும் மாயை!

அமரர் கல்கி

தேச சேவை செய்வதென்று ரயில் பாதைக்கு பதின்மூன்று மைலுக்கப்பால் வந்திருப்பவர்கள் இவர்கள். "வாலிபால்," "புட்பால்," "டென்னிஸ்", "ஹாக்கி" முதலியவைகளைப் பற்றி நினைத்துப் பெருமூச்சு விடுவதைத் தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை. ஓட்டம் ஒன்றுதான் சுலபமாகச் செய்யக்கூடிய தேகாப்பியாசம்.

ஆனால் சாலைக்குப் பக்கத்தில் காட்டில் வேலை செய்து கொண்டிருக்கிற செங்கோடக் கவுண்டர் அவர்கள் ஓடுவதைப் பார்த்து என்ன நினைக்கிறார் தெரியுமா? அவர் தமது தர்மபத்தினியை அழைத்து அவசரமாய்ச் சொல்லுவதைக் கேளுங்கள். "அதோ பார்த்தயா? அந்தப் பாவிங்க ஓடுகிறதை! இப்படி ஓடி ஓடித்தான் மழையைக் கட்டி விடுகிறாங்களாம்!" என்கிறார். ஸ்ரீமதி கருப்பாயி அம்மாள் சகலமும் தெரிந்த தோரணையில் தலையை அசைக்கிறாள். "அது என்ன மந்திரமோ, மாயமோ! இந்த ஆச்சரமம் வந்ததிலிருந்து மழையே பேயறதில்லை" என்கிறாள். இந்த மாதிரிப் பேச்சு எங்கேயும் பரவுகிறது. சுப்பண்ணன் வீரப்பனிடம் சொல்லுகிறான்:- "நேத்து சாயங்காலம் பாரு! கிழக்கே இருண்டுக்கிட்டு ஒரேமேகமாகக் கிளம்பிச்சு. உடனே அவசர அவசரமாய் ஆச்சரமத்து ஆளுங்க நாலு பேர் கிளம்பி ஓடினாங்க. வந்த மேகம் எப்படியோ ஒரு நொடியில் மறைந்து போச்சு!" - மழையை நிறுத்துவதற்கு ஒரு வழி இப்போது தெரிந்ததல்லவா?

காந்தி கக்ஷியைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு வகைப் பைத்தியம் இருக்கும். தொண்டர் வேங்கடராமையருக்கு ஆஸனங்களில் பைத்தியம். மகாத்மா காந்தி முன்னர் 'அப்பெண்டிஸிடிஸ்' என்னும் நோய்க்

கல்கி கலெக்ஷன்

காகப் பூனா ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் செய்யப்படுவதற்கு இருந்தாரல்லவா? அப்போது தொண்டர் வேங்கடராமன் "ஆபரேஷனை நிறுத்தவும்; ஒன்பது சர்வாங்காசனமும், இருபத்தேழு மவுலியும் செய்யவும்" என்று காந்திஜிக்குத் தந்தி கொடுத்ததாகக் கேள்வி. இத்தகையவர் ஒரு நாள் அதிகாலையில் லங்கோடு மட்டும் கட்டிக் கொண்டு 'சிர்ஷாஸனம்' செய்து கொண்டிருந்தார். இதைச் சிரஸாஸனம் என்றும் சொல்லுவார்கள். தெளிவாகச் சொன்னால் தலையைத் தரையில் நட்டுக் கொண்டு கால்களை செங்குத்தாக மேலே தூக்கிக் கொண்டு நிற்றல். அன்று, வழக்கத்தைவிடச் சிறிது சீக்கிரமாக வந்த நூல்காரி ஸ்ரீமதி வீராயி அம்மாள் அதைப் பார்த்து விட்டாள். அடுத்தாற்போல் வந்த குப்பாயியிடம் அவள், "என்ன அதிசயத்தைக் கேக்கறே, போ! இந்த மூக்கய்யர் இருக்கிறாரல்ல, காலை மேலே தூக்கிக்கிட்டு மானத்துக்குப் பழிப்புக் காட்டிக்கிட்டிருந்தாரு. என் கண்ணாலே பார்த்தேன். மழை பெய்யலை, பெய்யலை என்றால் எப்படிப் பெய்யும்?" என்று தெரிவித்தாள். மூக்கய்யர் தலைகீழாக நிற்பதனால்தான் மழை பெய்யவில்லை யென்னும் செய்தி கிராமங்களில் அதிவேகமாகப் பரவிற்று. மழையை நிறுத்துவதற்கு இது இரண்டாவது வழி.

மேற்சொன்ன இரண்டு வழிகளையும் சிற்சிலர் சொற்ப காலத்துக்கு மட்டுமே நம்பினார்கள். ஆனால் சுமார் ஏழு வருஷகாலம் மழையை நிறுத்துவதற்குரிய வழியென்பதாக ஆயிரக்கணக்கான ஜனங்களால் நம்பப்பட்டு வந்தது வேறொன்று. அதுதான் 'சாதி' ஹிந்துக்கள் ஹரிஜனங்களுடன் சேர்ந்து ஒன்றாக வாழ்ந்தது. "பார்ப்பார்களும் பறையர்களும் ஒன்றாயிருந்தால் சாமிக்கு ஒறுக்குமா? அதுதான் மழையே இல்லாமல் அடித்து விட்டார்" என்று இரகசியமாகவும், பகிரங்கமாகவும் தமிழ்நாட்டின் ஒரு பிரதேசத்தில் ஜனங்கள் சுமார் ஏழு வருஷ காலம் பேசி வந்தார்கள். அந்தப் பிரதேசம் சேலம் ஜில்லாவில் ஒரு பகுதி. குருட்டு நம்பிக்கைகளிலும் முரட்டுத்தனத்திலும் இந்தப் பகுதியைத் தோற்கடிக்கக் கூடிய வேறு பிரதேசத்தை உங்களில் யாராவது கண்டிருந்தால் அவர்களிருக்கும் திக்கு நோக்கிக் கும்பிடுகிறேன். அவர்கள் பாக்கியசாலிகள். ஆனால் அத்தகைய பாக்கியத்தை எனக்கு அளித்து விட வேண்டாமென்று பகவானைப் பிரார்த்திக்கிறேன்.

இத்தகைய பிரதேசத்தின் மத்தியில் வசித்து, சென்ற ஒன்பது வருஷ காலமாக இளைஞர்கள் சிலர் மௌனத் தொண்டு புரிந்து வருகிறார்கள். இவர்கள் வசிக்கு மிடத்திற்குக் "காந்தி ஆசிரமம்" என்று பெயர். இது திருச்செங்கோட்டிற்கு ஏழு மைல் தூரத்திலுள்ள புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் ஒரு விஸ்தாரமான தோட்டத்தில் அமைந்திருக்கிறது. இந்தத் தோட்டம் காலஞ்சென்ற மிட்டாதார் இரத்தின சபாபதிக் கவுண்டர் அளித்த நன்கொடையாகும். மனப்பூர்வமாக, அந்தரங்க சுத்தியுடன் அவரளித்த நன்கொடை இது என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் பாலைவனத்துக்கு நடுவே விளங்கும் ஜீவபூமியைப் போல, எங்கே பார்த்தாலும் பொட்டைத் திடல்களாகக் காணப்படும் பிரதேசத்திற்கு நடுவில் பச்சைப் பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியாய்த் தோன்றும் இந்தத் தோட்டத்தைக் கொடுக்க மனம் வருமா?


• ஆசிரமத் தலைவர்

காந்தி ஆசிரமம் சுற்றுப்புறத்துக் கிராமவாசிகளுக்குச் செய்திருக்கும் சேவையின் தன்மையைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து ஒருவாறு அறியலாம். சென்ற ஒன்பது வருஷங்களில், நூற்றும் கூலி



ரூ.2,22,947-ம், நெசவுக் கூலி ரூ.2,24,872-ம், சலவைக் கூலி ரூ.12,685-ம் சுற்றுப்புற கிராமவாசிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. (இந்தப் பணமெல்லாம் ஆசிரமத்தில் மரம் வைத்துக் காய்த்தல்லவென்றும், நேயர்கள் கதராடைக்காகக் கொடுத்த பணம் தானென்றும் சொல்ல வேண்டியதில்லை. எனவே, நாம் கதர்த்துணி வாங்குவதைப் பொறுத்துத் தான் மேற்படி தொண்டு நீடித்து நடக்குமென்பதை ஞாபகப் படுத்துகிறேன்.) இதைத் தவிர, இலவச வைத்தியம் செய்யும் ஆஸ்பத்திரி ஒன்று நடத்துகிறார்கள். ஆறு இடங்களில் குழந்தைகளுக்கு எண்ணெய் தடவி, சோப்புத் தேய்த்துக் குளிப்பாட்டும் தொண்டு நடத்துகிறார்கள். ஹரிஜனக் குழந்தைகளுக்கென்று ஆறு கிராமங்களில் ஆறு பள்ளிக்கூடங்களும், மூன்று இராப் பள்ளிக் கூடங்களும் நடத்தப்படுகின்றன. கிராமவாசிகளுக்குச் சுத்தமாக வாழும் முறை கற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் ஆறு குடிசைகள் அடங்கிய ஒரு சிறு கிராமம் புதிதாக ஏற்படுத்தி, அவைகளில் ஆறு ஹரிஜன குடும்பங்களை வைத்திருக்கிறார்கள். செருப்புத் தொழில் தெரிந்த ஹரிஜனங்களுக்கு வேலை கொடுப்பதற்காகச் செருப்புத் தொழிற்சாலையொன்று நடத்தப்படுகிறது. கொடிய பஞ்சம் பரவியிருந்த 1928-ம் வருஷத்தில் ஏழைகளுக்குப் பாதி விலைக்குத் தானியங்கள் வரவழைத்துக் கொடுக்கப் பட்டன. இதற்காக ஆசிரமம் செலவிட்ட தொகை ரூ.12,020. குடி தண்ணீருக்குக் கஷ்டம் மிகுந்திருந்த கிராமங்களில் கிணறுகள் வெட்ட ரூ.3103-ம், பம்புகள் வைக்க ரூ.1108-ம் செலவிட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு சேவை புரிந்திருக்கும் ஆசிரமம் சுற்றுப்புற கிராமவாசிகளால் பகிஷ்காரத்திற்கு உள்ளாயிற்று என்றால் அது உண்மையாகவே வியப்புக்குரியதல்லவா? ஒரு தடவையல்ல; மூன்று தடவை ஆசிரமத்தைப் பகிஷ்கரிப்பதற்கு முயற்சிகள் நடந்தன. ஆசிரமவாசிகளுக்குப் பால், தயிர் கொடுக்கக் கூடாதென்று கட்டுப்பாடு செய்யப்பட்டது. ஆசிரமத்தில் வேலை செய்த வேலைக்காரர்கள் வேலைக்குப் போகக் கூடாதென்று தடுக்கப்பட்டனர். நூல் கொண்டு போகக் கூடாது, துணி கொண்டு போகக் கூடாது என்றெல்லாம் கூடக் கட்டுப்பாடுகள் நடந்தன. ஆனால் ஒவ்வொரு தடவையும் ஆசிரமத் தொண்டர்கள் காட்டிய பொறுமையினாலும் உறுதியினாலும் அம்முயற்சிகள் தோல்வியடைந்தன.

நன்றியில்லாத் தன்மைக்குச் சிகரம் போல் காணப்படும் இத்தகைய பகிஷ்கார முயற்சிகள் தோன்றுவதற்குக் காரணம்தான் என்ன? சில்லரைக் காரணங்கள் பல இருக்கலாம். ஆனால் முக்கியமான காரணம் மக்களின் மனதில் வேரூன்றியிருந்த மூட நம்பிக்கையேயாகும். புதுப்பாளையத்தில் காந்தி கக்ஷிக்காரர்கள் வந்து ஆசிரமம் ஏற்படுத்தியதனால்தான் மழை பெய்யவில்லையென்றும், அதற்குக் காரணம் ஆசிரமத்தில் தீண்டாதவர்களைச் சேர்த்துக் கொண்டிருப்பதுதானென்றும் எப்படியோ கிராமவாசிகளுக்குள் நம்பிக்கை பரவிவிட்டது. சுயநலக் காரணங்களினால் விரோதபாவம் கொண்ட விஷமிகள் சிலர் இந்த நம்பிக்கையை வளர்த்து விருத்தி செய்து வந்தார்கள். இந்த நம்பிக்கைக்கு அடிப்படையே கிடையாதென்று சொல்ல வேண்டியதில்லை. ஆசிரமம்

கல்கி கலெக்ஷன்

ஏற்படு வதற்குச் சில வருஷங்களுக்கு முன்னாலிருந்தே அந்தப் பிரதேசத்தில் மழையில்லாமலிருந்தது. உண்மையில், பஞ்ச நிவாரண முறையாகவே அங்கு முதல் முதல் கதர்வேலை தொடங்கப்பட்டது. அப்படியிருக்க, இந்தப் பொய் நம்பிக்கை பரவி வேரூன்றியதேன்? கதைக்குக் காலில்லை என்பார்கள். மூட நம்பிக்கைகளுக்கும் ஆதாரம் வேண்டியதில்லை என்று தோன்றுகிறது.

மேற்படி ஆசிரமத்தில் சுமார் மூன்று வருஷகாலம் வசித்துத் தொண்டு செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. ஒற்றை வரிசைக் கள்ளிக்கோட்டை ஓடு போட்ட கூரைக்கு அடியில் வெப்பத்தில் வெந்து கொண்டு "விமோசனம்" பத்திரிகைச் சந்தாதாரர்களின் விலாசம் எழுதிய நாட்களை நினைத்துச் சில சமயம் நான் பெருமூச்சு விடுவதுண்டு. அதே கூரையின் அடியில் தமிழ்நாட்டுத் தலைவரும் வெந்து கொண்டிருந்தார் என்ற எண்ணம்தான் அந்த நாட்களின் மீது நான் அவ்வளவு பிரியம் கொள்வதற்குக் காரணம். எனவே, காந்திஜி தமது சுற்றுப் பிரயாணத்தின்போது ஆசிரமத்திற்கு வந்து இரண்டு நாள் தங்கப் போகிறாரென்று அறிந்ததும், அதை வியாஜமாகக் கொண்டு அவ்விடம் போய் வருவதென்று தீர்மானித்தேன். தலைவர் அரை வார்த்தையாக "வருகி-?" என்று கேட்கத் தொடங்கியதும், "ஆஹா, வருகிறேன்!" என்று பதிலளித்தேன். "ஹரிஜன்" சாஸ்திரி தம்பதிகளும் அங்கு வரப் போகிறார்களென்று தெரிந்ததும் குதூகலம் பன்னிரண்டு மடங்கு பெருகிற்று. (குதூகலத்தை அவ்வளவு கணக்காக எப்படி அளந்து சொல்கிறாய் என்றால், கால் மடங்கு அரை மடங்கு கூடக் குறைய இருந்தாலும், மோசம் முழுகிவிடாதல்லவா? –)

ஆசிரமம் சேர்ந்ததும், நண்பர்களிடம் நான் கேட்ட முதல் கேள்வி "பகிஷ்காரமெல்லாம் என்ன ஆயிற்று?" என்பது தான். "அதெல்லாம் பழைய கதை. இப்போது அந்தப் பேச்சே கிடையாது" என்றார்கள். சென்ற இரண்டு வருஷங்களில் நல்ல மழை பெய்த காரணத்தினால், சுற்றுப்புறத்துக் கிராமவாசிகளின் குருட்டு நம்பிக்கை அடியோடு வீழ்ந்துவிட்டதென்று தெரிந்தது. தேகாப்பியாசத்துக்காக ஓடுவதினாலோ, தலைகீழாக நிற்பதினாலோ மழையை நிறுத்த முடியாதென்று அவர்கள் அறிந்து கொண்டார்கள். ஹரிஜனங்களும் மற்ற ஜாதியாரும் ஒரே கிணற்றில் தண்ணீர் மொள்வதினால்கூட மழை நிற்காது என்று அவர்கள் உறுதி பெற்றார்கள். தொண்டர் சொல்கிறார்:- "நமது தீண்டாமைப் பாவத்தினால்தான் பீஹாரில் பூகம்பம் வந்ததென்று காந்திஜி சொல்கிறாரல்லவா? அதைக் கூட இப்போது இந்தப் பிரதேசவாசிகள் நம்ப மாட்டார்கள். கவி தாகூரின் கட்சியில் பலமாக நின்று பகுத்தறிவை ஆதரிப்பார்கள்."

காந்தி ஆசிரமம் செய்திருக்கும் தொண்டுகள் எல்லாவற்றிலும் இதுவே மிகச் சிறந்ததென்று எனக்குத் தோன்றியது. ஆயிரக்கணக்கான ஏழை ஜனங்களுக்குப் பசிக்கு உணவும், குடிக்க நீரும், உடுக்க உடையும், நோய்க்கு மருந்தும் அளித்து உதவியதெல்லாவற்றையும்விட அவர்களுடைய அறிவைச் சூழ்ந்திருந்த கனத்த இருளில் ஒரு பகுதியையாவது தகர்த்தார்களே, அதுவே மிகச் சிறந்த உதவியன்றோ? இதைச் செய்து வெற்றி பெற்ற தொண்டர்களிடம் எவ்வளவு பொறுமை, எவ்வளவு உறுதி, எவ்வளவு அன்பு இருந்திருத்தல் வேண்டும்? "தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே" என்னும் முதுமொழி இவர்களுக்காகவே ஏற்பட்டது போலும்.

[ஆனந்தவிகடன் (4.3.1934) இதழிலிருந்து]


கல்கி
தீபாவளி மலர் '98
கம்பீரமான கலைப் படைப்பு!
• அமைதி தரும் ஆன்மிக விஷயங்களின் அணிவகுப்பு • காஞ்சி, சிருங்கேரி பெரியவர்களின் அருளுரைகள் • பௌத்தம் வளர்ந்த கதை • தக்கோல மகிமை • திருக்குறுங்குடி சிறப்புகள் • அன்னபூரணி வண்ணப்படம் • காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அரிய கட்டுரை.
இன்னும் கலை, இலக்கியம், வனவளம், விவசாயம், பொருளாதாரம், சினிமா என்று பலதுறைகளிலும் நுழைந்து உலா வரப்போகும் உங்கள் அபிமான கல்கி தீபாவளி மலர் குறித்து மேலும் விவரங்கள் தொடரும்...
விலை ரூ. 50/-
மறவாமல் உள்ளூர் கல்கி ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.
– நிர்வாகி, கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை - 600 097.
• வண்ணப்படம்: எம். அமிர்தம்



கடல் தாண்டிச் சென்று வந்தால் வேலைப் பிரஷ்டம்!

வெளிநாடுகளிலுள்ள நமது இந்துக் கோயில்களுக்கு அர்ச்சகராகவோ பட்டாச்சார்யார்களாகவோ சென்று பணியாற்றி விட்டு மறுபடியும் நம் நாட்டுக்கே வருபவர்களுக்கு இங்கே பூஜை செய்ய அனுமதி இல்லையாம்...

பெயர்தான் நியூஜெர்ஸி (அமெரிக்கா) பாலாஜி மந்திர். அங்கேயொரு பெரிய ஹாலில்தான் பெருமாள், ஐயப்பன், ஈஸ்வரன், கணபதி, துர்க்கா, சரஸ்வதி, லட்சுமி எல்லோரையும் வைத்து பூஜித்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டிலிருந்தும் ஆந்திராவில் இருந்தும் அர்ச்சகர்களும் பட்டாச்சார்யார்களுமாக மொத்தம் ஆறு பேர் அங்கே இருந்தோம். கோயில் காலை எட்டரை மணிக்குத்தான் திறக்கும். வார நாட்களில் கூட்டம் இருக்காது. ஆனால் சனி, ஞாயிறு விடுமுறைகளில் கூட்டம் அலைமோதும். 200, 300 கி.மீயில் இருந்து காரில் வருவார்கள். ஒன்பது டாலர் கட்டி அர்ச்சனை செய்வார்கள். அன்று ஒருநாள் மட்டும் 300, 400 அர்ச்சனைகள் நடக்கும்.

ஆயிரக்கணக்கில் தமிழர்களும், லட்சக் கணக்கில் இந்தியர்களும் அங்கிருக்கிறார்கள். என்றாலும் அங்குள்ள கோயிலில் இருக்கும் அர்ச்சகர்கள் தவிர தனியாக யாரும் கிடையாது. எனவே தமிழர்கள், இந்தியர்கள் வீடுகளில் நடக்கும் நல்லது, கெட்டது எல்லாவற்றுக்குமே கோயிலிருந்துதான் 'வாத்யார்கள்' சென்று சடங்குகளை நிறைவேற்ற வேண்டும். (அங்கே வைஷ்ணவர், சைவர் என்றெல்லாம் வேற்றுமை பார்ப்பது கிடையாது)

இந்தியர்கள் யார் இறந்து போனாலும் தகவல் வரும். நாங்கள் சுடுகாடு வரைக்கும் சென்று காரியங்களைச் செய்வோம்.

ஆகம காரியங்களுக்காக அமெரிக்காவுக்குச் சென்ற எனக்கு, இது போன்ற ஈம காரியங்களுக்கும் பயன்பட்டுக் கொண்டிருந்ததில் உடன்பாடு இல்லை.

கூடவே எனக்கு இன்னொரு வருத்தமும் இருந்தது. அங்கே நம்மவர்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடன்தான் இருக்கிறார்கள். என்றாலும் கோயிலில் அவர்களால் சுத்த பத்தத்தைக் காப்பாற்ற முடியவில்லை. உதாரணமாக, கோயில் மடைப்பள்ளியில் சமைத்ததைத்தான் ஸ்வாமிக்கு நைவேத்யமாகப் படைக்க வேண்டும். ஆனால் அங்கு எல்லோரும் வீட்டில் இருந்து சமைத்துக் கொண்டு

வரும் கண்டல், லட்டு போன்ற வற்றைத்தான் ஸ்வாமிக்கு நைவேத்யமாய் படைக்கிறார்கள். ஆகம விதிகளின்படி இது சரியல்ல. வைணவர்கள் சைவ சம்பிரதாயங்களையும் நடத்தி வைக்க வேண்டியிருக்கிறது!

பனிக் காலத்தில் சாலையில் நான்கடி பனி இருக்கும். தினசரி யாராவது புது கார் வாங்குவார்கள். பனியில் ஷூவை மாட்டிக் கொண்டுதான் கார்களுக்கு பூஜை செய்ய வேண்டும்.

அங்கே தனியாக பூக்காரர்கள் கிடையாது. ப்ளோரிடாவில் இருந்து வெள்ளை சாமந்தி வரும். அதை நாங்கள் மாலையாகத் தொடுப்போம். வாரத்திற்கு ஒரு முறைதான் ஸ்வாமிக்கு மாலை போட முடியும். ஆவணி அவிட்டத்தின்போது பூணூலைப் போட்டு விட்டால், கோயிலை விட்டு கிளம்பும்போதே கழற்றி விடுவார்கள்! மனசுக்கு வருத்தமாக இருக்கும்.

அங்கேயிருந்தால் ஏகப்பட்ட பணம் சம்பாதிக்கலாம். ஆனால் எங்களுக்கு போதிக்கப்பட்ட தர்ம சாஸ்த்திரங்களைக் காற்றில் பறக்க விட்டு விட வேண்டும். அதனால்தான் இங்கே திரும்பி வந்து விட்டேன்.

இங்கே வந்தால் இங்கு வேறுவிதமான பிரச்னை! 'கடல் கடந்து போய் வருகிறான்' என்று இங்குள்ள கோயிலில் மறுபடியும் வேலை கொடுக்கத் தயங்குகிறார்கள். ஆகம சாஸ்த்திரம் அதற்கு இடம் கொடுக்கவில்லையாம்.

'சமுத்திரம் புண்ணியமானது; அதைத் தாண்டக் கூடாது என்றும், தாண்டிச் சென்று வந்தால் ஜாதிப் பிரஷ்டம்' என்றும் அந்தக் காலத்தில் சொன்னார்கள். ஆனால் பிழைப்புக்காக அவனவன் எட்டு திக்கும் ஓடும் இந்தக் காலத்தில் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

திரிதண்டி ஜீயரே இரண்டு முறை அமெரிக்கா போய் வந்து விட்டார். காலத்துக்குத் தகுந்த மாதிரி நாமும் கொஞ்சம் மாற வேண்டாமா? - இப்படிக் கேட்கிறார் அமெரிக்காவிலுள்ள கோயிலில் பணியாற்றிவிட்டு, சென்னை வந்து ஜெராக்ஸ் கடை வைத்திருக்கும் வீரராகவன். ○

— ப்ரியன்

வருஷப் பிறப்பன்று ஐநூறையும் தாண்டும்!

ஆஞ்சநேயரைப் பொறுத்தவரை ராமனுக்கு அடுத்த இடத்தில் வடை மாலையைத்தான் வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் மயிலாப்பூரிலுள்ள இந்த ஸ்ரீகோதண்டராமர் - ஸ்ரீ ஆஞ்சநேயர்



ஆலயத்திலுள்ள இந்த ஆஞ்சநேயருக்குத் தினசரி சராசரியாகப் பத்துப் பதினைந்து வடை மாலைகளைச் சார்த்துவார்களா பக்தர்கள்? ஆங்கில வருடப் பிறப்பன்று வடைமாலைகளின் எண்ணிக்கை ஐநூறையும் தாண்டி விடுமாம்!

இத்தனை எண்ணிக்கை வேறு எந்த ஆஞ்சநேயர் கோயிலிலும் கிடையாது என்கிறார்கள் இப்போது இதன் கும்பாபிஷேகப் பணிகளில் ஈடுபட்டுள்ள பக்தர்கள். ○

— 'யெஸ்பால்'



உறுதியான முடிவு மனசுக்குள் எழுந்ததும் சேதுவின் அறிவுக்குதிரை ஆயிரம் வாட்ஸ் பவரில் ஓடியது.

பெட்டியிலிருந்து அந்த ஊரின் வரைபடத்தை எடுத்துத் தரையில் விரித்தான்.

மெல்ல மெல்ல மனதுக்குள் ஊர் விரிந்தது. மசூதிகள் இருக்குமிடம், கோயில்கள் இருக்குமிடம் இரண்டையும் நுணுக்கமாய் ஆராய்ந்தான்.

பாம்பின் கால் பாம்பறியும்!

கிரிமினல் புத்தியை ஊக்கப்படுத்தினான்.

மசூதிகளில் ஒன்று ஊரின் நடுவில் இருந்தது. மற்றொன்று தென்மூலை. இன்னொன்று வடகிழக்கில் இருந்தது.

கோயில்களில் சிறிய கோவில்களைத் தவிர்த்தான். நடுத்தரச் சுற்றளவுள்ள கோயில்கள் மூன்றும், கொஞ்சம் பெரிய கோவில்களாய் மூன்றும் இருந்தன.

மசூதிகளுக்கும், கோயில்களுக்கும் இடையே இணைத்துப் பார்த்தான்.

அவன் கண்கள் பளிச்சிட்டன.

இலக்கு தென்திசை மசூதிதான். மசூதிக்குப் பின்புறத்தெருவில் பழைமையான சிவன் கோவில்.

கூடவே அக்ரஹாரம்.

மற்றவையெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தொலைவில் இருந்தன. ஊருக்குள்ளும் நெருக்கடியான தெரு அமைப்பில் இருந்தன.

அவனது தீவிரவாத மூளையில் மசூதியும், கோவிலும் அமைந்திருக்கும் புவியியல் சௌகரியங்கள் பதிந்தன.

சந்தேகமில்லை. இலக்குகள் இந்த இரண்டும்தான்.

முக்கியமான ஆராய்ச்சி முடிந்ததும், மீண்டும் சிந்தனைகள் விமான வேகத்தில் பறந்தன.

வீட்டிலிருந்த வெடிகுண்டுகளைக் காணவில்லை என்றதுமே, தன்னைப் போலிருப்பவன் என்ன செய்வான்?

உயிருக்குப் பயந்து தப்பி ஓடப் பார்ப்பான். மாஸ்டருக்கு சிறிது சந்தேகம் வந்தாலும் போதும், பலியிடத் தயங்க மாட்டார்.

அப்படியானால் தான் ஓடி ஒளியக் கூடாது. எழுந்தான். வீட்டை விட்டு வெளியே வந்தான். அமைதியான நடையில் பஸ் ஸ்டாப் வந்து பஸ் பிடித்து அடுத்த

கிருஷ்ணா

4

குண்டு ஒண்ணு வெச்சிருக்கேன்

நிறுத்தத்தில் இறங்கிக் கொண்டான்.

இது வழக்கமாய்ச் செய்யும் முறை. தன்னைப் பின் தொடரும் நண்பர்களை நம்பச் செய்வது முக்கியம்.

டெலிபோன் பூத்தினுள் புகுந்து எண்களைச் சுழற்றினான்.

"ஹலோ"

கரகரத்தது எதிர்முனை.

"மாஸ்டர், நான் சேது."

ஒரு நொடி பதிலில்லை, எதிர்முனையில்.

"என்ன?"

"வீட்டிலிருந்த குண்டுகளைக் காணோம்."

சேது சொன்னதும், மீண்டும் ஒரு நொடி மவுனம்.

"நான் இப்போது என்ன செய்வது?"

"தர்பாருக்கு வா."

மறுமுனையில் டொக்! மாஸ்டர் வைத்து விட்டார்.

ஆடு புலி ஆட்டம் ஆடுகிறார்கள் இருவருமே. இருவருக்குமே அது புரிகிறது. தர்பாருக்குப் போனால் திரும்பி வருவது மிக மிக அரிதான ஒன்று. அபூர்வமாய் மிகச் சிலர் மட்டுமே உயிர் பிழைத்து மீண்டு வந்திருக்கின்றனர்.

சேது வெளியே வந்தான். ஆட்டோ ஒன்றைப் பிடித்து ரயில்வே ஸ்டேஷன் நோக்கிப் பயணித்தான்.

"நாளைக் காலை ஆறு மணிக்குத்தான் கோவா செல்லும் வண்டி. ஆர்.எஸ்.ஏ. நம்பர் மூன்று."

டிக்கெட் வாங்கிக் கொண்டு ஸ்டேஷன் உள்ளே சென்றான். அடுத்த கவுண்டரில் பிளாட்பாரம் டிக்கெட் வாங்கியபடி ஒருவன் தன்னை அடிக்கண்ணால் கவனிப்பது தெரிந்தது.

ரயில்வே கேன்டீன் ஸ்டாலில் டீ குடித்தான். வேகமெடுத்துக் கிளம்ப ஆரம்பித்த ட்ரெயினில் சடாரெனத் தாவி, ஏறினான். கடைசி கம்பார்ட்மெண்ட் அது. லேடீஸ் ஒன்லி!

"அவசரத்துல ஏறிட்டேன். அடுத்த ஸ்டேஷனில் இறங்கிடறேன்."

வாசலிலேயே நின்றபடி பயணித்தான். தலைமுடியைக் காற்று கலைத்தது.

அது எக்ஸ்பிரஸ் ட்ரெயின். லிமிடெட் ஸ்டாப்தான். அரைமணி பயணித்ததும் அடுத்த ஸ்டேஷன் அவுட்டரில் ரயில் சிக்னலுக்காக நிற்க, குதித்தான்.

கூடுமானவரை விரைவாக நடந்தான். எதிரே தெரிந்த முடிதிருத்தகத்தினுள் புகுந்தான்.

வெளியே வரும்போது சம்மர்கட் ஸ்டைலில் தலைமுடி சிரித்தது.

ரெடிமேட் கடையில் கைலியும், ஜிப்பாவும், வெள்ளைத் தொப்பியும் வாங்கிக் கொண்டான்.

டாக்சி!

அவன் கைத்தட்டலுக்கு வழியில் போன டாக்சி நின்றது.

டிரைவரின் தலைமட்டும் எட்டிப் பார்த்தது. அருகே சென்றான்.

தங்கியிருந்த ஊர் பெயரைச் சொன்னான்.

"இருநூறு ரூபாய் ஆகும் சார். திரும்பி வர சவாரி கிடைக்காது."

"சரி! அவசரமாய்ப் போகணும்."

ஏறிக் கொண்டான்.

பத்து நிமிடம் ஆனதும் டிரைவரிடம் சொன்னான்.

"எனக்கு திடீர்னு ஏதோ செய்யுதுப்பா. இப்படியே படுத்துக்கறேன்."

"எங்கே சார் போகணும்? ஊர் வந்ததும் ஏதாவது டாக்டர் கிளினிக் கண்ணுல பட்டா நிறுத்தவா?"

"வேண்டாம்ப்பா. வழக்கமாய் வர்ரது தான். கொஞ்சநேரம் படுத்து, எழுந்தா சரியாயிடும். நீ என்ன பண்றே, துவாதசி மட அக்ரஹாரத்துல பதினைஞ்சாம் நம்பர் வீட்டுல கொண்டு போய் காரை நிறுத்து."

"ஓகே சார்."

டிரைவருக்கு சந்தேகம் வராதபடி செய்தாகிவிட்டது. கார் கண்ணாடிகளை இருபுறமும் அரை உயரத்துக்கு ஏற்றி விட்டான்.

> இரண்டு நண்பர்களிடையே மத்தியஸ்தம் செய்ய நேரிட்டால், செய்யாதீர்கள். ஒரு நண்பனை இழப்பீர்கள். இரண்டு அன்னியர்களிடையே மத்தியஸ்தம் செய்ய நேரிட்டால் செய்யுங்கள். ஒரு நண்பன் கிடைப்பான்.
>
> **சொன்னது – மாண்ட்ரூட் பிரபு**
>
> **தகவல்: எம். சகிலா பானு**

இப்போது காரின் பின்புறம் தான் படுத்திருப்பது, டிரைவரைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை. வெளியிலிருந்து யார் பார்த்தாலும், டிரைவர் மட்டுமே காரை ஓட்டிச் செல்வது போலத் தெரியும்.

இன்று ஒரு இரவு தங்க அக்ரஹாரம் தான் சரி. அதில் சில சௌகரியங்களும் உண்டு.

முன்பின் தெரியாத ஒரு வீட்டினுள் தான் புகுந்து, துப்பாக்கியைக் காட்டினால், யாரும் தாக்க வர மாட்டார்கள்.

அடுத்தது தன் திட்டத்தை மனம்விட்டுச் சொன்னால் எளிதில் புரிந்து கொள்வார்கள்.

புத்தி இருப்பதால், தான் சொல்வது நிஜமா, பொய்யா என்பதைப் புரிந்து கொள்ளும் சாமர்த்தியம் உண்டு.

அதைவிட முக்கியமானது, தான் சொல் ... தை நம்பிவிட்டால், தனக் ... தவக் கூ ...

முன் வரலாம்.

சேதுவின் கண்கள் மூடியிருந்தாலும், காதுகளும் மற்ற புலன்களும் விழிப்போடிருந்தன.

வழியில் எந்தத் தடங்கலுமின்றி டாக்சி ஓடியதில் உற்சாகம் தளும்பியது. கூடவே கண்ணம்மாவின் முகமும், அவளின் வெகுளியான பேச்சுக்களும் தோன்றி, மறைந்தன.

"சார் அக்ரஹாரம் வந்தாச்சு."

டிரைவர் எழுப்பவும், எழுந்து அமர்ந்தான்.

"எந்த வீடு சார்?"

"அப்படியே நிறுத்துப்பா. இந்தா ரூபாய்."

டாக்சியிலிருந்து அவன் இறங்கியதும் தெரியவில்லை. அந்த வீட்டுக்குள் புகுந்து கொண்டதும் தெரியாத வேகத்தில் செயல்பட்டான்.

யார் வீடு இது? ஜாக்கிரதையாக உள்ளே நுழைந்தான். ஹாலில் டீ.வி. ஓடிக் கொண்டிருந்தது.

'பாலச்சந்தரின் சின்னத்திரை விளம்பர இடைவேளைக்குப் பிறகு' என்றது டீ.வி.

டீ.வி.யில் ஐக்யமாகியிருந்தது மொத்த குடும்பமும்.

"ஹலோ சார்."

திடீரென முளைத்த புதுக்குரல் கேட்டு, குடும்பம் திரும்பிப் பார்த்தது.

கணவன், மனைவி, இரு சிறுவர்கள். மொத்தம் நான்கு பேர் கொண்ட திட்டமிட்ட குடும்பம்.

"யாரு நீங்க?"

அதட்டலாய் வந்த பெண்மணியின் குரலுக்குப் பதிலாய் துப்பாக்கியை நீட்டினான்.

அலறப் போனவர்களை சைகையால் தடுத்தான்.

"நான் உங்களை எதுவும் செய்ய மாட்டேன். இன்னிக்கு ராத்திரி மட்டும் இங்கே தங்கறதுக்கு என்னை அனுமதிக்கணும்."

ஹால் சோபாவில் வசதியாய் அமர்ந்தான். கையில்லாத பனியனும், வேட்டியும் அணிந்திருந்த குடும்பத் தலைவரின் சோம்பேறித் தொப்பையை செல்லமாய்க் குத்தினான்.

"பயப்பட வேண்டாம். நான் உங்க நண்பன். என் பெயர் சேது."

மெல்ல மெல்ல அவர்கள் மனத்தில் பதியுமாறு தன் பணியை எடுத்துச் சொன்னான்.

"போலீஸுக்குப் போயிருக்கலாமே" ... னார் குடும்பத் தலைவர்.

"போலிஸிலும் அவங்களுக்கு ஆள் இருக்கு. நான் அவங்களிடம் மாட்டிக் கிட்டா, நாளைக்கு நடக்கப் போற குண்டு வெடிப்பைத் தடுக்க முடியாது. அதோடு, ஒரு வேளை நான் வெற்றிகரமாகவும் அதைத் தடுத்து, உயிரோடும் இருந்தேன்னா கண்ணம்மாவோடு வாழும் வாய்ப்பிருக்கு. போலிஸிடம் போய் சரணடைஞ்சா, ஜெயிலிலே கூட என் கதையை என் மாஸ்டர் முடிச்சிடுவாரு."

சேது பேச, அவர்கள் கேள்வி கேட்க, அவர்கள் பயம் கொஞ்சம் கொஞ்சமாய் விலகியது.

அன்று இரவு முழுவதும் சேது தூங்கவில்லை. அவர்களும் தூங்கவில்லை.

அடுத்த நாள் காலை விடிந்தது முதல் பரபரப்பு.

"நீங்க எப்படிப் போவீங்க மசூதிக்கு?" என்று கேட்டார் சரவணன். குடும்பத் தலைவர்.

"ஒரு முஸ்லீமாக. இதோ உடைகள் தயார்."

பையைக் காண்பித்தான் சேது.

"அக்ரஹாரத்திலிருந்து நீங்கள் எப்படி முஸ்லீமாக வெளியே போக முடியும்? சந்தேகம் வராதா?"

சரவணன் கேள்வி நியாயமாய் பட்டது.

"தெருக் கோடியில் எனது தம்பியின் வீடு இருக்கு. வெளியூர் போயிருக்கான் குடும்பத்தோட. நீங்களும், என் மகள் ஈஸ்வரும் அங்கே போங்க. நானும் வரேன் பின்னாடியே."

தம்பி வீட்டுச் சாவியை எடுத்துக் கொடுத்தார் சரவணன்.

மூவரும் அந்த வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

"கொல்லைப்புறக் கதவு வழியாய் நீங்க போகலாம். அடுத்த தெரு முனை வந்துடும்."

கைலியையும் ஜிப்பாவையும் அணிந்து கொண்டான் சேது. தலையில் வெள்ளைத் தொப்பி.

"ஆல் தி பெஸ்ட்" என்று கை குலுக்கினார் சரவணன்.

கொல்லைப்புற கதவு வழியே அடுத்த தெருவுக்குள் நுழைந்தான் சேது. மசூதியை நோக்கி நடந்தான்.

காலை ஆறு மணி கோவா செல்லும் எக்ஸ்பிரசில் தன்னைத் தேடிக் கொண்டிருப்பார்கள் எதிரிகள்.

முடிந்தவரை தலையை நிமிர்த்தாமல் நடந்தான்.



"என்னப்பா பத்து மணி
ஆபிஸுக்கு பன்னிரெண்டு மணிக்கு வந்து
நிற்கறே?"
"நீங்களும் உங்க ஞாபக மறதியும்!
லேட்டானாலும் பரவாயில்லே, நாளை என்
வீட்டுக்கு கரண்ட் பில் கட்டிட்டு வந்துடுனு
நேற்று நீங்கதானே சொன்னீங்க!"
– உ. ராஜாஜி

"சலாம் அலைக்கும் பாய்."

"அலைக்கும் சலாம்."

இதோ முஸ்லீம் நண்பர் கிடைத்து விட்டார். அவருடன் ஒட்டிக் கொண்டபடி நடந்தான். இது கூடுதல் பாதுகாப்பு.

மசூதி வாசலில் செங்கலும், மணலும் கொட்டப்பட்டிருந்தன.

ஹஜ்ரத் முஸ்தபா மசூதி (தொழுகை இடம்) என்ற விளம்பரப் பலகையைக் கடந்து உள்ளே சென்றான்.

"நீங்க உள்ளே போங்க. இதோ வந்துட்டேன்."

அவரை அனுப்பிவிட்டு, இடது பக்கம் நகர்ந்தான்.

மசூதியை ஒட்டிய சிறிய பெட்டிக் கடையின் பின்பக்கம் போய் நின்றான்.

'ஏவல், பில்லி, சூனியம் எடுக்கப்படும்'. பெயிண்ட் உதிர்ந்த போர்டும், உள்ளே சிறிய இடமும் இருந்தன. உள்ளே புகுந்து கொண்டான்.

அது பெட்டிக்கடையின் பின்புறமாய் இருந்தது.

"யாரு?"

"பாய் இல்லையா? தண்ணி தெளிக்கணும்."

மாந்திரீகம், பேய் பிடித்தவர்களுக்கு மசூதியில் மந்திரித்த தண்ணீர் தெளிப்பது வழக்கம்.



''தலைவர் ஏதோ ஒரு பட்டிமன்றத்துக்குத் தலைமை தாங்கறாராமே... என்ன தலைப்பு?''

''அரசியலில் நம்பகமானவர் அடியாளா? பினாமியா?''

– அம்பை தேவா

"நான் அவரு அக்கா மகன். வெளியே போயிருக்காரே."

சேது நின்ற பகுதி சற்று இருட்டாய் இருந்தது.

தெருவையும், மசூதியையும் கண்காணிக்க சிறந்த இடம்.

"பரவாயில்லை. காத்திருக்கேன்" என்றான் சேது.

பெட்டிக்கடை இளைஞன் கவனம் கடையின் முன்புறம் திரும்பியது. யாரோ ஒருவன் பக்கத்துக் கடை எத்தனை மணிக்குத் திறக்கும் என விசாரித்தான், இளைஞனை.

சேதுவின் கண்கள் பரபரப்பாய் மசூதியை வலம் வந்தன. வெடிகுண்டு எங்கிருக்கும்? சந்தேகப்படும்படியான பொருள் ஏதும் தட்டுப்படுகிறதா எனப் பார்த்தான், அங்கிருந்தபடியே.

செங்கல், மணல் அருகே ம்ஹூம்! மசூதியின் உட்புறம் பெரிய ஹால். வெளிச்சமான ஹால். வெகு சுத்தமாயிருந்தது.

நேரத்தைப் பார்த்தான். இன்னும் எட்டு நிமிடமே இருக்கிறது ஒன்பது மணியாக.

தான் அநாவசியமாய் வெளியே சென்றால் எதிரிகள் கண்ணில்பட வாய்ப்புள்ளது. வெளியே போகாமல் எப்படிக் கண்டுபிடிப்பது?

"அரை மணி கழிச்சு வாங்களேன்."

அந்த இளைஞன் சொல்லும் போதே, ஒரு முனகல் சத்தமும் கூடவே கேட்டது.

சேதுவின் மூளைக்குள் ட்ரம்ஸ் அதிர்வு. பெட்டிக் கடையினுள் அவன் பார்வை ஊடுருவியது.

அதோ டைம்பாம்! அருகே யார் அது கிழவன்? இவர்தான் மாந்திரீகரோ? அப்படியானால், இந்த இளைஞன்?

சேதுவுக்குப் புரிந்து விட்டது. அதே நேரம் அந்த இளைஞனின் வாயிலிருந்து பெரிய சீட்டியொலி கிளம்பியது. எதிரிகளை எச்சரித்து விட்டான். இனி நேரமில்லை.

சேது டைம்பாம் நோக்கிப் பாய்ந்தான். கையிலெடுத்தான். கடையை விட்டு வெளியே தாவினான். ஓட ஆரம்பித்தான்.

ஒன்பது மணிக்கு இன்னும் ஒரு நிமிடமே இருக்கிறது.

டைம்பாம் ஒயர்களில் கவனம் வைத்தபடி தலை தெறிக்க ஓடும் சேதுவின் பின்னே நாலைந்து பேர் ஓடிவரும் ஒலி.

"டுமீல்."

சேதுவின் கால்களின் பின்புறம் குண்டு பாய, தலை குப்புற விழுந்தான்.

விழும்போது, முதுகில் மற்றொரு குண்டு பாய்ந்தது.

சேதுவின் விரல்களுக்கு எங்கிருந்தோ வெறி வந்தது. கடிகாரத்தின் ஓட்டம் செயலிழக்கும் அதே நேரம், சேதுவின் இயக்கமும் நின்றது.

"உய்ங்ங்"

போலீஸ் ஜீப் எங்கிருந்தோ முளைத்தது. சேதுவின் உடலருகே வந்து நிற்க, அதிலிருந்து சரவணனும், போலீசாரும் குதித்தனர். கூடவே பாம் ஸ்குவாட் ஆபீசர்களும்.

சேதுவை சோதனையிட்ட போலீசாருக்கு அவன் சட்டைப் பையிலிருந்து கடிதம் ஒன்று கிடைத்தது.

உயர்திரு போலீஸ் அதிகாரி அவர்களுக்கு,

என் பெயர் சேது. குண்டுகளை வெடிக்க நான் இந்த ஊருக்கு வந்தேன். ஆனால் என்னுள் ஒரு ஜீவ ஒளி தோன்றியதால் மனம் மாறினேன்...

அன்றைய மாலை தினசரிகளில் சேதுவின் கடிதமும், புகைப்படமும் வெளியாகியிருந்தன.

கண்ணம்மா நூறாவது முறையாக அதைப் படித்தாள், அவள் கண்களில் கண்ணீர் நிற்காமல் வடிந்து கொண்டே இருந்தது.

"மாமா."

கேவலுடன், ஆவேசமாக சேதுவின் படத்தை முத்தமிட்டபடி இருந்தாள்.

(முற்றும்)



ஒரு டஜன் கார்கள்
3200
பேருக்கு வெற்றிவாய்ப்பு
ரூ. 1 கோடி
பரிசு
ஒரு கிலோ தங்கம்
சிங்கப்பூர் - பாங்காக் டூர்
எல்லாம் நிறைந்த இல்லம்
20 கிலோ வெள்ளி
10 மோட்டார் பைக்
18 மொபட்
இன்னும் எக்கச்சக்க பரிசுகள்
விலை
ரூ. 65
தினமலர்
• 3 புத்தகம்
• 8 சுவாமி படம்
• தரமான இலவச பொருட்கள்
தீபாவளி மலர் '98
தினமலர் ஏஜண்ட் அல்லது புத்தக கடையில்
இன்றே உங்கள் பிரதிக்கு முன்பதிவு செய்து கூப்பனை பத்திரப்படுத்துங்கள்.
கூப்பன் அதிவேகமாக தீர்ந்து கொண்டிருக்கிறது.

நீங்கள் கேட்டவை


— தராசு



• துணிய வேண்டும்



• சரியான கணிப்பு!



• 'செலக்டிவ் அம்னீஷியா!'

● கே. பெருமாள், கூனியூர்.

? தமிழ் அகராதியில் ஜாதி என்ற சொல்லே கிடையாது என்ற கருணாநிதி, பள்ளிச் சான்றிதழ்களில் மட்டும் சாதி கேட்பானேன்...?

! அவர் கேட்கவில்லை; சட்டம் கேட்கிறது. ஜாதியின் பெயரால் சலுகைகள் வழங்கும் வரை ஜாதிகள் இருக்கத்தான் செய்யும். சட்டம் மாற்றப்பட வேண்டும். பூனைக்கு மணி கட்டுவது யார்...?!

● ஜோ. பன்னீர் செல்வம், சென்னை – 84.

தேசிய அரசு அமைய வாய்ப்பு இருக்கிறதா?

? மத்தியில் தேசிய அரசு அமைந்தால் மட்டுமே நாட்டில் உள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று தொழிலதிபர் பொன்னாச்சி மகாலிங்கம் கூறியுள்ளாரே. இப்போதைய சூழ்நிலையில் தேசிய அரசு அமைய வாய்ப்பு இருக்கிறதா?

! அது அ.தி.மு.க. – பி.ஜே.பி. பிளவு முறிவான பிறகு குடியரசுத் தலைவர் எடுக்கும் முடிவைப் பொறுத்தது. அவர் துணிந்து தேசிய அரசுக்கு முயற்சி செய்தால் நடக்கும்.

● ப. இராம் முருகன், சிவகங்கை.

? 'மூப்பனாருக்குக் கிடைத்திருக்கும் செல்வாக்கு காங்கிரஸால் கிடைத்தது. அது இல்லாவிட்டால் அவர் வெறும் செல்லாக் காசு' என்கிறாரே திண்டிவனம் ராமமூர்த்தி?......

! காங்கிரஸிலிருந்து விலகியிருக்காவிட்டால் மூப்பனாருக்கு இப்படியொரு செல்வாக்கு நிச்சயம் கிடைத்திருக்காது என்பது உண்மைதான். எனவே அவர் விலகுவதற்குக் காரணமாயிருந்த காங்கிரசுக்கும் மூப்பனாரின் செல்வாக்கில் பங்கு உள்ளதாகக் கூறுவது சரியான கணிப்புத்தான்.

● எஸ். ஞானாம்பாள் சீனிவாசன், திருத்துறைப்பூண்டி.

? பாரதீய ஜனதா ஆட்சியை விட ஐக்கிய முன்னணி ஆட்சி எவ்வளவோ மேல் என் பதில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?

! அதில் என்ன சந்தேகம்!

● பி. கிருஷ்ணகுமார், கோவில்பட்டி.

? மாற்றப்பட்ட பெஸ் பருவாவை மறுபடியும் அமலாக்கப் பிரிவு இயக்குனராக்க வேண்டும் என்ற 'ஜெ'யின் அறிக்கை எதைக் காட்டுகிறது...?

! 'பெஸ்பருவா, மாற்றப்பட்ட பிறகு அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டவர் பெஸ்பருவாவைக் காட்டிலும் கடுமையானவர் என்பதால் தான் 'ஜெ' இப்படி பல்டியடித்துப் பேசுகிறார்' என்பது ஒரு கருத்து. அதே சமயம் சசிகலா தொடர்பான வழக்குகளை நடத்தி வந்த அரசு வழக்குரைஞர் கே. குமார் பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பது, வழக்குகளை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சி தொடர்வதையே உறுதிசெய்கிறது. பெஸ்பருவா கையாண்டு வந்த ஃபைல்கள் எதுவும் செப்டெம்பர் 9-ஆம் தேதி வரை தொடப்படக்கூடாது என்று உத்தரவிட்டிருந்த போதிலும் அவருக்கு உதவியாகச் செயலாற்றி வந்த குமாரிடமிருந்து ஃபைல்கள் பறிமுதலாகி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மத்திய அரசு, உச்சநீதி மன்றத்துக்குத் தரும் மதிப்பு அவ்வளவு தான்!



• தெய்வமும் தேசமும்...



• கண்ணியம் காத்தார்

● ப. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? **அமெரிக்க டாலர் நோட்டுகளில் In God We Trust என்ற வாக்கியம் இடம்பெற்றுள்ளது போல் நமது கரன்சி நோட்டிலும் இடம் பெற வேண்டும் என்று விஷ்வ ஹிந்து பரிஷத் மத்திய அரசைக் கேட்டுள்ளது பற்றி...?**

! In Rama We Trust என்று இடம்பெறச் செய்யக் கேட்காதவரை பிரச்னை இல்லை! கடவுள் என்கிற வார்த்தை பொதுதானே...!

● ஜெ. கண்ணன், சென்னை – 101.

? **அ.தி.மு.க.வின் பெ. மகாலிங்கம் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'லஞ்சம் என்பது நாட்டை அரிக்கும் புற்றுநோய்' எனக் குறிப்பிட்டிருக்கிறார். 1991 முதல் 96 வரையிலான காலகட்டத்தை மறந்து விட்டு அவர் இப்படிக் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால், அவர் செலக்டிவ் அம்னீஷியாவால் அவதிப்படுவது போல் தோன்றுகிறதே...?**

! கேள்வியைக் கேட்டுவிட்டு பதிலையும் சொல்லிட்டீங்களே! அதையேதான் ஜெ குறித்து பிரமோத் மஹாஜன் சொல்லியிருக்கிறார். 'உங்கள் மீது வழக்குப் போட்டால் அது அரசியல் பழிவாங்கல்; ஆனால் நீங்கள் மட்டும் நா கூசாமல் பிறரைக் குற்றம் சொல்லலாமா? என்று பிரதமர் ஆசி, அனுமதியுடன் கடிதம் எழுதியிருக்கிறார்!

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? **பாரதியார் ஆன்மிகக் கவிஞரா? தேசியக் கவிஞரா...?**

! தேசியத்தை ஆன்மிகம் அளவுக்கு உயர்த்திய கவிஞர்.

● ஆர். ஜெயசீலன், களப்பாள். ❑

? **அணுகுண்டுத் தாக்குதலுக்கு உள்ளான ஜப்பான் பெற்றிருக்கும் அபார வளர்ச்சியைப் போல் அணுகுண்டுத் தாக்குதலுக்கு ஆளாகாத நம் இந்தியா ஏன் பெறவில்லை?**

! ஜப்பானின் முன்னேற்றத்துக்கு முக்கியமாக நான்கு காரணங்கள் :

1. சிறிய நாடு; மக்கள் தொகை குறைவு; பொருளாதார முன்னேற்றத்தின் பலன்களை அனைவரும் அடையச் செய்வது, ஒப்புநோக்க எளிது.

2. ஜப்பானியர்கள் தேசபக்தி மிக்க உழைப்பாளிகள் – அது அவர்களின் பிறவிக்குணம்.

3. ஆரம்பத்திலிருந்தே சரியான பொருளாதாரக் கொள்கைகள்.

4. உலக மகா யுத்தத்துக்குப் பிறகு பாதுகாப்புக்கு அமெரிக்க உதவியை ஏற்றதால் ராணுவச் செலவுகள் மிகவும் குறைவு. அரசின் வருவாய் முழுமையாக முன்னேற்றப் பணிகளில் முதலீடாகியது.

– இவையெல்லாம் இந்தியாவில் இல்லையே!

● கே. தெய்வசிகாமணி, சென்னை – 30.

? **தாம்பரத்தில் நடந்த அரக விழாவில் அ.தி.மு.க. எம்.பி. மீது செருப்பு வீசப்பட்டது பற்றி...?**

! அரக விழாவில் அரசியல் பேசியதால் வந்த வினை! முதல்வர் அதைப் பெரிதுபடுத்தாமல், செருப்பு வீசியவர்களைக் கண்டித்து அடக்கி, கண்ணியமாக நடந்து கொண்டது பாராட்டுக்குரியது.

● தி. மகாராசன், கடமலைக்குண்டு.

? **ஐம்பதாண்டுகால சுதந்தர இந்தியாவில் பெரும் வளர்ச்சி பெற்றிருப்பது அரசியலா? ஆன்மிகமா? பொருளாதாரமா...?**

! லஞ்ச ஊழல்!

● ஏ. எம். பழனிச்சாமி, கோவை – 15.

? **கிளின்டன் தாம் செய்த தவறை ஒப்புக் கொள்ள ஏழு மாதம் அவகாசம் எடுத்துக் கொண்டது குறித்து...?**

! முட்டாள்தனம்! ஆரம்பத்திலேயே தவறை ஒப்புக் கொண்டிருந்தால் அமெரிக்க மக்கள் அத் தவறைப் பெரிதுபடுத்தியிருக்க மாட்டார்கள். அவருடன் தொடர்புபடுத்தப்பட்ட பெண்கள் கற்புக்கரசிகள் அல்ல. தற்போது, ஜனாதிபதி பொய் சொன்னார் என்பதுதான் பெரிய குற்றமாகி விட்டது. ஒருவேளை அவர் தமது குடும்பத்தினரை, குறிப்பாக யௌவன வயதில் உள்ள மகளைக் கருதி பொய் பேசியிருக்கலாம்.

● பா. ராஜாமுஹம்மது, திருத்துறைப்பூண்டி.

? **'என்னைப் பற்றி விமர்சித்து விட்டு என்னிடமே பேட்டி கேட்டால் எப்படிக் கொடுப்பது?' என்கிறாரே ஜெயலலிதா?**

! விமர்சனங்களைச் சகிப்பதும், சரியான விமர்சனங்களை ஏற்பதும் பொது வாழ்க்கையில் உள்ளோருக்கு இருக்க வேண்டிய முக்கிய தகுதி. ஜெயலலிதாவிடம் இல்லாத பல தகுதிகளுள் ஒன்று!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஆர். ஜெயசீலன்,
வெங்கத்தான் குடி,
களப்பாள் அஞ்சல், மன்னார்குடி தாலுகா,
திருவாரூர் (மா.வ) 614 710.

அமெரிக்காவில் அறிஞர் அண்ணா

மனவியல் துறையில் எப்படி இறங்கினேன் என்பதைப் பற்றி எழுதினேன். அரசியல் துறையில் கட்சிக்காரனாய் அல்ல- ஆனால் பொது வாழ்வில் நான் எப்படி இறங்கினேன் என்பதையும் நான் குறிப்பிட வேண்டும்.

எனக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை: தமிழ்ப் பண்பாட்டிலே விளைந்த தமிழர்களின் அறிவிலும் திறமையிலும் எனக்கிருந்த அபார நம்பிக்கைதான். இது இருந்தும், 'இவர்கள், ஏன், உலக அரங்கில் பிரகாசிக்க முடியவில்லை?' என்கிற ஆதங்கம்.

சங்க காலப் பாடல்களும் சரி, தேவாரம், திருவாசகம், திருமூலர், திருக்குறள் என்று வரிசையாகத் தமிழ் இலக்கியம், வேறு எங்குமே காணாத அளவுக்குச் சிறப்புற்று நிற்கிறது. வெறும் உபசாரத்திற்காகப் பாடினார் பாரதி, "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று. "பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்கிறார். சிறப்பான இலக்கியங்கள் இருக்கின்றன சில மொழிகளில். நம்முடையவையோ அதற்கு இணையாக, பல இடங்களில் சிறப்பாகத் தனித்து நிற்கின்றன.

என்ன குணங்கள் தமிழர்களைப் பின்னுக்கிழுக்கின்றன என்பதை நாம் முறையாக ஆராய வேண்டும். நமது சிந்தனை அணுகுமுறை, செயல்களில் உள்ள குறைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றை நிவர்த்திக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மறைவாக "நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் ஓர் மகிமை இல்லை. திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்."

ஆங்கிலத்தில் creativity (ஆக்க சிந்தனை) என்பார்கள். விளக்கமாகச் சொன்னால் "புதியன காணும் மனோ பாவம்." இந்தக் குணம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இருக்கிற அளவுக்கு நம் நாட்டில் இல்லை. ஜப்பான்கூட கடந்த 20 ஆண்டுகளில் ஜெர்மனியையும் அமெரிக்காவையும் 'காப்பியடித்து', அதன் பின் இன்று, தானே புதிய துறைகளில் இறங்கவும் கண்டுபிடிக்கவும் துவங்கி விட்டது.

சில அடிப்படைக் குணங்கள் நம் சமுதாயத்திலே இல்லை. உதாரணமாக (விசுவாசம்), நன்றியுடைமை, கூட்டுணர்வு (Team work) கட்டுப்பாடு (Discipline) அத்துடன் பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் கூறியதுபோல சுய கௌரவம். தன்னைப் பற்றிய கம்பீரம் ஏற்படும் வகையில் நமது சொல்லும் செயலும் இல்லை என்பது. (Self esteem). குழந்தைகளை அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கும் நாம், அவர்களுக்குரிய தனித்துவத்தை மதிப்பதோ அவர்களுடைய சுதந்திரத்திற்கு ஊறு செய்யாமல் வளர்க்க வேண்டும் என்பதில் அக்கறையோ காட்டுவதில்லை. இதனால் தன்னம்பிக்கையற்ற – பிறரைச் சார்ந்து நிற்கும், தன் மதிப்பு அற்ற ஒரு இளைஞனை பள்ளி மூலமும், குடும்ப வளர்ப்பின் மூலமும் உருவாக்குகிறோம்.

இப்படிப்பட்ட எண்ணங்களின் பாதிப்பு என்னிடம் இருந்தது; தொடர்ந்து இருக்கிறது. அறிஞர் அண்ணா பதவி ஏற்றபோது – அவர் அமெரிக்கா வந்தபோது நான் அவருடன் சுமார் 20 நாட்கள் கூட இருந்தேன். அண்ணா அமெரிக்காவில் இருந்தபோது நடந்த நிகழ்ச்சிகளை ஆனந்தவிகடனில் எட்டுக் கட்டுரைகளாக எழுதினேன்.

அண்ணாவின் திராவிட நாடு பத்திரிகையை நான் முன்பே தொடர்ந்து படித்து வந்ததனால் எனக்கு அண்ணாவின் மீது அபரிமிதமான மதிப்பு. எனவே விகடனில் என்னை எழுதுமாறு கேட்டபோது அதைப் பெரிய பாக்கியமாக எண்ணினேன். அண்ணா அறிஞர்; நன்கு படித்தவர். மிகுந்த பண்பாளர். அவரிடம் சிந்தனைத் திறனும், அபாரமான பேசும் திறனும் இருந்

தது. பெரியாரின் தாக்கமும், அவர் வாழ்ந்த கால கட்டத்தின் தாக்கமும் அண்ணாவிடம் நிறைய இருந்தன.

ஆனாலும், அவர் பாராளுமன்றத்திலே பங்கேற்றபோதிலிருந்து அவர் முற்றிலும் வேறுபட்ட அகில இந்தியத் தலைவராக உயர்ந்தார் என்பதே என் அபிப்ராயம்.

அண்ணா அமெரிக்காவில் இருந்தபோது வெவ்வேறு துறையில் இருந்து படித்தவர்கள், நிபுணர்கள் எல்லாம் தமிழ் நாட்டுக்கு வந்து உதவ விரும்புவதாக, தினந்தோறும் போன்கால்கள் வந்து கொண்டிருந்தன. தமிழர் இருக்குமிடங்களில்



எல்லாம் பெரிய கூட்டங்கள். அசாதாரணமாக, அண்ணாவுக்கென்று நமது ஐ.நா.வின் நிரந்தரப் பிரதிநிதி ஜி. பார்த்தசாரதி ஒரு பெரிய விருந்து அளித்தார் நியூயார்க்கில்.

அவருடனே இருந்ததால் பல சமயம் அவருடன் பல விஷயங்களையும் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அண்ணாவே பல சமயம் என்னைத் தம்முடன் அழைத்துக் கொண்டு போனார். அப்போதுதான் அவர் பதவிக்கு வந்திருந்தார். தமிழ் மக்களிடையே இருந்த எதிர்பார்ப்போ ஏராளம். தமிழ்நாடே, முழுமையாக, கிராமங்களிலிருந்து நகரங்கள் வரை, "படித்தவர்களாகவும், செல்வச் செழிப்புடனும் வாழும் நாடாகவும் மாறிவிடும்" என்றும் மாறப் போகிறது என்றும் எல்லோரும் நம்பினார்கள்.

தமிழ்நாட்டில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அதற்கு அமெரிக்காவில் வாழும் தாங்கள் என்ன செய்ய முடியும் என்றும் பேசியவர்களிடம் எல்லாம், அண்ணா சொன்னது இதுதான்: "காலம் வரும். உரிய காலத்தில் உங்களை அழைத்து உபயோகித்துக் கொள்கிறேன்" என்பதுதான். நம் நாட்டிலேயே வந்து தங்கி விடுவோம் என்று வந்த டாக்டர் சௌந்தரராஜனுக்குக்கூட – அண்ணாவுக்கு அவரை முன்பே தெரிந்திருந்திருந்தும் கூட – சரியான வேலை கிடைக்கவில்லை.

பொதுவாக எந்த வேலைக்குப் போனாலும், எந்தத் தொழிலில் இறங்கினாலும், அமெரிக்க ஜனாதிபதி பதவி உட்பட, அதன் நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொள்ள ஓராண்டு காலம் ஆகும் என்று சொல்வார்கள். அண்ணா அதைத்தான் – தான் காலூன்றிக் கொள்ள வேண்டிய நேரத்தைப் பற்றித்தான் – சொல்லியதாக நினைக்கிறேன்.

ஜான் கென்னடி பதவி ஏற்றபின் ஒருமுறை சொன்னார். "பதவிக்கு வருமுன் சொன்னது வேறு; இங்கிருக்கும் நிலைமை வேறு. உள்ளே வந்து பார்க்கும் போதுதான் இது தெரிகிறது" என்று. இதை அண்ணாவும் உணர்ந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு விஷயத்தையும் அண்ணா கையாண்ட விதம், அவருடைய அன்பையும், உயர் குணங்களையும் படித்த பண்பாளர் என்பதையும் காட்டிக் கொண்டிருந்தது. நியூயார்க்கில் பலரும் அவருடன் படம் எடுத்துக் கொள்ள விரும்பினார்கள். அப்படிப் பலர் வந்து அவருடன் படமெடுத்துக் கொள்ள விரும்பிக் கேட்டுக் கொண்டபோது, அருகிலிருந்த என்னைப் பார்த்து, "ஒரு படம் எடுங்கள்" என்றார். பிறகு என்னிடம் சொன்னார். "இதெல்லாம் நமக்கு சிறிய விஷயம். ஆனால் அவர்களுக்கோ பெரிய விஷயம்!" என்று கண்களை உயர்த்திச் சொன்னார். நம்முடைய அண்ணாதானே, நாம்தான்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

அவருடன் இருக்கிறோமே, என்று நான் அவருடன் படங்களே எடுத்துக் கொள்ளவில்லை. யேல் பல்கலைக் கழகத்தில் அவருடன் கடைசியாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது ஒரு படமாவது எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணம் மேவி எடுத்துக் கொண்டேன். அது ஒன்றுதான் எங்கள் கிராம வீட்டில் என் அண்ணன் பத்திரமாக மாட்டி வைத்திருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றபோது ஊதாண்ட் அவர்களைச் சந்திக்கச் சென்றோம். ஐக்கிய நாடுகளின் சபைத் தலைவர், ஊதாண்ட் பர்மாவைச் சேர்ந்தவர். பல ஆண்டுகள் பதவியில் இருந்தவர். அங்கே உபதலைவராக பதவியில் இருந்தவர். நமது ஊர்த் தமிழர், நரசிம்மன். ஊதாண்ட், பார்த்தசாரதி, அண்ணா, நரசிம்மன் அனைவரும் நின்று படம் எடுத்துக் கொண்ட போது அண்ணா என்னையும்

> **விளக்கை ஏற்றுவது விளக்குக்கு ஒளி தருவதற்கல்ல; அது போல் நம் நற்குணங்கள் பிறருக்கு உதவாவிட்டால் பலன் இல்லை.**
> **– ஷேக்ஸ்பியர்**
> **தகவல்: ந.க. பரமசிவம்**

வந்து நிற்குமாறு அழைத்தார். நான்தான் 'அது முறை அல்ல' என்று எண்ணி மறுத்து விட்டேன். இப்படி என்னால் மறக்க முடியாத சம்பவங்கள் பல.

யேல் பல்கலைக் கழகத்தில் அண்ணாவைப் பார்க்க பத்திரிகை நிருபர்கள் வந்திருந்தார்கள். மதியம் மூன்று மணிக்குக் கூட்டம். ஆனால் அண்ணா வரவில்லை. என்னை அனுப்பினார்கள் அழைத்துவர. சென்றேன். அண்ணா குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். திரும்பி விட்டேன். மணி நாலுக்கு மேலேயும் ஆகிவிட்டது. "ஒரு போட்டோ எடுத்துக் கொண்டால் போதும்" என்று நிருபர்கள் தவித்தார்கள், அவசரத்துடன். அண்ணா மாடியிலிருந்து இறங்கி வந்தார். கையில் ஒரு புத்தகத்துடன் வந்தார். "உங்களை ஒரு படம் எடுத்துக் கொள்கிறோம்... அந்த புத்தகத்தைப் படிப்பது போல் வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்கள். மூன்று நான்கு பேர்தான் இருந்தோம். அண்ணா கையில் வைத்திருந்த புத்தகம் திருக்குறள். உடனே மறுநாள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர், ஆந்திரக்காரர், "அண்ணா திருக்குறளை, அங்கு மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தார்" என்று படத்தின் கீழ் எழுதி அனுப்பி விட்டார்! அப்படியே பிரசுரமாயிற்று! இன்றும் பலர் அதையே இங்கு 'அண்ணா அங்கு திருக்குறள் பாடம் நடத்தினார்' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது எனக்கு சிரிப்புத்தான் வந்தது. ஒரு பத்திரிகை நிருபர் என்னவெல்லாம் செய்யலாம் என்பது எனக்கு அப்போதுதான் தெரிந்தது. இன்னும் அந்தச் சம்பவம் எனக்கு வேடிக்கையாகவே இருக்கிறது.

யேல் பல்கலைக் கழகத்தில், டாக்டர் பட்டத்திற்குப் படிக்கும் மாணவர்களிடையே அண்ணாவைப் பேச அழைத்திருந்தார்கள். ஒரு விஷயம், அண்ணா எங்கு சென்றாலும் எதுவும் குறிப்புக்களைப் பார்த்துக் கொண்டோ அல்லது எடுத்துக் கொண்டோ வருவதில்லை. பல்கலைக்கழக மாணவர் சாப்பிடும் 'காபிடீரியா'வில் சாப்பிட்டோம். உட்கார்ந்து அங்கேயே பேராசிரியர்கள் சிலர் உட்பட பேசிக் கொண்டிருந்தோம். 'அடுத்து அரசியல் படிப்பு படிக்கும் மாணவர்களைச் சந்திக்கிறீர்கள். நீங்கள் உங்கள் அறைக்குச் சென்று ஏதாவது (குறிப்புகள்) எடுத்துக் கொள்ள வேண்டுமா?" என்று கேட்டார் பேராசிரியர். "வேண்டாம்! நேரே போகலாம்" என்றார் அண்ணா. நிலமையின் கனத்தைத் தெரிவிக்கும் வகையில் பேராசிரியர் சொன்னார். "இவர்கள் எல்லாம் டாக்டர் பட்டத்திற்குப் படிக்கும் மாணவர்கள்..." என்றார்.

"அப்படி என்றால் வேலை சுலபமாயிற்று!" என்றார் அண்ணா. பேராசிரியர் முகத்தில் ஈயாடவில்லை.

அந்தக் கூட்டத்தில் அண்ணா மிக அழகாக, இந்திய நாட்டின் ஐக்கியத்தையும் மத்திய ஆட்சியையும் எந்த விதத்திலும் குறை சொல்லாது, இந்தியாவின் தூதர் - பிரதிநிதி என்கிற அளவில் உள்ளத்திலிருந்து பேசினார். அகில இந்திய நிலைமையையும் பூராவாக உணர்ந்து இந்தியாவின் தூதராக அவர்கள் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

"இலங்கையையும் இணைத்து அகண்ட தமிழகம் அமைக்க வேண்டுமென்று பேசப்படுகிறதே?" என்ற கேள்வி வந்தபோது



என்னிடம் திரும்பி "நம்ம சி.பா. ஆதித்தனாரது நாம் தமிழர் இயக்கம் பற்றிக் கேட்கிறார்கள்?'' என்று சொல்லி சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்.

அண்ணா மறுமுறை அமெரிக்கா வந்தபோது புற்றுநோய் சிகிச்சைக்காக வந்தார். 'எந்த நோய் வந்தால் என்ன, அமெரிக்காவில் எல்லோரையும் பிழைக்க வைத்து விடுவார்கள்' என்றுதான் நான் எண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது 'கல்கி'யிலிருந்து ஒரு செய்தி வந்தது. அண்ணாவின் உண்மை நிலை என்ன என்று தெரிந்து தெரிவிக்குமாறு கேட்டிருந்தார்கள்.

இது சுலபமல்ல. எனினும், அண்ணாவுக்கு சிகிச்சை அளிக்கும் மூத்த மருத்துவருக்கு உதவியாளராக வந்திருந்த, ஒரு தமிழ்நாட்டு இளைஞர், டாக்டர் எனது நண்பர் சங்கர் ரமணிக்குத் தெரிந்தவர். அவர் சொன்ன விவரம். ''நிலமை கவலைக்கிடம்'' என்பதுதான். இதற்கான பல விஷயங்களையும் விளக்கி, அவர் சொன்னார்.

இது இங்கே கல்கி பத்திரிகையில் வெளி வரவும், மற்ற பத்திரிகைகள் வேறு விதமான நம்பிக்கையுடன் செய்திகளை வெளியிடவும், அண்ணாவுக்கு அடுத்த நிலையிலுள்ள தலைவர்களிடமிருந்து உடனடியாக ஜி. பார்த்தசாரதி 'அவர்களுக்கு 'போன்கால்' வந்தது. அப்போது திரு. ஜி. பார்த்தசாரதி என்னிடம் கோபித்துக் கொண்டார். "இதன் விளைவுகளை நீங்கள் யோசித்துப் பார்த்தீர்களா? அவர் பெரிய பதவியில் இருக்கிறார். உடல் நிலைமை சரியில்லை என்றால் உடனடியாக அடுத்து பதவிக்கு வருபவர்களிடையே எத்தனை போட்டிகள், முயற்சிகள், சண்டைகளை இது கிளப்பி விடும். உண்மையாயிருந்தாலும் நாம் இதை எழுதலாமா?'' என்றார். என் தவறு அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

''அரசியல் தலைவர்
பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்
கொண்டது தப்பாப் போச்சு.''
''என்னடா ஆச்சு?''
''புடவை, நகைன்னு அவ எதைக்கேட்டாலும்
வாங்கித் தராவிட்டால், 'படுக்கை அறையில்
ஆதரவை விலக்கிக் கொண்டு விடுவேன்'னு
மிரட்டியே காரியத்தைச் சாதிக்கறா!''
– லலிதா செல்லப்பா

நாட்டிய கலாநிதி பாலசரஸ்வதியின் வீட்டில் உலகத் தமிழ் மாநாட்டு படத்தை அண்ணா போட்டுக் காட்டினார். படம் துவங்கியபோது சொன்னார்: "கருணாநிதி வசனம்" என்று குறிப்பிட்டு. அவர் வசனத்தில் இருந்த பெருமதிப்பை இரண்டே வார்த்தையில் கூறி விட்டார்.

இரவு பதினோரு மணி இருக்கும். பால சரஸ்வதி அவர்களின் வீட்டிலிருந்து அண்ணா தங்கி இருக்கும் யேல் பல்கலைக் கழகத்திற்குத் திரும்பினோம்.

அண்ணா வந்த கார் ரிப்பேராகி விட்டது. எனவே அண்ணாவை என் காரில் அழைத்து வந்தேன். பத்து மைல் தொலைவு. அண்ணா மனம் விட்டு பால சரஸ்வதியின் நாட்டியத்திலிருந்து நேரு வரை பல்வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டு வந்தார்.

யேல் நகர எல்லைக்குள் வந்து விட்டோம். தெருவில் சிவப்பு, பச்சை தடை விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. எதிரே சாலையில் சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அண்ணா பேசிக் கொண்டிருந்த ஜோரில், நான் சிவப்பு விளக்கை கவனிக்காமல் நேரே வண்டியை ஓட்டி விட்டேன்! அண்ணாவும் கவனிக்க வில்லை; அது பற்றிச் சொல்லவில்லை. நல்லவேளையாக அந்த இரவு 11 மணிக்கு எந்த காரும் குறுக்கே வரவில்லை!

ஆனால் எனக்குள் எழுந்த அச்சம் என் எலும்பை உறைய வைத்து விட்டது. அதிலிருந்து நான் எந்த வி.ஐ.பியையும் வைத்து காரை ஓட்டுவதில்லை என்று சங்கற்பம் செய்து கொண்டேன்.

(தொடரும்)

மள்ளர் மலர்னு ஒரு மாதப் பத்திரிகைல ரீஸன்டா ஒரு சுவாரஸ்யமான தகவல் அகப்பட்டது.

அகத்தியர்னதும் உங்களுக்கு ஞாபகம் வர விஷயங்கள் என்னென்ன?

பரமசிவன் கல்யாணத்துக் கூட்டத்தை பேலன்ஸ் பண்ண ஸவுத் சைட் வந்து நின்ன ரிஷி;

காவிரியைக் கமண்டலத்தில் அடக்கியவர்;

தொல்காப்பியரோட குரு; அகத்தியம்ங்கற கிடைக்காத இலக்கண நூலை எழுதினவர்;

லோபா முத்திரையோட ஹஸ்பெண்ட்;

தென்? சீர்காழி கோவிந்தராஜன், எட்ஸட்ரா.

But இத்தனை அவதாரமும் ஒரே ஆளோடது இல்லை; நாட்டுல எக்கச்சக்கமான அகத்தியர்கள் வேற வேற கால கட்டத்துல இருந்திருக்கறதா தெரியுது.

புள்ளையாரை ஏன் கடல்ல கரைக்கணும்?

நம் ஊர்ல மட்டும் இல்லை. சிலோன், ஐரோப்பிய நாடுகளிலேயும் அகத்தியர்ங்கற பேர் இருந்திருக்கறதா 'அகத்தியர் வரலாறு' நூலை மேற்கோள் காட்டி எழுதியிருக்காங்க.

சில சாம்பிள் அகத்தியர்களைப் பார்க்கலாமா?

1. முப்புறநிருதர் காலத்துப் பொதிய மலை அகத்தியர் - குறுமுனி (கி.மு. 16000)

2. சூரபதுமன் காலத்து வாதாபி அகத்தியர் (கி.மு. 14,058)

3. லோபா முத்திரையின் கணவரான ரிக்வேத கால அகத்தியர் (கி.மு. 8000)

4. குடகு மலை அகத்தியர் (கி.மு. 6020)

5. ராமாயண காலத்துப் பஞ்சவடி அகத்தியர் (கி.மு. 6000)

இவங்களை மாதிரி இன்னும் இருபது, இருபத்தஞ்சு பேர் லிஸ்ட்ல இருக்காங்க. விசேஷம் என்னன்னா, அதுல மூணு பேர் புத்தமத அகத்தியர்கள்!

ஆராய்ச்சியெல்லாம் சரி; But, கி.மு. 16,000, கி.மு.14,058ன்னு எல்லாம் எந்த அடிப்படைல காலத்தை வரையறை செய்யறாங்கன்னு புரியலை. அத்தனை முந்தைய வருஷங்களுக்கு வரலாற்று ரீதில சான்றுகளே இல்லையே!

கடல் சாப்பிட்டுட்டதா சொல்ற எலமூரியா கண்டமே இதுக்கெல்லாம் ரொம்ப ஜூனியர் பிரிவிலதான் வருது. So, இந்த விஷயத்துல காலரீதில இன்னும் தீவிரமான ஆராய்ச்சி அவசியம்னு நினைக்கிறேன்.

'உயிரே' பார்த்தேன். படத்துல குறிப்பிடும்படியான விஷயங்களா எனக்குப் பட்டவை: கேமரா, லொகேஷன்ஸ், சில இடங்களில் பிஜிஎம். Then, சுஜாதாவோட சில இனிய



வசனங்கள். (இந்தி உதட்டசைவுக்கு அது எவ்ளோ தூரம் பொருந்தறதுங்கறது வேற விஷயம்)

படத்துல மனீஷா கொய்ராலா ஒரு தீவிரவாதி. அவகிட்ட ஷாருக்கான், "உனக்குப் பிடிச்ச விஷயங்கள் என்னென்ன"ன்னு கேட்கறார். என்ன பதில் வரும்னு எதிர்பார்க்கறீங்க?

அம்மா உள்ளங்கை, கோவில் மாடத்துப் புறா, கவிதை!

இது காதல் கதையா, தீவிரவாதிகள் பத்தின கதையான்னு டைரக்டரே குழம்பியிருக்கறது தெரியுது. ரிஸல்ட் எப்படி இருந்தாலும் மணிரத்னம் இதோட தீவிரவாதிகளை விட்டுடுவார்னு நம்பறேன்; எதிர்பார்க்கறேன்.

சிடி முழுக்கப் போன வாரம் கலர் கலரா பிள்ளையார் பார்த்தேன். இன்னிக்கு சர்ரியலிஸ ஓவியங்கள், சினிமாக்கள், இலக்கியம் பத்தி உலகம் முழுக்கப் பேசறாங்க. எனக்குத் தெரிஞ்சு பிள்ளையாரை விடப் பிரமாதமான சர்ரியலிஸப் படைப்பு வேற இல்லைன்னு தோணுது. மனுஷ உடம்பு, யானை முகம். But, நாலு கை. யானை வாய். சாப்பிடறது? கொழுக்கட்டை! வாகனம் என்னடான்னா மூஞ்சூறு! என்ன ஒரு கற்பனை?

நாள் கணக்கா, வாரக் கணக்கா உட்கார்ந்து சோறு தண்ணி பார்க்காம உழைச்சு, பிரும்மாண்டமா பிள்ளையார் பொம்மைகள் செய்து வெச்சு வருஷம் முழுக்க அழகு பார்க்காம எதுக்காகக் கடல்ல கரைக்கணும்னுதான் புரியலை. ஏதாவது தத்துவார்த்தமான காரணம் தெரிஞ்சவங்க எழுதி அனுப்புங்களேன். ●

— சுமி

வட்டமேஜை

✉ ராஜீவ் கொலை வழக்கின் மீதான, முன்னாள் டி.ஜி.பி. மோகன்தாஸின் சந்தேகங்கள் நம்மை சிந்திக்க வைக்கின்றன. அதிகாரிகள், பதவியில் இருக்கும்போது சிந்திப்பதைவிட, பதவி போன பின் ஆழமாய்ச் சிந்திக்கிறார்கள் என்பதும் மறுக்க முடியாதது!

தூத்துக்குடி-1, ப. சுகுமார்.

✉ அட்டைப் படத்தில் எவ்வளவு இயல்பாய்ப் புன்னகை செய்கிறாரோ அதேபோல் தம்முடைய பேட்டியிலும் எந்தவிதமான ஹிப்பாக்ரஸியும் இல்லாமல், இயல்பாய், ஆனால் பொருட் செறிவுடன் பதிலளித்து பாராட்டுப் பெறுகிறார் மூப்பனார். கேள்விகளும் வித்தியாசமாக இருந்தது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

தக்கோலம், அ. முஸ்தபா.

✉ உண்மையிலேயே 'ஹா' என்று ஆச்சரியப்பட வைத்த இலவச இணைப்பு ஹாரோக்கியம். வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே சிறந்தது என்பதை தெள்ளத் தெளிவாக விளக்கி, அதற்கான வழிமுறைகளையும் அழகாகக் கூறியிருந்தது சிறப்பு.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ பி.ஜே.பி. ஆட்சிக்குத் தீராத தலைவலியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் 'ஜெயலலிதாவின் மிரட்டல்', காவிரி விஷயத்திலும் தொடர்வது சிறுபிள்ளைச் செயலாகும்! அவருடைய அரசியல் கண்ணோட்டத்தில் கண்ணியம் குறைவதைக் கண்டித்து தாங்கள் கூறிய தலையங்கக் கருத்துக்கள் பாராட்டத்தக்கன.

இனாம் மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

✉ ஸ்கூட்டரில் ஏறி ரயிலைத் துரத்திய கிருஷ்ணமூர்த்திக்கு ஏற்பட்ட விபத்தையும், அந்த விபத்தினால் ஏற்பட்ட பின் விளைவுகளுக்கு டாக்டர் ரெஜினால்டு தலைமையில் மருத்துவர்கள் மேற்கொண்ட மருத்துவப் பணியினையும் விறுவிறுப்பான திரைப்படப் பாணியில் விளக்கியிருந்த விதம் என்னை வெகுவாகக் கவர்ந்தது!

போடிநாயக்கனூர், எஸ். சையது முகமது.

✉ இவ்வார கல்கியில் ஔரங்கசீப் எழுதிய பக்திக் கட்டுரையின் நடை வெகு அருமை. பயணக் கட்டுரை வடிவில் வந்த இந்த பக்திக் கட்டுரை, எழுத்து நடையில் ஒரு புதுமுயற்சி.

திருச்சி-5, கிருஷ்ணா.

✉ 'வீட்டு வரியா? வழிப்பறியா?' என்று வெளிவந்துள்ள கட்டுரைக்கு கை மேல் பலன்! புதிய வரி விதிப்பு முறை கைவிடப் பட்டுவிட்டது. உரிய நேரத்தில் தடுத்து நிறுத்திய உங்களுக்கு மனமார்ந்த நன்றி.

தஞ்சாவூர், கி. கிருஷ்ணமூர்த்தி.

பாடுபட்டோம்; பலன் கிடைத்தது!

✉ 'பல்லவபுரம் நகர குடியிருப்போர் சங்கங்களின் இணைப்பு மையம்' அநியாய - பன்மடங்கு வீட்டு வரி உயர்வை எதிர்த்து தீர்மானம் இயற்றி அரசுக்கு அனுப்பி வைத்ததோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிக்கும் சென்று - அந்தந்த குடியிருப்போர் நலச் சங்கத்தை சந்தித்து விளக்கி தீர்மானம் நிறைவேற்றச் செய்து, அரசுக்குத் தெரிவிக்க வைத்தோம்! கல்கி வெளியிட்ட "வீட்டு வரியா? வழிப்பறியா?' என்ற தலைப்பிலேயேதான் நாங்கள் போஸ்டரும் வெளியிட்டோம். பல பத்திரிகைகளில் வாசகர் கடிதத்தின் மூலம் வீட்டு வரி உயர்வின் பாதிப்பைப் பற்றி எழுதினோம். பலன் கிடைத்திருக்கிறது.

சென்னை - 44, வி. சந்தானம் (தலைவர்)
பல்லவபுரம் நகர குடியிருப்போர் சங்கங்களின் இணைப்பு மையம்.

✉ 'வீட்டு வரியா? வழிப்பறியா?' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த கட்டுரையில் நான், சக கவுன்சிலர்களிடம் வரி உயர்வுகளிலுள்ள அபாயங்களை விளக்கிச் சொல்லி, எப்படி நீங்கள் இந்த தீர்மானத்தை அங்கீகரித்தீர்கள் என்று கேட்க, "எங்களுக்கு என்ன தெரியும்? ஆதரிப்பதாக எல்லோரும் கை உயர்த்தினார்கள். நானும் உயர்த்தினேன்" என்று அவர்கள் கூறியதாக வந்துள்ளது. நான் அப்படிச் சொல்லவில்லை. நான் சொன்னதெல்லாம் இவற்றைப் பற்றி விரிவாக விவாதிக்க கவுன்சிலர்களுக்குப் போதுமான அவகாசம் கொடுக்கப்படவில்லை என்பதுதான்.

பல்லவபுரம் நகராட்சி, எஸ். நரசிம்மன்,
கவுன்சிலர்.

யூடிஐ
பாண்ட் ஃபண்ட்

உங்கள் முதலீட்டை வரி சிக்கனமாக மற்றும் சுலபமாக ரொக்கமாக்குங்கள்

எளிதாக ரொக்கமாக்கும் வசதி | தூய கடன் திட்டம் | அன்றாட என்ஏவி | மூலதன ஆதாயம் | இன்டெக்சேஷன் | கவர்ச்சிகரமான வரிக்கு பின்பான வருவாய்

யூடிஐ பாண்ட் ஃபண்ட் இப்போது விற்பனைக்காக திறந்துள்ளது. தூய கடன் ஃபண்ட் திட்டமானதால், இது ஒரு பத்திரமானத் திட்டமாகும். என்ஏவியின் வளர்ச்சியில் இதன் ஆதாயங்கள் பிரதிபலிக்கப்படும். முதலீடு செய்த ஒரு ஆண்டிற்குப் பிறகு இன்டெக்சேஷன் நன்மைகளுடன் கூடிய மூலதன ஆதாயத்திற்கு என்ஏவி வளர்ச்சி தகுதி பெறுவதால் இது ஒரு வரிச் சேமிப்பிற்கு உகந்த திட்டமாகும். யூடிஐ நிறுவனத்தின் 51 கிளைகளின் மூலம் அன்றாட அடிப்படையில் எளிதாக ரொக்கமாக்க முடியும். உங்கள் பல்வேறு எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய யூடிஐ பாண்ட் ஃபண்டில் முறையாக முதலீடு செய்யுங்கள்.

யூடிஐ பாண்ட் ஃபண்டின் சிறப்பம்சங்கள் :

- **மிகச்சிறந்த ரொக்கமாக்கும் வசதி :** இந்த பாண்ட் ஃபண்ட் காலவரை அற்றது. என்ஏவி அன்றாடம் வெளியிடப்படும். விற்பனை/மறுகொள்முதல் என்ஏவி அடிப்படையில்.
- **நோ லோட் :** ஒரு ஆண்டு கழித்து திட்டத்திலிருந்து விலகினால் ஒருவித கழிப்பும் கிடையாது. ஒரு ஆண்டிற்கு முன்பு விலகினால், என்ஏவியின் மேல் நிர்ணயிக்கப்படும் விற்பனைக் கட்டணமான 1.5% விதிக்கப்படும்.
- **கவர்ச்சிகரமான வரிக்கு பின்பான வருவாய்.** என்ஏவியில் ஏற்படும் மூலதன வளர்ச்சி வருமான வரிச்சட்டம் 1961 பிரிவுகள் 48 மற்றும் 112ன் கீழ் இன்டெக்சேஷன் நன்மைகளுடன் கூடிய மூலதன ஆதாயமாகக் கருதப்படும்.
- **குறைந்தபட்ச முதலீடு :** ரூ. 10,000/-. உச்சவரம்பு கிடையாது. ஃபோலியோக்களின் கீழ் செய்யப்படும் பின்பான முதலீடுகள் குறைந்தபட்சம் ரூ. 500/- ஆக இருக்க வேண்டும்.
- வருமான வரிச்சட்டம் 1961 பிரிவுகள் 54 இஏ மற்றும் 54 இபி-ன் கீழ் மூலதன ஆதாய வரிவிலக்கும் கிடைக்கிறது.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான நாளைக்கு

உங்கள் யூடிஐ முகவர் அல்லது நிதி ஆலோசகரை இன்றே அணுகவும்!

அனைத்து மியூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யும் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்கிற்கு உட்பட்டவையாகும். மற்றும் செக்யூரிட்டிகள் மார்க்கெட்டைப் பாதிக்கும் அம்சங்கள் மற்றும் சக்திகளைப் பொறுத்து ஃபண்டின் என்ஏவி ஏறிடவும்/ இறங்கிடவும் செய்யும். கடந்தகால சாதனை வருங்கால முடிவுகளைச் சுட்டிக்காட்டுவதாகாது. **யூடிஐ பாண்ட் ஃபண்ட்** என்பது ஃபண்டின் பெயர் மட்டுமே தவிர, இது எவ்விதத்திலும் ஃபண்டின் தரத்தை, அதன் வருங்கால வளர்ச்சியை அல்லது வருமானத்தை சுட்டிக்காட்டுவதாகாது. ஃபண்டின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும் என்பதற்கு உறுதியளிக்க முடியாது. முதலீடு செய்யுமுன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, **சென்னை** 600 001. போன் : 517101.

கிளை அலுவலகங்கள் : • **கோயம்புத்தூர்** போன் : 214973 • **சென்னை** போன் : 517101, 517190 • **மதுரை** போன் : 38186 • **திருச்சி** போன் : 760060

116/98 C TAM A

ஏழை எளிய மக்களின் குறைகளை, நேரில் கேட்டுத் தீர்ப்பதற்காக, ஒரு மாவட்ட கலெக்டர் 'நடைப்பயணம்' மேற்கொண்டது குறிப்பிடப்பட வேண்டிய விஷயம். மேற்படி பயணத்தை நடத்தி முடித்திருப்பவர் விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அதுல்ய மிஸ்ரா.

தீண்டாமை எதிர்ப்பு, மதுவிலக்கு ஆகிய இரண்டு உறுதிமொழிகளும், கலெக்டர்நடைப்பயணம் மேற்கொண்ட பன்னிரெண்டு நாட்களும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் எடுக்கப்பட்டன. 'உறுதிமொழி' எடுத்துக் கொண்ட கிராமங்களை, நேரில் போய்ப் பார்த்தால் என்ன' என்று நமக்குத் தோன்ற, உடனே விழுப்புரம் மாவட்டத்துக்கு நடையைக் கட்டினோம்...

சாலையாம்பாளையம்.

வளவனூரில் இருந்து பிரிந்து செல்கிற பாதையில் இரண்டு கிலோ மீட்டர் தூரம். முதலில் எதிர்ப்பட்டவர் புருஷோத்தமன்.

"எங்க கிராமத்துல இப்ப டீக்கடையே கிடையாதுங்க. மேல் சாதிக் காரங்கதான் முதல்ல டீக் கடை வச்சிருந்தாங்க. அப்ப நான் சின்னப் பையன். நாங்க தனிக்கிளாஸ்லதான் டீ குடிக்கணும். அப்புறம் நாங்களே கையில கிளாச கொண்டு போய், டீ வாங்கிக் குடிக்க ஆரம்பிச்சோம். அதுக்கப்புறம்தான் மேல் சாதிக்காரங்களுக்கும், எங்களுக்கும் பிரச்னை வர ஆரம்பிச்சது. இப்போ டீக்கடையே இல்லீங்க.



• மாவட்ட கலெக்டர் அதுல்ய மிஸ்ரா



• சுப்ரமணி



• புருஷோத்தமன்



• புகழேந்தி

டீக்கடை வச்சா பிரச்னை வரும்னு யாரும் வைக்கலை!" என்றார் புருஷோத்தமன்.

"கள்ளச் சாராயம் எதுவும் ஊர்ல இருக்கா?"

"அதை ஏங்க கேக்குறீங்க. ஊருக்குப் பொதுவா டீ.வி பாக்குற ரூம் ஒண்ணு இருக்குங்க. அங்கதான் சாராயம் ஓடுது. வியாபாரம் பாதிக்கும்னு டீ.வி.யைக் கொண்டு போய் அவங்க வீட்ல வச்சிக்கிட்டாங்க. அ.தி.மு.க கிளைச் செயலாளரும், பஞ்சாயத்து யூனியன் மெம்பர் ஒருவரும்தான் இதை நடத்துறாங்க. யார் என்ன செய்ய முடியும்?"

அடுத்து நாம் சந்தித்தது வயலில் பாத்தி கட்டி விட்டு, சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்த சுப்ரமணி என்கிற எளிமையான விவசாயியை. போட்டோவுக்கு போஸ் கொடுக்க முதலில் வெட்கப்பட்டார். காரணம் அவர் உடுத்தியிருந்தது

கோவணம் மட்டுமே.

"கலெக்டர் வந்தாருங்க. நல்ல கூட்டம். நல்ல விஷயத்தை எல்லாம் எடுத்துச் சொன்னாருங்க. எல்லாரும் உறுதிமொழி எடுத்துக்கிட்டோம். ஆனா, பிரயோசனம் ஒண்ணும் இல்லீங்க. கலெக்டர் வந்துட்டுப் போன மறுநாளே நம்ம ஊர்ல அஞ்சு மூட்டை சாராயத்தை போலீஸ்காரவுங்க புடிச்சிட்டுப் போனாங்க. ஆனாலும் இன்னும் சாராயம் இருக்கத்தான் செய்யுது. என்னிக்குதான் விடிவு காலமோ?" என்றார் அவர்.

சாலையாம்பாளையம் (கோலியனூர்) ஊராட்சி ஒன்றியத் தலைவர் நா. அச்சுதன் என்கிற கருப்பன், பெருமாள், சீனிவாசன் எல்லோருமே "சாதிப் பாகுபாடு இல்லை, ஊரில் கள்ளச் சாராயம இல்லவே இல்லை!" என்றுதான் சொன்னார்கள்.

"விழுப்புரம் மாவட்டம் எங்கேயுமே தீண்டாமை இல்லையா?" என்று நாம் கேட்டதற்கு ராமலிங்கம் சொன்னார்.

"அதெப்படிங்க இல்லாம இருக்கும். இன்னிக்குக்கூட ஆதனூர் பஞ்சாயத்து, கிளாபாளையத்துல தாழ்த்தப்பட்டவங்க டீக்கடைல தனி கிளாஸ்லதான் டீ குடிக்கணும். தோள்ல துண்டு போட்டுக்கிட்டு, கால்ல செருப்பு போட்டுக்கிட்டு எந்த தலித்தும் ஊருக்குள்ள நடமாட முடியாது!"


• கயல்விழி


• ஏ. மணி
எம்.எல்.ஏ.

ஒரு நடைப்பயணமும் இரண்டு சமூகப் பேய்களும்...!

புகழேந்தியிடம் விசாரித்தபோது, "சாலையாம்பாளையத்துல சாராயம் ஓடுதுன்னு நாங்க கேள்விப்பட்ட உடனே போலீசுக்கு தகவல் குடுத்துட்டோம். அதும்பேர்லதான் அஞ்சு மூட்டை சாராயத்தை போலீசார் கைப்பற்றினாங்க. அந்த டீவி பெட்டி வைக்கிற கட்டடத்துக்கு முன்னாடி நிறைய குப்பை சேர்ந்து போகுது. ஜனங்க உட்கார்ந்து பார்க்க முடியாமல் போகுது. மாற்று ஏற்பாடா வேற கட்டடம் கட்ட ஏற்பாடு நடந்துக்கிட்டிருக்கு. இந்த சாராய விவகாரத்தைக் கவனிக்க உடனே நடவடிக்கை எடுக்கிறேன். மற்றபடி கலைஞரின் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கிற கலெக்டரை பாராட்டத்தான் வேண்டும். சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு இந்த விஷயத்துல, கலெக்டர் மேல வருத்தம்கூட இருக்கு!" என்றார் புகழேந்தி.

திருநாவலூர் –

"எங்க ஊர்ல தீண்டாமைங்கற பேச்சுக்கே இடமில்லீங்க. இவரு பேரு ராஜசுந்தரம். இவரு ரெட்டியாரு. நான் எஸ்.சி. ரெண்டு பேரும் எப்பவும் ஒண்ணாத்தான் இருப்போம்!" என்கிறார் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் வி. ராமலிங்கம்.

செங்குறிச்சி –

பஞ்சாயத்து யூனியன் மெம்பர் கிருஷ்ணமூர்த்தியுடன் பேசத் துவங்கியதுமே நம்மைச் சுற்றி கூட்டம் கூடி விட்டது. கலெக்டரின் சிறப்பு, அண்ணா மறுமலர்ச்சி திட்டம், நியாய விலைக்கடை, அது இது என்று பேச ஆரம்பித்த கிருஷ்ணமூர்த்தி, "ஊரில் கள்ளச் சாராயம் இல்லவே இல்லை" என்று மறுத்தார். நமக்குத்தான் தர்மசங்கடம். முகம் கொடுத்துப் பேச முடியாத அளவிற்கு சாராய வாசனை!

கூடவே, "நயினார் குப்பத்துல கள்ளச் சாராயம் ஓடுதுங்க!" என்று பின்னே ஒரு குரல் கேட்டது.

செங்குறிச்சி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திருமதி கயல்விழியிடம் பேசினோம்.

"செங்குறிச்சில சாராயம் இல்லீங்க. அங்கேருந்து ஒண்ணரை பர்லாங் தூரத்துல பாகூர்னு ஒரு ஊர் இருக்கு. அங்கே போய் குடிச்சிட்டு வர்றாங்க. நயினார் குப்பத்துல இல்லைங்க. பச்சை வெளி பார்டர்ல சாராயம் விக்கறாங்க. வண்டிப்பாளையத்துல சாராய பேக்டரியே இருக்கு. ஆனா, அது நம்ம மாவட்டம் இல்லீங்க. திருவண்ணாமலை மாவட்டம். கலெக்டர் நடைப்பயணத்துல நானும் கலந்துக்கிட்டேன். அவர் கூட என் தொகுதி முழுக்க நடந்திருக்கேன். அவருக்கு இருக்குற

வேகம், தியாக மனப்பான்மை எல்லாருக்கும் இருந்துச்சுன்னா, இந்த மாவட்டம் தமிழகத் துலயே முதன்மையா இருக்கும்!" என்றார்.

உளுந்தூர்ப்பேட்டை தொகுதி எம்.எல்.ஏ. வான மணியிடம் கலெக்டர் அதுல்ய மிஸ்ரா வின் நடைப்பயணம் குறித்து விசாரித்த போது, "கலைஞர் ஆட்சியில் பொது மக்கள் சந்தோஷ மாக இருக்கிறார்கள். கட்சிக்காரர்கள் கஷ்டப் படுகிறார்கள். ஏனென்றால், அவ்வளவு வேலைப் பளு. பொதுவாக அதிகாரிகள் ஊர் களுக்குப் போனால், கூட்டம் இருக்காது. பெரிய பெரிய அரசியல் தலைவர்களுக்கு வருகிற கூட்டத்தை இந்த கலெக்டரின் நடைப் பயணத்தின் போது பார்க்க முடிந்தது. சில எதிர்க்கட்சிகள் எரிச்சல்படத்தான் செய்கின் றன. ஓர் அரசு நல்ல திட்டங்களுடன் செயல் படும் போது – அதற்காக ஓர் அதிகாரி முனைப் புடன் பணியில் இறங்குகையில் என்போன்ற அரசியல்வாதிகள் எப்போதுமே அவர்களுடன் கைகுலுக்கத் தயார்!" என்றார்.

கடைசியாக விழுப்புரம் மாவட்டக் கலெக்டர் அதுல்ய மிஸ்ராவைச் சந்தித்தோம். முப்பத்திரண்டு வயதுக்காரரான இவருக்கு இரு பெண் குழந்தைகள். பிடித்த பொழுதுபோக்கு பேட்மிட்டன் விளையாடுவது. 'நேரம்தான் இல்லை' என்று சிரித்தவர், ஆங்கிலம் கலந்த தமிழில் சரளமாய்ப் பேசினார்.

"மாவட்டம் முழுவதும் நடைப்பயணம் செய்ய வேண்டும் என்று உங்களுக்கு ஐடியா வந்தது எப்படி?"

"கலெக்டர்கள் மாநாடு ஒன்று நடந்தது. அதில் கலந்து கொண்ட முதல்வர், எங்களிடம் கலெக்டர், எஸ்.பி., மற்றும் ஒவ்வொரு அரசாங்க அதிகாரியும் தமிழகத்தின் உள்ளடங் கிய கிராமங்களுக்குச் சென்று அண்ணா மறுமலர்ச்சி திட்டம், சமத்துவபுரத் திட்டம், நமக்கு நாமே திட்டம் மற்றும் சிறுசேமிப்புத் திட்டம் ஆகியவற்றை மக்களுக்கு விளக்கிக் கூறி அவர்களின் குறைகளையும் கேட்க வேண் டும் என்று கூறினார். அறிவொளியில் 'நடைப் பயணம்' என்று ஒரு திட்டம் இருக்கிறது. அதன் அடிப்படையில் இதைச் செயல்படுத்தி னால் சிறப்பாக இருக்கும் என்று தோன்றியது."

"நடைப்பயணத்தில் பலன் கிடைத்ததா?"

"நிச்சயமாக. பன்னிரண்டு நாள் பயணத் தில் சிறுசேமிப்புத் திட்டத்தில் மட்டும் 3,000 பேர் கணக்குத் துவங்கியிருக்கிறார்கள். 'நமக்கு நாமே' திட்டத்தில் மொத்த ப்ராஜக்டுக்கான தொகையாக ரூபாய் பத்து லட்சத்தி ஐம்பத் தோராயிரத்திற்கு வழிபிறந்திருக்கிறது. ஒரு விளையாட்டு அரங்கம் கட்டுவதற்காக எட்டு லட்சம் ரூபாய் நன்கொடையாகப் பெறப்பட் டுள்ளது. இன்னும் 5 லட்சம் நன்கொடை வேண்டியிருக்கிறது. (நன்கொடை தொடர்பாக யாருக்கோ போன் பண்ணுகிறார்.) கிட்டத் தட்ட 25,000 பேர் ஹெல்த் கேம்பில் பரி சோதனை செய்யப்பட்டார்கள். 32,267 மனுக் கள் மக்களிடமிருந்து பெறப்பட்டன."

"அத்தனை மனுக்களையும் பைசல் பண்ணு வது சாத்தியமா?"

"நான் மனுக்களை மூன்று வகையாகப் பிரிக்கிறேன். 'வேலை வேண்டும்' போன்ற கோரிக்கைகளை நிராகரித்து விடுகிறேன். ஏனெ னில், அதற்கான அத்தாரிடி என்னிடம் இல்லை. இருப்பினும், அத்தகைய மனுக்கள் எண்ணிக்கையில் குறைவுதான். சில முதியவர் கள் உதவி கேட்கிறார்கள். அரசாங்க ஆணைப் படி மகன் இருந்தால், அவர்களுக்கு உதவி செய்ய முடியாது. மகன் இருந்தும் அவர் களைக் கவனிக்காமல் இருக்கலாம். அப்படிப் பட்ட நபர்களுக்கு 'ரோட்டரி கிளப்', 'லயன்ஸ் கிளப்' போன்ற தன்னார்வத் தொண்டு நிறு வனங்களை அணுகி, அவர்கள் மூலமாக உதவி வழங்க முயற்சி செய்து வருகிறேன். மற்றபடி நியாயமான மனுக்களை இரண்டு மாதத்திற்குள் செட்டில் பண்ண ஏற்பாடு செய்து வருகிறேன். மொத்த மனுக்களில் 1,364 மனுக்கள், பன்னி ரண்டு நாள் நடைப்பயணத்திலேயே பைசல் செய்யப்பட்டு விட்டன."

"தீண்டாமை மற்றும் கள்ளச் சாராயம் இவை இன்னமும் விழுப்புரம் மாவட்டத்தில் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன. என்ன செய்யப் போகிறீர்கள்?"

"இரண்டுமே சமூகப் பேய்கள் (Social Evils). இரண்டையும் முற்றிலுமாக ஒழித்துக் கட்ட எல்லோருடைய ஆதரவும் தேவை. தற்போது காவல் துறையும் மற்ற அரசு அதிகாரிகளும் என்னுடன் ஒத்துழைப்பது போல், பொது மக் களும் ஒத்துழைத்தால் இரண்டையும் முற்றிலு மாக ஒழித்துக் கட்டி விடலாம் என்றே கருது கிறேன்."

"உங்களுடைய எதிர்காலத் திட்டம் என்ன?"

"முதலில் வந்திருக்கிற 32,267 மனுக்களுக்கும் பதிலளிக்க வேண்டும். அதற்கப்புறம்தான் எதிர் காலத் திட்டத்தைப் பற்றி யோசிக்க வேண் டும்!" ●

— கே. பாலசுப்ரமணியன்

படங்கள் : **வீரமணி**

பத்துக் கட்டளைகள்



ஒரு சட்டைக்காகப் பதினைந்தாயிரம் செலவு செய்யாதீர்கள்!

கடன் அட்டை (Credit card) இருப்பது சௌகரியம்தான். அவசரத்துக்கு உதவுவதோடு, பிக்பாக்கெட்காரர்களிடம் பணத்தைப் பறி கொடுக்காமல் இருக்கவும் அது உதவுகிறது. என்றாலும் கீழே உள்ள விஷயங்களை நினைவில் கொள்வது நல்லது.

● உங்கள் வருமானத்தைக் கணக்கில் கொண்டுதான் கடன் அட்டைக்கான அதிகப் பட்சத் தொகையை வங்கி நிர்ணயிக்கும். ஷாப் பிங் செய்வதெல்லாம் மனைவிதான் என்றால், கடன் அட்டை கணவரின் பெயரில் மட்டும் இருந்து என்ன பயன்? Add-on Card என்ற வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் லிமிட் பத்தாயிரம் ரூபாய் என்று வங்கி நிர்ணயித்தால் உங்கள் பெயரில் உள்ள கடன் அட்டைக்கு ஐயாயிரம், உங்கள் மனைவியின் பெயரில் உள்ள அட்டைக்கு ஐயாயிரம் என்று (உங்கள் மனைவிக்கு வருமானமே இல்லாமல் போனாலும்) வங்கி பிரித்துக் கொடுக்கும்.

● ஒரு வங்கியை அணுகும்போது அங்கு வழங்கப்படுவது சார்ஜ் அட்டையா அல்லது கடன் அட்டையா என்பதை (இரண்டிற்குமே கடன் அட்டை என்ற பொதுவான பெயர் இருக்கலாம். அதன் தன்மையை முதலில் அறிந்து கொள்ளுங்கள்) உறுதி செய்து கொள்ளுங்கள். சார்ஜ் அட்டை என்றால் அதைக் கொண்டு நீங்கள் வாங்கிய பொருள்களுக்கான தொகையை முழுவதுமாக அடுத்த மாதமே வங்கியில் செலுத்தி விட வேண்டியிருக்கும். கடன் அட்டை என்றால் அந்தத் தொகையில் ஒரு சிறு பகுதியை மாதா மாதம் செலுத்தினால் போதும். மீதித் தொகையை கடனாகக் கருதி, வங்கி உங்களிடமிருந்து அதை நானாவட்டத்தில் வசூலிக்கும்.

● உடனே "ஆஹா, கடன் அட்டைதான் என் சாய்ஸ்" என்று துள்ளிக் குதிக்க வேண்டாம். இதற்கான வட்டித் தொகை கொஞ்ச நஞ்சமல்ல. (சுமார் முப்பது சதவீதம் வரைகூட இது இருக்கக்கூடும்.)

● மாதம் இவ்வளவு என்று உங்கள் கடன் அட்டை வழங்கப்பட்ட வங்கியிலிருந்து (அதாவது அட்டை வழங்கப்பட்ட கிளை அல்லாத வேறொரு வங்கிக் கிளையில்) ஓரளவு ரொக்கத் தொகையைப் பெற்றுக் கொள்ளவும் வசதி உண்டு. ஆனால் இதற்கான வட்டி வீதம் என்ன என்பதை முதலிலேயே தெரிந்து கொண்டால், பின்னாளில் மூர்ச்சையடைவதைத் தவிர்க்கலாம்.

● "கடன் அட்டையில் என் லிமிட் ஐயாயிரம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் என்ன? நாலைந்து கடைகளில் தலா ஐயாயிரம் ரூபாய்க்கான ஷாப்பிங்கை என்னால் செய்ய முடியுமே" என்ற குயுக்தியான எண்ணம் உங்களுக்குத்

தோன்றினால்ட உண்மை. அதுவும் நடைமுறை சாத்தியம்தான்.

● ஆனால் மேலே குறிப்பிட்டப்படி உங்கள் கடன் அட்டை வசதியை எல்லை மீறி பயன்படுத்துவதுடன், மாதாமாதம் மொத்தத் தொகையையும் வங்கிக்குச் செலுத்த முடியவில்லை என்றால் உங்கள் கடன் அட்டையைப் பறிமுதல் செய்து விடுவார்கள்.

● சில வங்கிகளில் வெகுமதித் திட்டங்கள் உண்டு. அதாவது நீங்கள் கடன் அட்டையைக் கொண்டு அதிக மதிப்புள்ள பொருள்களை வாங்க வாங்க, உங்களுக்கு மேலும் மேலும் பாயிண்ட்டுகள் அளிக்கப்பட்டு, அதற்கேற்ப வெகுமதி உண்டு. இந்தத் தூண்டிலில் சிக்காததே நல்லது. கணக்குப் போட்டால் அவர்கள் அளிக்கும் ஒரு சட்டையைப் பெற சுமார் பதினைந்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை நீங்கள் வாங்க வேண்டியிருக்கும்!

● கடன் அட்டைகளால் வேறு என்ன உபயோகம் உண்டு என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள். சிலவகைக் கடன் அட்டைகளில் இலவச இன்ஷூரன்ஸ் வசதிகூட உண்டு. அதே சமயம் சில குறிப்பிட்ட பெட்ரோல் பங்குகளில் இந்த கடன் அட்டையைப் பயன்படுத்த முடிந்தாலும் குறிப்பிட்ட தொகையை சர்வீஸ் சார்ஜ் என்று அதிகமாக வசூலிக்கக் கூடும். ரயில்வேயில் முன்பதிவு அலுவலகத்தில் கடன் அட்டையைக் கொண்டு கூட ரயில்வே பயணச் சீட்டை வாங்கிக் கொள்ள முடியும்; இதற்கான கியூ வரிசை குறைவானதாக இருப்பதால் சீக்கிரமேகூட முன்பதிவு செய்துவிட்டுத் திரும்ப முடியும்.

● உங்கள் கடன் அட்டையை எங்காவது பறிகொடுத்து, அதை எடுத்தவர் அதைக் கொண்டு இஷ்டத்துக்கு பொருள்களை வாங்கிக் குவித்தால் (கடன் அட்டையில் உள்ள உங்கள் கையெழுத்தை அப்படியே அவர் போடலாம், கொஞ்சம் முயற்சி செய்தால்), அந்தச் செலவெல்லாம் உங்கள் தலையில் வந்து விழுமோ? என்ற கவலை உங்களுக்கு எழலாம். அதனால்தான் கடன் அட்டையைப் பெறுவதற்காக வங்கியை அணுகும்போது "அட்டை தொலைந்து விட்டால் உங்கள் நிலை என்ன?" என்பதை நிச்சயம் செய்து கொள்ளுங்கள். பொதுவாக உங்கள் கடன் அட்டையை யாராவது தவறாகப் பயன்படுத்தியிருந்தாலும்; அதிக பட்சம் ஆயிரம் ரூபாய் வரைதான் உங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

● கடன் அட்டை தொலைந்தால் நீங்கள் உடனடியாக உங்களுக்கு கடன் அட்டை வழங்கிய வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு இதனைத் தெரிவித்து அதற்கான அக்னாலெட்ஜ்மென்ட் கார்ட்டையும் மறக்காமல் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். அருகில் உள்ள காவல் நிலையத்தில் தொலைந்து போன விவரத்தைப் பதிவு செய்து கொண்டு எஃப்.ஐ.ஆர் பெற்றுக் கொள்ளவும். ○

— ஜி.எஸ்.எஸ்.

நடக்குமென்பார் நடக்கும்!

யோட பாராட்டைப் பெறுவீங்க. சிலருக்குப் பிரமோஷன் சான்ஸும் இருக்கு. புண்ணிய யாத்திரை போகிற வாய்ப்பு, பார்டிங்கள்ல கலந்துக்கற வாய்ப்பு-இந்த ரெண்டும் அநேகமா பலருக்கு இந்த வாரம் உறுதி.



மேஷம்: *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

கலங்காதிரு மனமேன்னு கண்ணதாசன் ஒரு பாட்டு எழுதியிருக்காரு தெரியுங்களா? அதை ஞாபகப்படுத்திக்கங்க. சின்னச் சின்ன விஷயமெல்லாம் உங்களுக்கு பூதக்கண்ணாடில பார்க்கறாப்பல பயங்கரமா தெரியும். எல்லாமே பிரச்னை; எல்லாமே சிக்கல்னு தோணும். ஆனா, அது உண்மை இல்லீங்க. அடிப்படைல ரொம்ப ஸ்ட்ரெயிட் ஃபார்வர்டான உங்களை யாராலும் அசைச்சிக்க முடியாது! இந்த வாரம் ஒரு நீண்ட தூரப் பிரயாணம் உங்களுக்கு இருக்கலாம். வீட்டுல கணவனால மனைவிக்கும், அம்மணிங்களால ஐயாக்களுக்கும் ஆறுதலான விஷயங்கள் அரங்கேறலாம்.



ரிஷபம்: *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்களுக்கு இப்ப தேவை கூடுதல் சாமர்த்தியம். நண்பர்களானாலும் சரி; மேலதிகாரிகளானாலும் சரி; உங்க வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமைப்படுவாங்க. ஃப்ரெண்ட்லி அணுகுமுறையைத் தவறாம பிரயோகிக்கணும். பணி மாறுதல் எதிர்பார்க்கறவங்களுக்கு, அது கொஞ்சம் தள்ளிப் போகும். ஆனா எதிர்பாராத சில பயணங்கள் வந்து சேரும். பெண்களுக்கு கொஞ்சம் நேரம் சரியில்லை. அலுவலகத்துல சில பிரச்னைகளைச் சந்திக்க வேண்டி வரலாம். பண இழப்புக்கும் சான்ஸ் இருக்குது. ஒரு கடிதம் வந்து உங்களைக் குஷிப்படுத்தும். அது அநேகமா நீங்க எதிர்பாராத நபரிடமிருந்து இருக்கலாம். வாரக்கடைசில, முக்கியமான சில முடிவுகள் எடுப்பீங்க.




மிதுனம்: *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்களுக்கென்னங்க? ராஜா வீட்டுப் பூனைக்குட்டி. அத்தனை கிரகங்களும் சப்போர்ட் பண்ணும்போது பிரச்னையா? நோவே பாஸிபின்! நடக்காதுன்னு நினைச்சிட்டிருக்கற காரியமெல்லாம் கூட மளமளன்னு நடந்து முடிஞ்சிடும். வீடு, மனை வாங்கற யோகம் இருக்கு. அரசியல்வாதிகளுக்கும் ரியல் எஸ்டேட் பிஸினஸ் பண்றவங்களுக்கும் இது அமோகமான வாரம்! பெண்களுக்குத் திருமண யோகம் கூடுது! ஒரு முக்கியமான பிரச்னையில் நீங்க எடுத்துக்கற அக்கறை, கவனம் மூலமா, மேலதிகாரி



கடகம்: *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உணர்ச்சிவசப்பட்டு எதையாவது பேசிட்டு, சிக்கல்ல மாட்டிக்காதீங்க. மேலதிகாரிகள் பற்றி விமர்சனம் வேணாம். நீங்க பேசறதை அப்படியே போய் வத்திவெக்க ஒரு கோஷ்டி காத்துக் கெடக்குது! கவனம்! வெளியிடங்கள்ல சாப்பிட்டு, வயிற்றைக் கெடுத்துட்டு, "அம்மா நோவுதே! ஐயா நோவுதே!"ன்னு கஷ்டப்படுவீங்க. வீட்டுலயோ, பணம் பத்தலைன்னு சம்சாரம் மூஞ்சியைத் தோள்ல இடிச்சி, மூக்கை நொடிப்பாங்க. சமாளிங்க! ஆனா, கடன் மட்டும் வாங்கிடாதீங்க. பின்னால சிரமப்படுவீங்க. யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போடாதீங்க.



சிம்மம்: *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய).*

போன வாரம் போல அத்தனை கஷ்டப்படமாட்டீங்க. நிதி நிலைமை சீராயிட்டு வரும். அதுவே பாதி பிரச்னை குறைஞ்சா மாதிரிதானே! நீங்க போடற திட்டம் எல்லாமே வெற்றி அடையாதுன்னாலும் சில முக்கியமான விஷயங்கள்ல உங்களுக்கு வெற்றி நிச்சயம்! அலைச்சலும் லேசான உடல் நலக்குறைவும் இருக்கும். அண்ணன் தம்பிங்க உதவுவாங்க. ஆனா சில உறவினர்களோட வாக்குவாதம் செய்து, பகை வளர்த்துக்கற சந்தர்ப்பம் வரும். கவனம்! முதலீடுகள், ஸ்பெகுலேஷன், ரேஸ் மாதிரியான விஷயங்கள் எதுவும் இப்ப வேண்டாம்! பெற்றோர் உடல் நலத்துலயும் அக்கறை காட்டுங்க!




கன்னி: *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

பெரும்பாலான கிரகங்கள் உங்களை பலமா சப்போர்ட் பண்ணுதுங்க. தொழில் ரீதில உங்களோட வளர்ச்சி பலரைப் பொறாமைக்கு உள்ளாக்கும்னா பார்த்துக்கங்களேன்! அதே சமயம் வீட்டுலயும் சில நல்ல காரியங்களுக்கு அறிகுறி தெரியும். அநேகமா உங்களுக்குக் கல்யாணம் ஃபிக்ஸ் ஆகலாம்! 'அட சாமி, கல்யாணம் ஆயிடுச்சிங்களே'ங்கறீங்களா? அப்ப, நோ டவுட்! அப்பாவாகப் போறீங்க. எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இது ஆதாயமான காலகட்டம். தொட்டது துலங்கும். சிலருக்கு வெளி நாடுசான்ஸ் அடிக்கலாம். பெண்களுக்கு புதிய பொருள் வாங்கும்

அக்னி சர்மா பக்கம்


செப்டெம்பர் 2 முதல் 8 வரை

யோகம் இருக்கு. சிலர் புருஷர்களை வாங்குவாங்க!




துலாம்: *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

பெரிய வி.ஐ.பிங்களோட தொடர்பு ஏற்பட்ற சான்ஸ் இருக்குங்க. அது உங்க வருங்கால வளர்ச்சிக்கு ரொம்ப உபயோகமா இருக்கும். பொருளாதார ரீதில நல்ல வலுவாவே இருக்கீங்க. சிலருக்கு கார், ஸ்கூட்டர் மாதிரியான சொகுசு சமாசாரங்கள் பரிசாகக் கிடைக்க சான்ஸ் இருக்கு. வீட்டுல ஏதோ மங்களகரமான காரியம் நடக்கப்போவுது. செலவைப் பார்க்காதீங்க. திருமதிகள் விரும்பறதை வாங்கிக் கொடுங்க. கொடுக்கல், வாங்கல் மட்டும் வேணாம். வாரக் கடைசில ஒரு அதிர்ஷ்ட வாய்ப்பு புக்குக் காத்திருங்க.



விருச்சிகம்: *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

குரு ஸ்ட்ராங்கா இருக்கறதால சங்கடங்கள் வந்தாலும் சமாளிப்பீங்க. ஆனாலும் காரியத் தடங்கல்களைத் தவிர்க்க முடியாது. சினிமா, இசைத் துறையைச் சேர்ந்தவங்க, போட்டி, பொறாமைகளைச் சமாளிக்க வேண்டி வரும். பெண்களுக்குப் பிரச்னை இல்லை. அவங்க வெச்சதுதான் சட்டம். சிலருக்கு ட்ரான்ஸ்பர் அல்லது வெளியூர்ப் பயணங்கள் இருக்கலாம். வாரக் கடைசில நண்பர்கள் வருகை, வீட்டுல விசேஷம் ஏதாவது நடக்கலாம். போலீஸ்காரங்க கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும். மாமூலான விஷயங்கள் பிரச்னை உண்டு பண்ணிடலாம், கவனம்!




தனுசு: *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

அகலக்கால் வைக்காதீங்க. ஏன்னா, பெரிசா பிளான் பண்ணிட்டு, ஓர்க் அவுட் ஆகாம போற சான்ஸ் இருக்கு. பேச்சு, செயல் எல்லாத்துலயும் கவனம் முக்கியம். வீண்பழி சுமக்க வேண்டி வரலாம். சிலருக்கு விஷ ஜந்துக்களாலோ, வாகனங்களாலோ ஆபத்து இருக்கலாம். பரணை க்ளீன் பண்றது, டூவீலர்ல 60க்கு மேல ஸ்பீட்ல போறதெல்லாம் வேணாம்! பணவிரயம், உடல் நலக்குறைவு இருக்கும். கூட வேலை பார்க்கறவங்களோட வாக்குவாதம் மட்டும் வெச்சுக்காதீங்க.




மகரம்: *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

நீங்க இப்ப படு கவனமா இருக்கணும். எந்த கிரகமும் சாதகமா இல்லை. யாருக்கும் வாக்குக் கொடுக்காதீங்க. பண விஷயத்துல எச்சரிக்கையா இல்லாட்டா நஷ்டமாயிடும். புதிய தொழில் தொடங்கறது, முதலீடுகள், வீடு வாங்கற யோசனை- எதுவா இருந்தாலும் இப்ப வேணாம். சிலருக்கு மருத்துவச் செலவுகள் எக்கச்சக்கமா வரலாம்! முன்பின் தெரியாதவங்களை நம்பி எந்த விஷயத்துலயும் இறங்காதீங்க.




கும்பம்: *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்களுக்கென்னங்க? குடும்பத்துலயும் சரி; வெளியிலயும் சரி- சப்போர்ட் பண்ண ஒரு கூட்டமே இருக்குது! நினைச்ச காரியம் நடக்கும். உல்லாசமா பொழுது கழியும். எழுத்தாளர்கள், ஓவியர்கள், கம்ப்யூட்டர் ஆசாமிங்களுக்குப் புதிய வாய்ப்புகள் பல வரும்! வெளியூர்ப் பயணங்களும் ஆதாயமாவே இருக்கும். பணப் பிரச்னை இல்லைன்றதே பெரிய நிம்மதியாச்சே! வீட்டு உபயோகப் பொருள்கள் சிலது வாங்குவீங்க. விளையாட்டு வீரர்களா, கேட்கவே வேணாம்- நம்பர் ஒன் நீங்கதான்!



மீனம்: *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

பலர் பாராட்டும்படியா ஒரு காரியம் செஞ்சு முடிப்பீங்க. அதனால உற்சாகம் பெருகி அடுத்த ஒரு மாசத்துக்கு உத்வேகம் ஸ்டாக் வெச்சிப்பீங்க. நண்பர்கள் உங்களுக்குப் பக்கபலமா இருக்காங்க. அதனால, காதல் வலைல வீழ்ந்திருந்தீங்கன்னா, மேற்கொண்டு ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க. முக்கியமான ஒரு பெரிய ஆளோட தொடர்பு இந்த வாரம் ஏற்படும். விருந்து, கேளிக்கை வாய்ப்பு பலமா இருக்கு. ●



கும்ப ராசிக்காரரான ஓவியர் சசிக்கு இந்த வாரம் ஓஹோறா? புதிய வாய்ப்புகள் வந்து கதவைத் தட்டுமாம்.

போட்டிக் கதை 1

வெள்ளைத்தோடு

நிகில் முத்தையா

காலையில் எழுந்தது முதல், செல்வி பம்பரமாய் இயங்கிக் கொண்டிருந்தாள்.

இட்லி வெந்து விட்டது. அடுத்த சுடு ஊற்றினாள். மிக்ஸியில் இருந்து சட்னியை ஊற்றித் தாளித்துக் கொட்டினாள்.

குக்கரை இறக்கியாகி விட்டது. எலுமிச்சை சாதம் கிளறி, கேரட் பொரியல். அவ்வளவுதான்.

கவிதாவும், சின்னபாப்பாவும் டிபன் காரியரில் எடுத்துக் கொள்வார்கள். இரண்டு பேரையும் உலுக்கி உட்கார வைத்தாள்.

"பால்" என்று கத்திய சின்ன பாப்பாவிற்கு பால் கொடுத்து, பின்பக்கம் அனுப்பினாள்.

கவிதாவுக்கு எண்ணெய் வைத்துத் தலை வாரி, பின்னால் போய் குளிக்கச் சொன்னாள்.

சின்ன பாப்பாவிற்கு குளிக்க ஊற்றியதும், "அப்பாவை எழுப்புங்கடி" என்று குரல் கொடுத்து விட்டு, மீண்டும் அடுப்பங்கரையில் பாக்கி இருந்த ஒரு சுற்று வேலையை முடித்தாள்.

பாத்திரம் வந்து கழுவிக்கலாம்.

டிபன் சாப்பிட்டு யூனிஃபார்ம், ஷூ மாட்டி கிளம்பி விட்டார்கள். மூர்த்தியும் கிளம்பியாகி விட்டது.

"இன்றைக்கு அந்த சீட் முடியுது. தோடு எடுக்கப் போறேன்!"

"கூட யார் வராங்க?"

"பக்கத்து வீட்டு பாப்பி அம்மாதான்!"

"ஜாக்கிரதையாப் போய் வாங்க. மேற்கொண்டு பணம் ஆனால் என்ன செய்வே?"

"எங்க அத்தை சின்ன பாப்பாவிற்கு போட்ட மோதிரம் எடுத்துப் போறேன். அதையும் போட்டுடறேன்."

"சரி." கிளம்பி விட்டான்.

அவள் குளிக்கப் போனாள்.

எவ்வளவு நாள் ஆசை! காதுக்குத் தோடும் விசிறி விசிறியாய்த் தொங்கும் தொங்கல்களும்! எவ்வளவு பேர்! எவ்வளவு தோடுகள்!

எனாமல் வைத்து, கல் வைத்து, வெறும் தங்கத்தில் என்று, எத்தனை டிசைன்கள்.

அவள் பி.யு.சி. படிக்கும் போது தொங்கட்டான் பேஷன் ஆரம்பித்தது.

மொழுக்கென்று கொட்டாங்கச்சி போல் தோடும், ஒன்று, இரண்டு, மூன்று என்று டிராப்ஸ்களும்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு மொழுக்கென்று இல்லாமல் கோடு கோடுகளாய் மிஷின் கட்டிங்கில் டிசைன் செய்த தோடும் தொங்கல்களும் வந்தன.

கொஞ்ச நாட்களுக்குத்தான்.

ஒருதலை ராகம் படம் வந்தது. குடை ஜிமிக்கி ஐந்து ரூபாயில் ஆரம்பித்து, ஒரு பவுன் வரை விதம்விதமாய் ஜிமிக்கிகள் ஆடின.

பிறகு கிளிக்கூடு ஜிமிக்கி.

செல்வி 20, 30 ரூபாயில் கவரிங் இமிடேஷனில் போட்டுக் கொண்டதோடு சரி.

கிளிக்கூடு ஜிமிக்கி பேஷன் வந்த போதுதான் கல்யாணம் நிச்சயமாயிற்று.

அம்மாவின் இரட்டைவடம். அப்பா மூக்கி முனகி கைவளையல் ஒரு ஜோடி செய்தார். அத்தை - பிள்ளைகள் இல்லாதவர் - வெள்ளைக் கல் தோடுகளை பாலீஷ் போட்டுக் கொடுத்தார். அதோடு சரி. அதை செவ்வாய், வெள்ளி தலைக்குக் குளிக்கும் போது கழற்றி விட்டு, பிறகு போட வேண்டும்.

அவளும் இந்த எட்டு வருடங்களாகத் தோடு வாங்க வேண்டும் என்றுதான் பிரயத்தனப்பட்டாள்.

ம்ஹூம். முடியவில்லை.

கல்யாணம் ஆன கையோடு அங்கே இங்கே என்று தடவிச் சேர்த்து வைத்தால் ஐநூறு கூட தாண்டாது. ஏதாவது செலவு வரும்.

முதலில் குக்கர். பிறகு மிக்ஸி.

இவைகளுக்கு முன் தோடு அநாவசிய மாய்ப் போனது.

பிறகு கவிதா, சின்ன பாப்பா. மாறி மாறி மருந்து, டாக்டர்தான்.

கடன் வாங்காமல் ஓட்டிய மாதம் இல்லவே இல்லை என்கிற போது சேமிப்பும் தோடும் மாயமானது.

பெரியம்மா பெண் கல்யாணத்தில் செல்வி அக்காவின் தோடு தொங்கட்டான்களைப் போட்ட போது எல்லோரும் சொல்லி வைத்தாற்போல் 'நன்றாயிருக்கிறது' என்றார்கள்.

அதிலிருந்துதான் ஆசை ஆரம்பமானது. போன வருடம்தான் பாப்பி அம்மா நகைச் சீட்டு கட்டச் சொன்னார்கள்.

'நூறு ரூபாயா? கஷ்டமாச்சே?'


'உனக்கு எம்ப்ளாய்மண்ட் ஆபீஸிலிருந்து பணம் வருதில்லையா? கூட 25 ரூபாய்தானே?'

துணிந்து கட்டினாள்.

ஆயிற்று. இன்னும் மூன்று சீட்டு பாக்கியிருக்கும் போது விழுந்து விட்டது.

செல்விக்கு சந்தோஷம். மோதிரத்தையும் போட்டு எடுக்க வேண்டியதுதான்.

கிளம்பி விட்





"என் மனைவி செய்த மைசூர்பாகை அவளுக்குத் தெரியாமல் அதைக் குப்பைத் தொட்டியில் போட்டுட்டேன்."
"அதுக்கு என்ன இப்போ?"
"கனவில் குப்பைத் தொட்டி வந்து இது உனக்கே நியாயமா, தர்மமான்னு கேட்டு மிரட்டுது...!"
– அரவக்குறிச்சிப்பட்டி எம். அசோக்ராஜா

டார்கள்.

"சிட்டு எடுத்துக்கிட்டயா?"

"குழந்தை மோதிரத்தையும் போட்டுடப் போறேன், பாப்பி அம்மா!"

"பரவாயில்லை. குழந்தைக்கு மோதிரம் எப்போ போடறோம். வேஸ்ட்தான்."

பஸ் ஏறினார்கள்.

கடை வீதியில் கும்பல் குறைவுதான். நகைக் கடையில் பரவாயில்லை. தோடு, மூக்குத்தி பக்கம் கும்பல் இல்லை.

உட்கார்ந்து நிதானமாய்ப் பார்த்தார்கள். அரைவட்ட விசிறியாய்த் தொங்கும் எனாமல் பதித்த தொங்கட்டான்களையும் தோடையும் எடுத்து நிறுத்தினார்கள். மோதிரம் கூடக் கொடுத்தான்.

கடை சில் பார்த்து உதட்டைப் பிதுக்கினான் கடைச் சிப்பந்தி.

"எங்க கடை நகை இல்லை போலிருக்கே?"

"ஆமாம்."

ரொம்ப பிகு செய்து, பிறகு எடுத்துக் கொண்டான்.

நல்லவேளை கையிலிருந்து பணம் கொடுக்க வேண்டியிருக்கவில்லை.

"போட்டுக்க செல்வி."

"பரவாயில்லை பாப்பி அம்மா. வீட்டில் போய்ப் போட்டுக்கறேன்."

பக்கத்திலிருந்த காப்பிக் கடையில் காப்பி குடித்தார்கள்.

பாப்பி அம்மாவிற்கு பாப்கார்ன், குங்குமம், மஞ்சள், 'ரப்பர் பேண்ட்' என்று மலை வாசல் கடைகளைச் சுற்றி வந்தார்கள்.

திரும்ப, மத்தியானம் ஆகி விட்டது. வந்தவுடன் சுவாமியிடம் வைத்து எடுத்து போட்டுக் கொண்டாள்.

பாப்பி அம்மா, "நல்லாயிருக்கிறது செல்வி!" என்றாள்.

எல்லா வேலைகளும் முடிந்ததும் கண்ணாடியிடம் உட்கார்ந்தாள்.

அப்பா எவ்வளவு நாள் ஆசை? மூன்று வருடம் முன்பு கல்யாண வீட்டில் ஆரம்பித்தது. ஆனால் அன்று மிகவும் நன்றாக இருந்தாற்போலிருந்தது.

இன்று அந்த அளவு அழகாய்த் தெரியவில்லை. தோடு சின்னதோ? தெரியவில்லை.

கவிதா, சின்னபாப்பா வந்து விட்டார்கள்.

தோட்டை தொட்டுத் தொட்டுப் பார்த்தார்கள்.

"எனக்குமா?" என்றது சின்னது.

"நாளைக்கு வேறே வாங்கலாம்" என்றாள்.

மூர்த்தியும் வந்தாயிற்று.

"நல்லாயிருக்கு செல்வி. கையிலிருந்து பணம் போட்டாயா?"

"இல்லைங்க."

திரும்பவும் கண்ணாடி பார்த்தாள். என்ன குறை? தோடு ஏந்தலாக இல்லாமல் அமுங்கி இருக்கிறதா?

கவிதா, "சொல்லிக் குடும்மா" என்றது.

"என்னடி?"

"பொயம்மா. கதையாச் சொல்லும்மா."

"ஒரு ஊரில் அழகான ராணி இருந்தாங்களாம்."

சின்ன பாப்பா வாயில் விரலை போட்டுக் கொண்டு உட்கார்ந்தது. மடியில் உட்கார வைத்துக் கொண்டாள்.

"அந்த அழகான ராணி ஒரு போட்டி வைத்தாளாம். 'என்னை விட அழகா யாரும் இருந்தால் அவர்களுக்குப் பரிசு கொடுப்பேன். நானே அவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிற அளவிற்கு அழகாயிருக்கணும்' என்றாளாம்.

"நிறையப் பேர் நிறைய ஊரிலிருந்து வந்தார்களாம். ராணிக்கு யாரைப் பார்த்தும் பொறாமை வரலையாம். ராணிக்கு எரிச்சலாகிப் போயிட்டதாம். அவங்க உள்ளே தன் ரூமிற்குப் போன போது, அவங்க குட்டிப் பொண்ணு அவங்களோட நகையெல்லாம் போட்டுப் பார்த்துக்கிட்டு கண்ணாடி முன்னால் நின்றதாம். ராணிக்கு ஆச்சரியமா போயிருச்சாம். ஏன்னா, அவங்க பொண்ணு

எப்பவும் விட ரொம்ப அழகா - ராணி பொறாமைப்படற அளவு இருந்ததாம். பொண்ணுதான் அந்தப் பரிசுக்குரிய ஆள் என்று நினைச்சாங்களாம்."

"Queen's rivalன்னா என்னம்மா?"

"ராணியின் எதிரி - 'போட்டியாள்'னு அர்த்தம். சரி படி."

சின்ன பாப்பா தூங்கியிருந்தது.

எடுத்து பாயில் போட்டாள்.

கண்ணாடியைப் பார்த்தபோது புரிந்து விட்டது அவளுக்கு.

கவிதாவைக் கூப்பிட்டு தோடுகளைப் போட்டு விட்டாள். "பாப்பி அம்மாகிட்டே யும், நம்ம அப்பாகிட்டேயும் காண்பிச்சுட்டு வா."

பாப்பி அம்மா கூடவே வந்தார்கள்.

"செல்வி, ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கு. உன்னையும் விட கவிதாக் குட்டிக்குத்தான் நல்லாயிருக்கு."

"அதான் போட்டு விட்டேன் அம்மா!"

மூர்த்தியிடம் காண்பித்தான். "ஏன் நீ கழற்றி விட்டாய்? ஆசையாய் வாங்கி னாயே?"

"என்னை விட அதுக்குத்தான் நல்லா யிருக்கு!"

"பரவாயில்லை போட்டுக்க."

"இல்லைங்க. நான் போட்டுக்க நினைச் சப்போ மூணு வயசு கம்மியா இருந்தது. இப்போ அதிகமாயிட்டது. கவிதா, சின்ன பாப்பாதான் போடலாம்."

வருத்தத்திலும் சந்தோஷமாய் - பெருமித மாய்ச் சொல்லிவிட்டு உள்ளே சென் றாள். ●

மாமியார் கிணறு; மருமகள் கிணறு!

'மாமியார் கிணறு; மருமகள் கிணறு' என்ற வித்தியாசமான பெயருடன் ஸ்வஸ்திக் வடிவில் மிகப் பெரிய அழகிய கிணறு. சுமார் ஐம்பது அடி ஆழம், ஐம்பது அடி நீள, அகலத்தில் உள்ள ஸ்வஸ்திக் கிணறு. முற்றிலும் கருங்கல்லால் கட்டப்பட் டுள்ளது.

மாமியார் கிணறு, மருமகள் கிணறு என்பதற்குப் பெயர்க் காரணம் என்ன?

''ஒரு படிக்கட்டில் மாமியார் இறங்கிக் குளித்தால் மற்றொரு படிக் கட்டில் மருமகள் இறங்கிக் குளிப் பாளாம். ஆனாலும் ஒருவர் குளிப்பது மற்றவருக்குத் தெரியாதாம். அதனால் தான் இப்படி பெயர் வந்தது!'' என்றார் ஒரு முதியவர்.

மாமியார் மருமகளை ஏன் சம்பந் தப்படுத்திச் சொல்கிறார்கள் என்றபோது, ''பெரும்பாலும் மாமியார், மருமகள் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள் இல்லையா? அதனால்தான்!'' என்றனர்.

வேடிக்கையாக இப்படி கூறப்பட்டாலும் இதைப் போன்ற கிணறு தமிழ்நாட்டில் வேறெங் கும் இல்லை. எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்மன் என்ற பல்லவ மன்னன் ஆட்சிக் காலத்தில் கம்பன் அரையன் என்ற குறுநில மன்னனால் கட்டப்பட்டதாம் இது.

இக்கிணற்றின் வெளிப்புறத்தில் 'இந்த உலகம் நிலையில்லாதது. ஆகவே காதல் களியாட்டங் களில் ஈடுபட்டுக் கொண்டிராமல் முதுமை வந்து உன்னை அடையும் முன்னர் தர்ம காரியங்கள் செய்து கொண்டிரு' என்று கல்வெட்டில் பொறிக் கப்பட்டுள்ளது!

தற்சமயம் இக்கிணற்றில் சுத்தமாகத் தண்ணீர் இல்லை. மழைக் காலத்தில் மேல் விளிம்பு வரை நிரம்பியிருக்கும் என்கிறார்கள். கல்கட்டடமாக



இருந்தாலும் கிணற்றின் உட்புறத்தில் ஆங்காங்கே காரை பெயர்ந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சிதிலமடைந்து வருகிறது இக்கிணறு.

திருச்சி மண்ணச்சநல்லூர் அருகிலுள்ள திருவெள்ளரை என்னும் கிராமத்திலுள்ள இக்கிணற்றைச் சுற்றிலும் முள்வேலி அமைத்து பாதுகாத்து வரும் தொல்பொருள் ஆய்வுத்துறை, இந்த விஷயத்திலும் கொஞ்சம் கவனம் செலுத்தினால் நல்லது.

தகவல்: ஷ்யாம் கண்ணன்

படம் : ஸ்ரீராம்


6

"அந்தப் பொண்ணு உங்ககிட்டே துப்பாக்கி கேட்டாளா, என்ன சொல்றீங்க டாக்டர்?"

"அய்யய்யோ! எங்கிட்ட துப்பாக்கி கேக்கலை, துப்பாக்கி எங்க கிடைக்கும்னு கேட்டா."

"சொன்னீங்களா?"

"சொன்னேன். ப்ரிகேடு ரோடில பெங்களூர் ஆர்மரி கடைல கிடைக்கும்னு."



"டாக்டர் நாங்க போய் வரோம். அதுக்கு முந்தி உங்க குடும்பத்தைப் பத்தித் தெரிஞ்சுக்கலாமா?"

"மனைவி, மகன், உடல் ஊனமான ஒரு மகள். என்னை அரஸ்ட் பண்ணுவீங்களா? யோசிச்சுப் பாருங்க. ஆனந்தை கொல்றதால எனக்கு என்ன லாபம் இருக்க முடியும்? பணமா காசா..."

"பதவி."

"அரஸ்ட் பண்றதா இருந்தா ஒரு டூத் பிரஷ் எடுத்து வெச்சுக்கவாவது அனுமதிப்பீங்களா?"

ப்ரபாகர்ராவ் அவருடைய கேலியை பொருட்படுத்தாமல், "அரஸ்ட் பண்ணுவோம்னு எப்படி நினைக்கிறீங்க?"

"நீங்க கேக்கற கேள்விகள் அப்படி இருக்கே."

"பாருங்க டாக்டர். போலீசைப் பொறுத்தவரையில் எல்லாரும் சந்தேகத்துக்குரியவர்கள்."

ஒரு சிப்பந்தி தேனீர்க் கோப்பைகளைக் கொண்டு வந்து வைக்க, "இந்த ஆசாமி உட்பட" என்றார்.

சங்கர், "உங்க வீட்டு அட்ரஸ் கொடுக்கறீங்களா?"

"தாராளமா."

சோமசுந்தரின் அறையை விட்டு வெளியே வரும்போது ப்ரபார்கர்ராவ் தன் அசிஸ்டண்ட் சங்கரைப் பரிசோதித்தார்.

"என்ன நினைக்கிறே? உன் போலீஸ் மூளை என்ன சொல்லுது?"

"இவன்தான் ஸார்! அரஸ்ட் பண்ணிட்டு விளக்கடியில் நாலு கேள்வி கேட்டா ஒப்புத்துக்கிடுவான்."

"எனக்கென்னவோ இவன் செய்திருக்க மாட்டான்னு தோணுது."

"என்ன ஸார் சோமுங்கற பேரு, அவங்களுக்குள்ள சண்டை, போட்டி, பயமுறுத்தல். வேற என்ன வேணும்?"

"காரணம் பத்தாது சங்கர். மேலும் அவருடைய பாடி லாங்வேஜ் பாத்தில்ல. ஒரு பயம்தான் இருந்ததே ஒழிய குற்ற உணர்ச்சி தெரியலை."

"அப்ப இந்தாளைக் கைது பண்ண வேண்டாமா?"

"வேண்டாம். முதல்ல இவருக்கு சோமுன்னு சுருக்கப் பெயர் உண்டான்னு விசாரிக்கணும். இவரை கண்காணிப்பில வெச்சுக்கலாம். வீட்டை விட்டு, நகரத்தை விட்டு எங்கயாவது கிளம்பறாரான்னு."

"நாட்டை விட்டுப் போய்ட்டார்னா?"

ஆர்யபட்டா

"போக மாட்டார். அதுக்குத்தான் குடும்பத்தை விசாரிச்சேன்."

சுஜாதா

ப்ரிகேடு ரோடில் இரைச்சலாக இளைஞர்கள் ஆடிக் கொண்டிருந்த வீடியோ பார்லரின் அருகில் இருந்தது, அந்தத் துப்பாக்கிக் கடை. பெரும்பாலும் காலியாக இருந்த அலமாரிகள். இருட்டு கொஞ்சம். 1938 வாசனை. கறுப்புக் கோட்டும் சின்ன முடிச்சுக் கொண்ட ஒல்லியான டையும் அணிந்த ஒரு கிழவர் ஏற்கெனவே சுருங்கியிருந்த நெற்றியை இன்னமும் சுருக்கிக் கொண்டு, "எஸ்?" என்றார். லேசான பார்கின்ஸன்.

சங்கர், "வி ஆர் ஃப்ரம் தி போலீஸ். ஒரு துப்பாக்கியைப் பற்றி விசாரிக்க வந்தோம்."

"இப்போது நாங்கள் துப்பாக்கி விற்பதில்லை. ப்ரிகேடு ரோடில் செருப்பு விற்கும், கேக் விற்கும், துணிமணி சாமான்கள் விற்கும். துப்பாக்கி விற்காது. மேலும் லைசென்ஸ் கெடுபிடிகள் அதிகம். ஏதோ கார்ட்ரிட்ஜ் பெட்டிகள் கார்டைட் போன்றவைதான் விற்கிறோம். அதிக லாபமில்லை. இழுத்து மூடப் போகிறோம். உங்களுக்கு என்ன துப்பாக்கி வேண்டும்?"

"நாங்கள் துப்பாக்கி வாங்க வரவில்லை" என்றார் சங்கர்.

"பின்?"

"சமீபத்தில் நீங்கள் ஒரு வால்த்தர் பாயிண்ட் த்ரீ எய்ட் விற்றீர்களா?"

"விற்றிருக்கலாம்."

"எப்போது யாருக்கு விற்றீர்கள் என்று பதிவேட்டில் பார்த்துச் சொல்ல முடியுமா?"

"அதில் எனக்கு ஏதும் சிக்கவில்லையே?"


"இருக்காது. அப்படி இருந்தாலும் இந்த விவரத்தை போலீசுக்கு தருவதில் நீங்கள் தயங்கக் கூடாது."

"என்ன விஷயம்?"

"ஒரு கொலைக் குற்றத்தை விசாரித்து வருகிறோம்."

கிழவரின் கைகள் இன்னும் லொடலொடவென்று ஆட ஆரம்பித்தன.

"முதலாளி வந்து விடட்டுமே" என்றார். போனை எடுத்து நம்பரை



சுற்றி குஜராத்தி போன்ற மொழியில் ஏதோ பேசினார்.

போனை வைத்து விட்டு உள்ளே மெல்ல மெல்ல நடந்து, ஒரு பெரிய பதிவேட்டை எடுத்துக் கொண்டு வந்தார்.

"ஒரு வருஷம் நாங்கள் விற்ற அத்தனை கைத் துப்பாக்கிகளின் விவரம் இருக்கிறது. என்ன மாடல்?"

"வால்த்தர்."

"மொத்தம் மூன்று விற்றிருக்கிறோம்."

"சோனாலி என்கிற பெயர் இருக்கிறதா?"

அவர் நீண்ட விரலில் எச்சில் தொட்டுப் பக்கம் பக்கமாகப் புரட்டி, அரைக் கண்ணாடி மாட்டிக் கொண்டு தேடி... "இருக்கிறது" என்றார்.

"விலாசம் இருக்கிறதா?"

"விலாசம் கொடுக்காமல் விற்க மாட்டோம். ஆனால் உண்மையான விலாசம் என்று உத்தரவாதமில்லை."

சோனாலி அன்று நாட்டிய வகுப்பை ரத்து செய்து விட்டாள்.

"என்ன மிஸ், உடம்பு சரியில்லையா?" என்று கவிதா கேட்டாள்.

"இல்லை கவிதா. மூடு சரியில்லை." மேசை மேல் 'பிரபல விஞ்ஞானி மரணம்' என்று 'சஞ்சய் வாணி' அலறியது. அதன் மேல் சலங்கை வைத்திருந்தது. சுவரில் போட்டோவில் ஹெக்டே இளம் சோனாவிக்கு பரிசளித்துக் கொண்டிருந்தார். அருகே மற்றொரு போட்டோ. மேக்கே தாட்டு பிக்னிக் போயிருந்தபோது அவனருகில் ஒட்டிக் கொண்டு எடுத்தது. ஆனந்த்!

சோனாலி பெருமூச்சு விட்டாள். இறந்தவன் முகம் திரும்பத் திரும்ப மனத்தில் ததும்பியது.

அந்த போட்டோவை எடுத்து அலமாரியில் கவிழ்த்து வைத்தாள். எண்ணத் தொடர்கள் பின்னிப் பிணைந்தன. ஆனந்தை முதலில் எப்போது சந்தித்தேன்?

"நேம்?"

"சோனாலி."

"ஆர் யு எ மராட்டி?"

"கொங்கணி."

"கன்னடா தெரியுமா?"

"சொல்பா."

அவளை மேலிருந்து கீழாகக் கண்ணால் வருடிவிட்டு, "வேறு என்ன தெரியும்? இந்த மாதிரி பகட்டாக டிரஸ் அணிந்து கொண்டு இண்டர்வ்யூவுக்கு வருவதைத் தவிர?"

"இதற்காக மன்னிப்புக் கேட்கத் தெரியும்."

"ஸ்மார்ட்."

"அப்படியென்றால் டாக்டர் ராஜ் நாராயண், இவளை உங்கள் லாபில் சேர்த்துக் கொள்கிறீர்களா?"

"வேண்டாம். அழகான பெண். நைட்ரிக் அமிலம் எங்காவது முகத்தில் பட்டு விட்டால் குற்றஉணர்ச்சி என்னைக் கொன்று விடும். ஆனந்த் உன் லாப்தான் சரி."

ஆனந்தின் லாப் அறையில் சோனாலி, பாரதியை முதன் முதல் அழைத்துச் சென்றது ஞாபகம் வந்தது. அதுதான் முதல் தப்பு. நான் பாரதியை அறிமுகப்படுத்தியிருக்கவே கூடாது. என் தலையிலே மண் அள்ளிப் போட்டுக் கொண்டது போல ஆகி விட்டது!

ஆனந்த் ஒரு பீக்கரில் வயலட் நிற திரவத்தைக் காட்டி, "ஒரு கலர் வண்ணத்துக்கு 'வேல்யு'ன்னு உண்டு. அதனுடைய காம்ப்ளிமெண்டரி கலர் பின்னணியில் இருந்தா அதன் முழு வேல்யுவும்..." என்று கண் சிமிட்டியபோது கூட அவன் கவனம் சோனாலி மேல்தான் இருந்திருக்கிறது!

"இந்தப் பொண்ணு யாரு?" அப்போதுதான் அவளைக் கவனித்திருக்கிறான்.

சோனு, "பாரதி. புதுசா லாப் அசிஸ்டெண்ட்டாக சேர்ந்திருக்கா" என்றாள்.

ஆனந்த் நிமிர்ந்து பார்க்காமல் 'ஹலோ பாரதி' என்ற போது பாரதி சங்கடப்பட்டு சோனுவைப் பார்த்தாள். சோனு, "ப்ளூவும் யெல்லோவும் காம்ப்ளிமெண்டரியா ஸார்" என்று கேட்டுக் கொண்டே ஆனந்தை வசீகரமாகப் பார்த்தது தெளிவாக நினைவிருந்தது.

ஆனந்த், "இல்லை. ஆனா இந்தப் பொண்ணு போட்டிருக்கே நீல கடிதார் அதுக்கு இவ ஸ்கின் கலர் காம்ப்ளிமெண்ட்ரி ஆரஞ்சு."

"உங்க டிரஸ்ஸும் மாட்சிங்காத்தான் இருக்கு."

ஆனந்த், "ஐஸ் வெக்கறா பாரு. ஆனா சோனு இனிமே இந்த மாதிரி டிரஸ் போட்டுக்கிட்டு வராதே. ரொம்பக் கவனம் கலைக்கிறது. போய் ரெண்டு பொண்ணுங்களும் வேலையைப் பாருங்க."

"நீங்க கொஞ்சம் பாரதியை நிமிர்ந்து பார்க்கலாம்" என்று ஏன் சொன்னேன்? சே முட்டாள் நான்.

ஆனந்த் நிமிர்ந்து, "நோ நாட் எகயன். எனக்குப் பொம்பளை அசிஸ்டண்ட் வேண்



வைரம் ஜொலிக்கிறது வாழ்க்கை இனிக்கிறது

நாங்களும் ஸ்ரீராம் குடும்பத்தில் 15 வருடங்களாக உறுப்பினராக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள மிகவும் பெருமைப் படுகிறேன். வாழ்க்கையின் நீரோட்டத்தில் எத்தனையோ முறை சூழலில் சிக்கித் தவித்த பொழுது ஸ்ரீராமின் உதவிக்கரம் பற்றிக் கரையேறிய அனுபவங்கள் பல உண்டு. மகளின் திருமணம், சீமந்தம், எங்கள் சஷ்டி அப்த பூர்த்தி என எத்தனையோ தருணங்கள்.

ஆனால் மனம் மகிழ்ந்து ஸ்ரீராமை வாழ்த்திய தருணம் போன வருடம் என் மகனின் வெளி நாட்டுப் பயணத்தின் போதுதான். என் மகன் ஒரு தனியார் கம்பெனியில் இஞ்சினியராக வேலை பார்த்துக் கொண்டு இருந்தான். அவன் மனைவி கம்ப்யூட்டர் இஞ்சினியர். ஆதலால் அவளுக்கு பலமுறை வெளிநாட்டிலிருந்து வேலை வாய்ப்புகள் வந்து கொண்டு இருந்தன.

என் மகன் கம்ப்யூட்டர் லைனில் இல்லாததால் அவனுக்கு வேலை வாய்ப்புகள் குறைவாகவே இருந்தது. எட்டு வருட இடைவெளிக்குப் பிறகு அவனுக்கு படிப்பதற்காக வெளி நாடு செல்ல இஷ்டமில்லை. பத்து லட்ச ரூபாயில் ஒருபிளாட் வேறு கட்டிக் கொண்டிருந்தான். இந்த நிலையில் மனைவிக்கு அமெரிக்காவில் இருந்து ஒரு நல்ல வேலை வாய்ப்பு வந்தவுடன் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் அவளை அமெரிக்காவிற்கு அனுப்பிவிட்டான்.

அவனுடைய அமெரிக்க நண்பர்கள் எல்லோரும் Oracle Finance படித்து விட்டு வந்தால் உடனே வேலை கிடைக்கும் என்று அபிப்ராயம் தெரிவித்தனர். அந்த ஒரு மாத கோர்ஸ் பண்ண 8500 ரூபாய் தேவைப்பட்டது. மனைவியை அனுப்ப மேற்கொண்ட செலவு, முடியும் தருவாயில் இருக்கும் ப்ளாட் என்று கையில் பணமே இல்லாத நிலை.

ஒரு வாரமாக ஒரே டென்ஷன். பிரச்சனையை சமாளிக்க வழி தேடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது ப்ளாட்-ன் கடைசி பேமெண்ட்டிற்காகக் கட்டிக் கொண்டிருந்த லட்ச ரூபாய் சீட்டை எடுத்து கம்ப்யூட்டர் கோர்ஸில் சேர்ந்து ஒரு மாதம் படித்து முடித்தான். பின்பு அடுத்த மாதமே அமெரிக்கா போகும் வாய்ப்பும் அவனுக்கு அமைந்தது.

போய் இரண்டு மாதத்திற்குள் ப்ளாட்டிற்கு வேண்டிய லட்ச ரூபாயை அனுப்பி விட்டான். அன்று அவன் சீட்டை எடுத்து படிப்பதற்காகப் பணம் கட்டிய பொழுது நான் மிகவும் வருத்தப்பட்டேன். ஆனால் இன்று அவனுடைய தைரியத்தை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறேன்.

என் மகன் இன்று அமெரிக்காவில் இருக்கிறான். அதற்கு ஸ்ரீராமின் பங்கு முக்கியமானது என்றால் அது மிகையாகாது.

திரு. ரங்கா சுந்தர்ராஜன்
சென்னை-18.

டாம்னு அட்மின்ல எத்தனை தடவை சொல்லிட்டேன்?"

"ஏன் ஸார்?"

"நீ ஒருத்தி போதாதா? இது என்ன ட்ரஸ்? வந்திருக்கறது ஆபீசா, ஃபாஷன் ஷோவா?" அப்போது கூட கவனம் என் மேல்தான்.

சோனாலி தன் மார்பை சங்கடமாகப் பார்த்துக் கொண்டாள். எப்போது கவனம் விலகியது?

ஆனந்த் பாரதியைப் பார்த்து, "உனக்கு ஒண்ணு ரெண்டு எண்ணத் தெரியுமா?" என்றான்.

பாரதி ஆச்சர்யத்துடன், "தெரியும்" என்றாள்.

"இந்த ரிப்போர்ட் காப்பிகளை பத்துப் பத்து பக்கமா அடுக்கி வை. அதான் உனக்கு இன்னிக்கு வேலை. அப்புறம் முடிஞ்சா இதை டைப் பண்ணு."

அதுவரை ஆனந்த் அவளை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. பாரதிதான் அந்த ரிப்போர்ட்களை அடுக்கும் போது எல்லாம் தெரிந்தவள் போல அதைப் படித்து விட்டு, "ஸார் 'டாக்கியான்ஸ்'கறது ஒளியை விட வேகமா போகுமா? அது எப்படி சாத்தியம் ஐன்ஸ்டைன் தியரிப்படி?"

இங்கேயே நான் கட் பண்ணியிருக்க வேண்டும். என் மூக்கடியிலேயே போட்டிப் பெண் வந்து விட்டாள் என்பதை அறியாத பேதை நான். அன்றுதான் ஆரம்பித்தது வம்பு. பொறாமைத் தீ!

ஆனந்த் அவளை ஆச்சரியத்துடன் பார்த்து, "உனக்கு பிஸிக்ஸ் தெரியுமா?"

"நான் எம்.எஸ்ஸி., சார்."

"லாப் அசிஸ்டெண்ட்டா சேர்ந்தியா?"

பாரதி தன் கண்களை உருட்டி, "எனக்கு ரிஸர்ச்ல ஆர்வம் உண்டு. உங்க ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாம் படிச்சிருக்கேன். காம்ப்ளிமெண்ட்ரி கலர்ஸ் பற்றி நீங்க எழுதின புத்தகம் ஒரு லேண்ட்மார்க்."

ஆனந்த், "சோனு திஸ் கர்ள் இம்ப்ரஸஸ் மி."

சோனு, "ஆனந்த் இன்னிக்கு சாயங் காலம் என் பர்த்டேக்கு வீட்டுக்கு வர்றீங்க. ப்ராமிஸ் பண்ணியிருக்கீங்க ஞாபகப்படுத் தறேன்."

"பாட்டில் உண்டா?"

"உண்டு."

ஆனந்த், "நீயும் வரியா?" என்று பாரதி யைக் கேட்க, அவள் "இல்லை ஸார். வேலை இருக்கு. உங்க ரிப்போர்ட்டை டைப் பண்ணணும்."



''மாப்பிள்ளையோட
அம்மாவுக்குப் பெண்ணைப்
புடிச்சுட்டுது போல!''
''எதை வச்சி சொல்றீங்க?''
''பெண் குனிந்து நமஸ்கரிச்சப்ப
முகவாய்க்கட்டைய தோள்ல இடிச்சு
இதுக்கு ஒண்ணும் குறைச்சல்
இல்லைனு சொன்னாளே!''
– அம்பை தேவா

"கடமை உணர்ச்சின்னா இது! நீயும் இருக்கியே ஒரு வருஷத்துக்கு எத்தனை முறை பர்த்டே கொண்டாடுவே?"

"ரெண்டு முறைதான் ஸார். இங்கிலீஷ் தேதி; தமிழ் தேதி."

ஆனந்த், "ஒண்ணு பண்ணு. வீட்டுக்குப் போறப்ப உனக்குப் பிடிச்ச பரிசுப் பொருளை நீயே வாங்கிக்க. அதில் ஃப்ரம் ஆனந்த் பெஸ்ட் விஷஸ்னு நீயே எழுதிக்க. எனக்கு டயம் இல்லை!"

அவனை அதட்டலாகப் பார்த்தபோது, அவன் சிரிப்பு ஒளிவுமறைவில்லாமல்தான் இருந்தது. அதில்தான் ஏமாந்து விட்டாள்.

பாரதியை அவன் விரும்புவான் என்று எதிர்பார்க்கவே இல்லை. அழைப்பு மணி ஒலிக்க, எண்ணங்கள் கலைந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு போய்க் கதவைத் திறந்தாள்.

போலீஸ்!

(தொடரும்)

விருதுநகரிலிருந்து திருமங்கலம் செல்லும் வழியில் "ஆவல் சூரன்பட்டி" எனும் ஒரு கிராமத்தில் பெட்டிக்கடை வைத்துப் பிழைத்து வருகிறார் அருளப்பன் (80 வயது) எனும் பெரியவர். இவரின் மனைவி பெயர் ஏசம்மாள் (63 வயது). இத் தம்பதியினருக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஐந்து மகள்கள். இரு குழந்தைகளுக்கு இந்துப் பெயரும், இரு குழந்தைகளுக்கு கிறித்துவப் பெயரும், மூன்று குழந்தைகளுக்கு முஸ்லீம் பெயரும் வைத்திருக்கிறார். இதைவிட ஆச்சரியம் என்னவெனில், அவர்கள் எல்லோருக்குமே மதம் மாறித் திருமணமும் செய்து வைத்திருக்கிறார். (அருள்ராஜ் - லட்சுமி, அப்துல்மாலிக் - இந்திரா, ஆயிஷா - தேவப்பிரியம், அமீனா - பொன்னையா, அருலீசா - மாணிக்கம், அருள்தேவி - சுப்பையா). கடைசி மகள் அமுதாவுக்கு இன்னும் மணமாகவில்லை.

இத்தகைய சமத்துவக் கொள்கையைத் தம் குழந்தைகளோடு நிறுத்தி விடாமல் தேவஇரக்கம், அகிலா, ராஜகுரு, சோனியாகாந்தி, சந்திரலேகா, கருப்பசாமி, மனீஷா, ராஜீவ்காந்தி, மேக்னா, ஸ்டெல்லா ராணி என பேரன் பேத்திகளிடையேயும் தொடரச் செய்துள்ளார்.

இவற்றையெல்லாம் கேட்டு வியப்படைந்த நாம், "ஏன் இவ்வாறு மதம்மாறிப் பெயர் வைத்தீர்கள்?" எனக் கேட்டோம்.

1928-இல் 5-ஆம் வகுப்பு பயின்று கொண்டு இருந்த போது தீண்டாமைக் கொடுமையால், தாம் மிகவும் பாதிக்கப்பட்டதாக வருத்தத்தோடு கூறியவர், தொடர்ந்து,

"குடியானவர்களுக்கு பெஞ்சு; நான் மட்டும் தரையிலே ஒக்காரணுமாம். தண்ணிய கையேந்திக் குடிக்கணுமாம். இதெல்லாம் என்னால பொறுக்க முடியலே. அன்னைக்கே நா முடிவு பண்ணிட்டேன். 'இந்தக் கேடு கெட்ட சாதி எனக்குத் தேவை இல்லேனு'! பிற்பாடு நான் கிறித்துவனா மாறிட்டேன்" என்றார்.

"சரி... முஸ்லீம் பெயர்களையும் வைக்கக் காரணம்?" என்று கேட்டோம்.

"1946-இல் வேலை தேடி நான் கல்கத்தா சென்றேன். அங்கு அப்துல் மாலிக் என்பவரிடம் வேலை பார்த்தேன். முஸ்லீம் கொள்கைகள் என்னைக் கவர்ந்ததால், நடை, உடை பாவனைகளில் முஸ்லீம்களைப் பின்பற்றினேன். 1952-இல் கட்டாக்கில் புயல் வந்ததால் தாயகம் திரும்பி, என் முதலாளியின் நினைவாக எனது இரண்டாவது மகனுக்கும், அடுத்த மூன்று மகள்களுக்கும் முஸ்லீம் பெயர்களை வைத்தேன்!"

சமத்துவக் குடும்பத்துக்குச்

"இந்த மாதிரியான மதமாற்றத்தினால் பின்விளைவுகள் ஏற்படுமே. எப்படிச் சமாளித்தீர்கள்?" என்று கேட்டபோது, பெரியவர் உணர்ச்சிவசப்பட்டு பதில் கூறினார்.

"சாதிப்பாகுபாடோ மதப்பாகுபாடோ இல்லாம மக்கள் சமத்துவமாக வாழணும்னு நினைச்சு நா செஞ்சதை அரசாங்கம் புரிஞ்சிக்கலை. பிள்ளைகள ஸ்கூல்ல சேக்கும் போது, எந்த மதம்னு திட்டமா சொல்லச் சொன்னாங்க; மதம் மாறி இருக்கறதால உதவித் தொகை தரமாட்டோம் விரட்டியடிச்சுட்டாங்க; இதக் காரணமா வச்சு என்னோட ரெண்டாவது மகனுக்கு வேலை தரமாட்டேன்னு சொல்லிட்டாங்க. எனக்கு லோன் தர மறுத்தாங்க. இதனால எனக்கும், என்னோட மகனுக்கும் சண்டை வந்துச்சு. 'உங்களால இப்போ நாங்க



* அருளப்பன் தமது மனைவியுடன்...

சமத்துவபுரம் கிடைக்குமா?

சிரழியறோம்'னு சொல்லி சண்டை போட்டான். ஐந்து வருசமா என்கிட்ட முகம் கொடுத்துப் பேசல" என்று கூறிக் கண்கலங்கியவர், பிறகு சற்று ஆறுதலடைந்து விட்டு, "என்னோட கடைசி மகளுக்கு இன்னும் கல்யாணம் ஆகாம இருக்கு. திருமண உதவித் தொகையும் கொடுக்க மாட்டாங்க போலிருக்கு!" எனக் கூறி கவலைப்பட்டார்.

இத்தனை சிரமங்களுக்கு இடையேயும் தமது உழைப்பாலேயே தம் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி விட்டிருக்கிறார்.

"மதம் மனுசனுக்கு வேணும்; அது எதுவா இருந்தாலும் இருக்கட்டும். இத வைச்சு சண்டையோ, அரசியலோ செய்யிறது தப்பு. கலைஞர் இப்பத்தான் சமத்துவபுரம் கட்டியிருக்காரு. நா 1928-லேயே இந்த மாதிரி செஞ்சு இப்ப வரைக்கும் வாழ்ந்துக்கிட்டு இருக்கேன்" என்று பெருமையாகக் கூறினாலும், "இந்தக் கிராமத்து மக்கள் என்னோட கொள்கையைப் பாராட்டுறாங்க. ஆனா யாரும் பின்பற்றலை. இது எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு" என்று வருத்தமும் படுகிறார்.

இப்போது இவருக்கு உடல் ஓய்ந்து விட்டது; கண் மங்கி விட்டது. இவர் விரும்புவதெல்லாம் கலைஞர் கட்டியிருக்கும் திருமங்கலம் அருகிலுள்ள சமத்துவபுரத்தில் தமக்கென்று ஒரு வீடு! சமத்துவத்தையே தன் மதமாகக் கொண்டிருக்கும் இவருக்கு, அரசாங்கம் சமத்துவபுரத்தில் ஒரு வீடு தருமா?

சந்திப்பு : 'கிரண்நியூஸ்'
ப. சரவணன்
படம் : சே. முத்துராஜ்

"தொடக்கத்திலே ஒரு சென்டிமெண்ட். கடைசியிலே ஒரு சென்டிமெண்ட்."

"சத்யராஜ் படத்திலா?"



கல்யாண கலாட்டா

"ஆமாம். ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பை அவர் ஏத்துக்கிறார். இறந்துபோன அவரது அம்மாவின் கண்கள் அந்தக் குடும்பத் தலைவிக்குத்தான் பொருத்தப்பட்டிருக்கு. இது தொடக்கம். க்ளைமாக்ஸில் மனைவியின் பிரசவத்தைக் கண்ணெதிரே பார்க்க வேண்டிய கட்டாயம் வில்லன் ஆனந்தராஜுக்கு. நல்லவனாக மாறி, குஷ்பூவை ஏத்துக்கிறார்."

"படம் முழுநீள காமெடின்னு போஸ்டர் அடிச்சிருக்காங்களே?"

"அதைத்தான் சொல்ல வந்தேன். மேற்படி ஐடியாக்கள் ஓக்கேன்னாலும் ஒரு முழு காமெடிப் படம்கிறதாலே இதெல்லாம் ஒட்டவில்லை."

"என்ன கதை?"

"மிஸ்ஸியம்மா காலத்து முடிச்சு. "திருமணம் ஆனால்தான் வேலை"ன்றாரு முதலாளி மணிவண்ணன். ஸ்டூடியோவிலிருந்து ஏதோ ஒரு பெண்ணின் படத்தைக் காட்டி 'இதுதான் என் செத்துப்போன மனைவி'ங்கறாரு சத்யராஜ். போட்டோவில் இருக்கிற குஷ்பூ அவரிடமே வருகிறார், 'நீதான் என் புருஷன்'னு சொல்லிக்கிட்டு."

"பைத்தியக்காரத்தனமா இருக்கே?"

"கரெக்ட். குஷ்பூ பைத்தியம்தான். பொருத்தமான நடிப்பு! தெருவில் இன்ஸ்பெக்டரிடம் குஷ்பூவைப் "பிரசவத்துக்காக அழைத்துச் செல்வதாக"ப் பொய் சொல்லும் ஸீனிலிருந்து, சந்தனக் கடத்தல் மாறப்பனிடம் அவர்கள் சிக்கும் காட்சி வரை ("என்னய்யா இது, மாறப்பனைப் பார்க்க பால்காரர், தபால்காரர், டாக்டர்- இப்படி போலீஸைத் தவிர எல்லாரும் வராங்களே?" - ஒரு டயலாக்.) கதைக்கு சம்பந்தமே இல்லேன்னாலும் சிரிப்பை வரவழைச்சிருக்காங்க."

"ஹீரோவே காமெடி செய்வதாலே காமெடியன்னு யாரும் இல்லையாக்கும்?"

"எஸ்.வி.சேகர் இருக்கார். டைமிங்கான நகைச்சுவை அவருக்குக் கைவந்த கலைன்றதை நிரூபிக்கிறார். ஆனால் டைரக்டருக்கு அசாத்திய தைரியம். சேகரை ஒரு பாடல்காட்சியிலே ஆடவிட்டிருக்கிறார்!"

"அப்போ காமெடிக்குக் குறைவில்லைன்னு சொல்லு."

"சீரியஸ் ஸீன் ஒண்ணும் உண்டு. தனியார் டி.விக்களின் திரை விமர்சனம் பகுதியை சத்யராஜ் நார்நாராகக் கிழிக்கிறார். "அவனவன் கோடிக்கணக்கில் செலவழிச்சு படமெடுத்தா நீங்க ஏ.ஸி. ரூமிலே உக்காந்துக்கிட்டு குறை சொல்லுவீங்களா? பத்திரிகையிலாவது சினிமா ஒரு பகுதிதான். ஆனா 24 மணி நேரமும் சினிமாவைக் காட்டியே பணம் சம்பாதிக்கும் நீங்க எப்படி சினிமாவை ஒட்டை சொல்லலாம்?"னு ஆவேசம் காட்டுகிறார்.

"அது மட்டுமில்லே. படம் முழுதும் வசந்த மாளிகை, அடிமைப்பெண் வரை கிண்டலடிச்சிருக்காங்க. அதெல்லாம் கூட கோடி கோடியாய் செலவழிச்சு எடுக்கப்பட்ட படங்கள்தானே."

"யுவன் சங்கர் இசை எப்படி?"

"சுகமில்லை. தவிர பாடல்களில் இனிமையையும், சுத்த உச்சரிப்பையும் காணோம்."

"மந்த்ரா எப்படி?"

"அப்போதைக்கு ரசிக்கலாம். நினைத்து மகிழும்படி இல்லை." ●

— ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063. தொலைபேசி : 2376129



ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் **ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்** ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ.	500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.	750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	300/-
ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	40,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை **"ஸ்ரீ சாரதா சக்தி பீடம்"** என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

வருமான வரி விலக்கு **(Section 80 G)** உண்டு

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

